
# கலங்கரை

# 2016



**பிரதேச செயலகம்,**

**காரைநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

# 2016

பிரதேச செயலகம்,

காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | : "கலங்கரை - 2016" |
| வெளியீடு | : பிரதேச செயலகம், காரைநகர் |
| நிதி அனுசரணை | : பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம் |
| இதழாசிரியர் | : ச. தனுஜன், கலாசார உத்தியோகத்தர். |
| பக்கங்கள் | : 80 |
| பிரதிகள் | : 200 |
| பதிப்பகம் | : லக்ஸ்மி டியிற்றல் கலர் லாப் - சங்கானை |

| | |
|---|---|
| Title | : Kalankarai - 2016 |
| Published by | : Divisional Secretariat, Karainagar |
| Sponsored By | : Department of Cultural Affairs, Northern Province. |
| Editor | : S. Thanujan, Cultural Officer. |
| Pages | : 80 |
| No.of copies | : 200 |
| Printers | : Luxmy Digital Colour Lab, Chankanai |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட அராசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தின் தீவகப் பிரதேசத்தில் காரைநகர் பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படும் கலங்கரை – 2016 என்னும் ஆண்டிதழ் சமயம், கலை, இலக்கியம், தொல்லியல், பண்பாடு மற்றும் வரலாறு ஆகியவற்றை ஆவணப்படுத்தும் நன் முயற்சியின் பயனால் அமைகின்றது. இப் பண்பாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் பெருமையடைகின்றேன்.

காரைநகர் பிரதேசம் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நெய்தல் நிலத்தையும், வயல்களையும் தன்னகத்தே கொண்ட சிறப்புமிக்க பிரதேசமாகும். இங்கு ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் ஆலயமும், கோவளம் என்னும் பிரதேசத்தில் 1916 ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற வெளிச்சவீடும் இன்று நூறு வருடங்களைத் தொட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாக திகழ்கின்றது.

இங்கு மக்கள் சிறந்த வர்த்தக நடவடிக்கைகளிலும், கலை பண்பாட்டுப் பாரம்பரியம், நாட்டுக்கூத்து போன்றவற்றிலும் சிறப்பான நிலையில் உள்ளமை நன்கு அறியப்படுகின்றது.

இப்பிரதேச மக்களின் சமய, கலை, இலக்கிய விடயங்களையும், சிறப்பான பாரம்பரிய விழுமியங்களையும் எடுத்துக்கூறும் ஆவணமாக கலங்கரை விளங்கும். இவ் அரிய முயற்சிக்கு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இப் பண்பாட்டு மலர் 'கலங்கரை' சிறக்க என் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நா. வேதநாயகன்,

அரசாங்க அதிபர்,

யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச கீதம்

வாழிய வாழிய வாழியவே – காரை
நகர் என்றும் வளமுடன் வாழியவே!
சூழுக இன்பமும், வெற்றியுமே – மாந்தர்
சொர்க்கம் இம் மண்ணென வாழ்ந்திடவே!

ஈழத்துச் சிதம்பர ஆலயமும் - வாழும்
எண்ணற்ற கோவிலின் அதிசயமும்
கோவளக் கலங்கரை, கசூரினாவும் - சூழ்ந்து
கொழித்திட அலையிடை தவழும் நிலம்!

பெருவயல், கடல்படு திரவியங்கள் - தெங்கு,
பனைவளம், வாணிகம், கைத்தொழில் வகைகள்
பரந்து சென்றுழைப்பவர் இடும் முதல்கள் - காரைப்
பதிதனை வளர்த்திடும் பெரும்பலங்கள்!

கலைஞர்கள், கவிஞர்கள், இசைநிபுணர் - ஞானக்
கல்வியில் சிறந்தவர், உடல் வினைஞர்
தமிழ்ச் சைவந் தளைத்திடத் தமை விதைத்தோர் - தோன்றித்
தனித்துவம், தனிப் புகழ், பொறிக்கும் நகர்

தருமத்தின் விழுமியம் செழிக்கும் பதி – செல்வம்
தடையின்றிப் பெருகிடும் எளிமை மடி!
குறைகளைந் தெழுந்து இங்கொரு உயர்ச்சி - கண்டு எம்
கொடி அசைத்து அடைவோம் நல் அபிவிருத்தி!

ஆக்கம் : கவிஞர் காரை வே. குமாரசுவாமி, கவிஞர் இ.த.ஜெயசீலன்
பாடலுக்கான இசை : திரு. G.A. அற்புதராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



காரைநகர் பிரதேசத்தின் கலை, இலக்கிய, தொல்லியல், பண்பாடு மற்றும் வரலாறு ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் பிரதேச செயலகமும் கலாசாரப்பேரவையும் இணைந்து வருடா வருடம் "கலங்கரை" எனும் பிரதேச மலரினை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் இவ் வருடமும் வெளியிடப்படவுள்ளமைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

காரைநகர் பிரதேசமானது கடல் வளத்தினாலும் வியாபாரத்தினாலும் செழித்தோங்கி விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு தொன்மைகள் மற்றும் இலக்கியப்படைப்புக்கள் முதலான பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடன் வெளியிடப்படுவது பாராட்டத்தக்க விடயம் ஆகும். இந் நூல் மூலம் காரைநகர் பிரதேசத்தின் தொன்மை மற்றும் பண்பாட்டு அம்சங்கள் எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்புச்செய்யப்படுகின்றது என்றால் மிகையாகாது. ஏனெனில் எமது கலை பண்பாட்டு விழுமியங்கள் யாவும் தொடர்ந்து பேணப்படவேண்டியதும், கட்டிக்காக்கப்பட வேண்டியதும் இன்றைய தேவைப்பாடாக உள்ளது. மேலும் இன்றைய காலத்தில் மேலைத்தேய நாட்டுக்கலாசார செல்வாக்கு, கலைகளிலுள்ள ஈடுபாடற்ற தன்மைகள் போன்றன எமது கலை பண்பாட்டு விழுமியங்களில் தாக்கம் செலுத்துவனவாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் இந்நூலானது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு அரிய ஆவணப்பொக்கிஷமாக காணப்படும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இவ்வரிய செயற்பாட்டை முன்னெடுத்துள்ள பிரதேச செயலாளர் உட்பட அனைத்து ஏற்பாட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

திருமதி. வனஜா செல்வரட்ணம்
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் கலங்கரை - 2016 மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை யிட்டு பேருவகையடைகிறேன்.

இப் புண்ணிய பூமியின் நாற்புறங்களிலும் சைவப் பாரம்பரியத்தை பறைசாற்றும் ஆலயங்களும், உல்லாசப் பயணிகளின் வருகையைத் தூண்டும் கோவளம் வெளிச்சவீடு, கசூரினா கடற்கரை என்பனவும் இப் பிரதேசத்தை மேலும் அணி செய்து நிற்கின்றன. இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை விவசாயமும், மீன்பிடியும் மேம்படுத்தி நிற்கின்றன. இம் மக்கள் தமது கலை கலாசார பாரம்பரியங்களைப் பேணுவதிலும் பின்பற்று வதிலும் அன்றிலிருந்து இன்றுவரை தலை சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

ஒவ்வொரு பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களை ஆவணப்படுத்தல் இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது. அந்தவகையில் தமிழுக்காகத் தம்மை அர்ப்பணித்து மறைந்த மற்றும் வாழ்ந்துகொண்டி ருக்கின்ற கல்விப் புலமையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களின் சீரிய பணிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக இம் மலர் அமைகின்றது.

இவ்வாறான ஆவணப்படுத்தல் இப்பிரதேச புலமையாளர்களின் இலக்கிய, கலைப் பணிகளை இக்காலச் சந்ததியினர் மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் முயற்சியாக அமைகிறது. இம் மலரினை அலங்கரிக்க ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு இம்முயற்சி மேலும் உயர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

தே. பாபு
பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவையின் தலைவரும்,
கலாசார அதிகார சபையின் தலைவரும்.
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் குறிப்பு

பாரம்பரிய பெருமைகள் மிக்க காரைநகர் பிரதேசம் தொடர்பான இக் கலங்கரை ஆண்டிதழின் மூன்றாவது வெளியீடாக அமைகின்ற 2016 ஆம் ஆண்டுக்கான மலருக்கு இதழாசிரியராய் இருப்பதையிட்டு நான் பெருமை அடைகின்றேன்.

இக் கலங்கரை ஆண்டிதழானது காரைநகர் மண்ணுக்குப் பெருமை சேர்த்த, சேர்த்துக்கொண்டிருக்கின்ற ஆளுமைகள் தொடர்பான தகவல்களை இக்கால சந்ததியினரும் எதிர்கால சந்ததியினரும் அறிந்துகொள்ளும் விதத்தில் ஆவணப்படுத்தலை மேற்கொள்ள முனைந்துள்ளது.

கடந்த காலங்களில் காரைநகர் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆவணப்படுத்தல் செயற்திட்டங்களில் காரைநகரின் பண்பாட்டு மையங்கள், தொல்பொருட்கள், கலை இலக்கிய மன்றங்கள் மற்றும் நாட்டார் கலைகள் ஆகியன ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சியாக இம் மலரில் பெரியார்கள் பற்றிப் பதிவுசெய்யப்படுகின்றது.

காரைநகரின் அனைத்து ஆளுமைகளையும் இந் நூலில் உள்ளடக்க சாத்தியமில்லாத நிலையில், மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற, மறைந்தும் மறையாத பெரியார்கள் சிலரையும், நம் மத்தியில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மகத்தான கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக சேவகர்கள் சிலரையும் பற்றிய சில தகவல்களை இம்மலரில் ஆவணப்படுத்த முனைந்துள்ளோம். ஆயினும், இதில் அடயாளப்படுத்தப்படாது விடுபட்ட ஆளுமைகள் இன்னும் அதிகமானோர் என்பது உண்மை. எனவே, எதிர்காலத்தில் இக் குறையை நிவர்த்திசெய்யும் முகமாக காரைநகர் பிரதேச புத்திஜீவிகள், எழுத்தாளர்களின் ஒத்துழைப்புடன் அவரகள் தொடர்பான தகவல்களையும் ஆவணப்படுத்தல் அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறான காரைநகரின் ஆளுமைகளை ஆவணப்படுத்தும் செயற்பாடு வித்துவான் F.X.C. நடராசாவின் 'காரை மான்மியம்' தொடக்கம் பல்வேறு அமைப்புகள் தனிநபர்களாலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

இம் மலரில் இடம்பெறும் கட்டுரைகளின் உள்ளடக்கம் அதை ஆக்கியோரின் கருத்துக்களே ஆகும். இதழாசிரியர் என்ற வகையில் இம் மலர் வெளிவர உதவிய கட்டுரையாசிரியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், கலங்கரை – 2016 இதழ் வெளிவர பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பும் ஆலொசனைகளும் வழங்கிய காரைநகர் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்புநொக்கி உதவிய தாயகம் சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான க. தணிகாசலம் ஆகியோருக்கும், இவ் இதழை அச்சிட்ட அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

ச. தனுஜன்,
கலாசார உத்தியோகத்தர்,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. குரு பக்தி - *கலை ஞானச்சுடர் அருளையா நமசிவாயம்பிள்ளை* | 08 |
| 02. கலாநிதி ஆ. தியாகராஜா - *வைத்தியர் திரு S. சுவாமிநாதன்* | 16 |
| 03. மருத்துவத்துறைக்கு மகத்துவம் சேர்த்த வைத்தியகலாநிதி நா. திருஞானசம்பந்தன் - *முருகேசு ரவீந்திரன்* | 20 |
| 04. காரைநகர் தமிழுக்கு அளித்த மகாவித்துவான் F.X.C நடராஜா ஓர் அறிமுகக் குறிப்பு - *குமாரசாமி குமாரதேவன்* | 24 |
| 05. மானிடத்திற்கு ஓர் திறவுகோல் என். சபா - *எஸ். கே. சதாசிவம்* | 28 |
| 06. கலாநிதி கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை - P. *திருஞானசம்பந்தன்* | 35 |
| 07. காரைநகர் படைப்பாளிகளும், அவர் தம் படைப்புக்களும், ஏனைய புலமையாளர்களும். - *S. துஷிகாந்தினி* | 39 |
| 08. காரை மு. மயில்வாகனம் - *கோகிலா கந்தசாமி* | 54 |
| 09. காரையிற் பிறந்தது 'ஈழப்பெரும் பேரிகை' *லெப்ரினன் லி. அனிருத்தன்* | 59 |
| 10. வரலாற்றின் காவலர் கந்தப்பு நடராஜா | 62 |
| 11. மேன்மை மிக்க பிரபு சு. இராசசேகரம் - *உ.இ.ம. இளவரசர் இராஜசேகரம்* | 63 |
| 12. புராணபடன வித்தகர் வேலுப்பிள்ளை நடராஜா | 65 |
| 13. தில்லைநாதன் சண்முகசுந்தரம் | 66 |
| 14. நாடகக் கலைஞர் கணவதி பரமசாமி | 67 |
| 15. கைலாயபிள்ளை திருச்செல்வம் | 68 |
| 16. இலங்கையின் தொழிநுட்பக் கல்வியும் வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக்கழகமும் - *வே. கலாவதி* | 69 |
| 17. உறவுகள் சிறக்கட்டும் - *யோகலட்சுமி சோமசுந்தரம்* | 72 |
| 18. விண்ணிலும் விதைத்திடலாம் - *பொன். சிவாராசசிவம்* | 76 |
| 19. நிலாவின் கவிதை | 78 |
| 20. தென்றல் காற்று | 79 |
| 21. காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையின் - 2016 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபையினர் விபரம் | 80 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பக்தி



*கலை ஞானச்சுடர் அருளையா நமசிவாயம்பிள்ளை ஆசிரியர், காரைநகர்*

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை — *திருக்குறள்*

---

மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் -
மன்னர்க்கு தன்தேசம் அல்லால்
சிறப்பில்லை
கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம்
சிறப்பு — *வாக்குண்டாம்*

---

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிரநிறுத்தல்
அன்னயாவிலும் புண்ணியம்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
- *பாரதி*

தானங்கள் பலவகைப்பட்ட போதிலும் வித்தியாதானம் - கற்பித்தலே சிறந்ததாக கருதப்படுகின்றது. வசதிகள் - வளங்கள் குறைந்த முன்னைய காலத்தில் இரண்டு ஆசான்கள் தம்மை நாள் முழுவதும் அர்ப்பணித்து பரோபகாரமாக எம் ஊரின் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டு இரண்டு பாடசாலைகளில் ஸ்தாபித கால ஆசான்களாக நீண்டகாலம் திகழ்ந்து, வித்தியாதானம் செய்து, இன்று அப் பாடசாலைகளின் முன்றலில் சிலையாக ஜொலித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து இளம் சந்ததியினர் அறியத்தக்கதாக வரலாற்று ஆவணமான "கலங்கரை" காரைநகர் பிரதேச செயலக வருடாந்த மலரிற்கு சமர்ப்பிக்கின்றோம்.

# பெரியார் சயம்புவும் காரைநகரும்



பிறப்பு :- 1866 இறப்பு :- 1938

ஏறத்தாழ 1850 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயர் ஆட்சி அவர்களின் கிறிஸ்தவ மிசனறி — கிறிஸ்தவ தேவாலயங்களையும் சமீபமாக மிசனறி பாடசாலையையும் நிறுவி மாணவர்களுக்கு கல்வி புகட்டுகின்றனர். தேர்ச்சியடைந்தோர் தம் நாமத்தை கிறீஸ்தவ நாமத்திற்கு மாற்றி மதத்தையும் கிறீஸ்தவ மதத்திற்கு மாறினால் உடன் வேலை வாய்ப்பு. கணிசமான சைவ சமய கல்விமான்கள் கிறீஸ்தவத்திற்கு வேலை வாய்ப்பிற்காக மாறுகிறார்கள். இலங்கையின் தென் பகுதி பௌத்த சமயத் தலைவர் அநாகரிகதர்மபால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களுக்கு பௌத்த பாடசாலையில் கல்வி வேண்டுமென்றும், வடபகுதி சைவ காவலன் ஆறுமுக நாவலர் தமிழ் பிள்ளைகளுக்கு சைவ பாடசாலை நிறுவி சைவ சூழலிலேயே கல்வி கற்க வேண்டுமென்றும், சிறிய பெரிய கோவில்களென்ற பாகுபாடின்றி அனைத்து கோவில்களிலும் கந்த புராணம் படிக்க வேண்டுமென்றும் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் பயனாக யாழ்ப்பாணத்தில் சில சைவப்பாடசாலைகள் உருவாகின.

இந் நேரத்தில்தான் மாப்பாணர் புரியில் வாழ்ந்தவரும் தர்ம வள்ளலும் ஆகிய சண்முகம் அருணாசலம் அவர்களின் வழிகாட்டலில் மாப்பாணர் புரியைச் சேர்ந்த கந்தப்பர் இலட்சுமண பிள்ளை மற்றும் சிதம்பரபிள்ளை கந்தப்பு ஆகியோரின் இடையறா முயற்சியினால் வலந்தலையை சேர்ந்த புரவலர் மு. கோவிந்த பிள்ளையின் காணியில் கிடுகினால் வேயப்பட்ட கொட்டகையில் 1988ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் ஆரம்பிக்கப்பட்டதே காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலை. நல்லூர் முத்திரைச் சந்தியடியை சேர்ந்த முத்துசயம்பு அவர்கள் ஆசிரியராகவும் மனேஜராகவும் நியமிக்கப்படுகிறார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் அரச நிர்வாகம், ஆட்சி, சர்வதேச தொடர்புகள் யாவும் ஆங்கில மொழியில்தான். ஆகவே வித்தியா சாலைகளிலும் English medium அனைத்து பாடங்களும் ஆங்கில மொழியில்தான் தமிழ் மொழி, சைவ சமயம் மட்டுமே தமிழ்மொழியில் நடைபெறும்.

காலை வழிபாடு morning assembly அறிவுரை அன்றைய விசேடங்கள் சம்பந்தமான அறிவித்தல்கள் பின்னர் வகுப்பு வந்து நேரசூசி ஒழுங்கின்படி பாடங்கள் நடைபெறும். வித்தியாசாலைக்கென விளையாட்டு மைதானம் இன்மையால், விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் வலந்தலை தச்சன் பனையடி கிராய் சார்பு பிரதேசத்தில் நடைபெறும்.

சத்தியவான் சாவித்திரி

மார்க்கண்டேயர்

மாணிக்கவாசகர் ஆகிய நாடகங்களை பழக்கி நெறிப்படுத்தி மேடையேற்றுவார்களாம்.

சயம்பு என்றால் சிவன் என்பது கருத்து. குருவே சிவம் என்பது திருமூலர் அருள்வாக்கு. சயம்பு ஆசான் தினமும் காலை வேளையில் “கந்தர் அலங்காரம்” பாடி மானதபூஜை செய்து நித்திய கருமங்களை ஆரம்பிப்பாராம். உயர் வகுப்பு மாணவர்களை கட்டாயப்படுத்தி பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சிவன் கோவிலுக்கு அழைத்து தாளங்கள் சகிதம் பண்ணிசையுடன் கூட்டு வழிபாட்டில் ஈடுபடுவாராம். பிரதம நீதியரசர் நமசிவாயம் நடராசாவும் சட்டத்தரணி A. ஆறுமுகமும் இக்கூட்டு வழிபாட்டில் பங்குபற்றுவராம்.

வளங்கள் வசதிகள் இல்லாத காலம் பாடசாலையில் கல்வி புகட்டுவார். விடுமுறை நாள், மாலைநேர மேலதிக வகுப்புகள் இலவசமாக நடாத்துவார். மாப்பாணர் புரியில் உள்ள சயம்பர் இல்லத்தில் இரவில் விளக்கொளியில் மாணவர் கல்வி கற்பர். சில உள்ளூர் வெளியூர் மாணவர்களின் விடுதியாகவும் சயம்பர் வீடு திகழ்ந்தது. நாள் முழுவதும் மாணவர்களை கல்வியில் ஈடுபடுத்தி பரீட்சையில் சித்தியெய்தச்செய்தார். இதன் காரணமாகப் பல மாணவர் ஆங்கிலேய அரசில் உயர் பதவிகளையும் ஏனையோர் நீராவிக் கப்பலில் சிங்கப்பூர், மலேசியா சென்று வேலை வாய்ப்பு பெற்றனர். இங்கனமாக சயம்பு ஆசான் தன்னை முழுமையாக அர்ப்பணித்து 43 வருடமாக ஆசானாகவும் மனேஜராகவும் சேவை ஆற்றி 31.12.1931 இளைப்பாறினார். அவர் மேலும் 7 வருடங்கள் தனது மாப்பாணபுரி இல்லத்தில் வாழ்ந்து அமரரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TO THINE OWN SELF BE TRUE – "நீயே உனக்கு உண்மையாய் இரு" என்பதே பாடசாலையின் மகுட வாசகம். காரைநகர் ஆங்கில வித்தியாசாலை, காரைநகர் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியா சாலை, காரைநகர் இந்துக் கல்லூரி என கால மாற்றத்தோடு வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டாலும் அன்றும் என்றும் "சயம்பு பாடசாலை" என்றே ஊரவர்களின் பேச்சு வழக்கத்திலுள்ளது.

சயம்பரின் சீட்ரும் உயர் நீதிமன்ற நீதியரசருமான அமரர் நமசிவாயம் நடராசா அவர்களின் ஞாபகார்த்தமாக பெரிய நினைவு மண்டபமும் அதனோடு இணைந்த 20 பரப்பு நிலமும் தெற்கே பின்புறமாக 40 பரப்பு விளையாட்டு நிலமும் 1950 ஆண்டு தர்மபத்தினி தங்கம்மா நடராசாவினால் உபகரிக்கப்பட்டது.

1959ஆம் ஆண்டு மேல் மாடியுடன் கூடிய சயம்பு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு நீண்ட மாடிக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களால் 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் மாடியுடன் கூடிய மண்டபம் சயம்பர் சிலையின் பின்னே திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியில் அதிபராக கடமை ஆற்றியோர் விபரம்:-

திரு முத்து சயம்பு

திரு வீ. தர்மசீலன்

திரு ஈ. கே. சிவசுப்பிரமணியஐயர்

திரு செ. சுந்தரம்பிள்ளை

திரு எஸ். இராமகிருஸ்ணஐயர்

திரு எஸ். பத்மநாதன்

திரு பொ. வேலுப்பிள்ளை

திரு மு. நீலகண்டசிவம்

திரு ந. கந்தையா

திரு எஸ். ஆர். எஸ். தேவதாசன்

திரு அ. சீதாராமஐயர்

திருமதி தே. பாலசிங்கம்

திரு அ. சரவணமுத்து

பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை

திரு கே. எஸ். இராசரத்தினம்

திரு கா. குமாரவேலு

திரு ஏ. கனகசபை

திரு ஆ. குமரேசமூர்த்தி

திரு ஆ. தியாகராசா

திருமதி A. ஸ்ரீஸ்கந்தராசா

திரு பி. எஸ். குமாரசுவாமி

திரு பொ. சிவானந்தராசா

திரு ஆ. நடராசா

திருமதி வா. தவபாலன்

திரு கே. சுப்பிரமணியம்

திருமதி க. சிவனேசன் (தற்போது)

திரு கே. கே. நடராசா

இப்படியாக ஆசிரியர் வளம், பௌதீக வளம் ஏனைய வளங்களோடு படிப்படியாக வளர்ந்து வரும் கலைக்கூடம் 1991ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவினைக் கொண்டா டியது. சயம்பு ஆசானின் இரண்டு பிள்ளைகளான கனகம்மா, தங்கம்மா இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து மாப்பாணர்புரியில் அவர்களது முன்னைய வாழ்விடத்திற்கு அயலார் வீடுகளில் பத்து நாட்கள் வரை தங்கியிருந்து நூற்றாண்டு நிகழ்வுகளில் பங்கேற்றுச் சென்றது பாடசாலை சமூகத்தினருக்கு பெரும் கௌரவமாகும்.


2013ஆம் ஆண்டில் 125 ஆம் ஆண்டு விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இன்று தீவக வலயத்தில் முதற்தர பாடசாலையாக போற்றப்படுகிறது. மாணவர் தொகை, ஆசிரியர் வளம் கூடும் பட்சத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாடசாலையாக உருவாகும் வாய்ப்பு உள்ளது.

சயம்பு பாடசாலை ஆரம்பிப்பதில் முன்னின்றவர்களின் வழித்தோன்றலும் பின்னைய நாளில் சயம்பு பாடசாலையின் உப அதிபருமான கவிஞர் சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் தமது நிதி பங்களிப்புடன் இருக்கை நிலையில் சயம்பு சிலை அமைத்து மேல் மணிமண்டபமும் ஸ்தாபித்து 27.09.1976 அன்று திறப்பு விழா செய்து கௌரவித்துள்ளார். இதுவே காரைநகரில் அமைக்கப்பட்ட முதல் சிலை அத்தோடு சிலை பக்கமாக செல்லும் வீதியினை கிராமச் சபையினர் சயம்பு வீதியெனப் பெயரிட்டு பெயர்ப் பலகை நாட்டி வருங்கால சந்ததியினர் அவரது அர்ப்பணிப்பான சேவையினை உணர வைத்துள்ளனர்.

*காரைநகர் இந்துக்கல்லூரி முற்றலில் சயம்பு சிலை*



மேற்படி ஆய்வில் காணப்பட்ட மேலதிக விடயங்கள்:-

**1.** கந்தப்பர் இலட்சுமணரின் மனைவி கந்தர் மடம் பகுதியை சேர்ந்தவர். இவவினது மூத்த சகோதரன் முத்து. நல்லூர் முத்திரைச் சந்தியடியை சேர்ந்தவர் முத்துவின் மகனே சயம்பு நல்லூர் முத்திரைச் சந்தியடியார் மாப்பாணர் முதலிகள் வம்சத்தினர். இவர்களில் சிலர் மாப்பாணர்புரியில் விவாக சம்பந்தம் செய்து வாழ்ந்ததினால் இவ்விடம் மாப்பாணர் + புரி மாப்பாணர்புரி என அழைக்கப்படுகிறது. (புரி என்றால் ஊர்) மாப்பாணர்புரி மாப்பாணவூரி இன்றைய மருஉமொழி

**2.** சயம்பர் காலத்தில் மாணவர்களுக்கு கல்வியும், இறை வழிபாடும் பிரதானம். வெள்ளிக் கிழமைகளில் சிவன் கோவிலுக்கு சமீபமாகவுள்ள உயர் வகுப்பு மாணவர்கள் அதிகாலை வேளையில் கோவில் தரிசனம் செய்தே பாடசாலை வரவேண்டும் என்பது நியதி. இது போன்று களபூமி, பாலாவோடை மாணவர்கள் தமக்கு சமீபமாகவுள்ள கோவிலில் வழிபாடு செய்தே வரவேண்டும் என்பதும் வேண்டு கோள். ஒரு முறை வெள்ளிக்கிழமை அன்று கோவில் போய் வருவது போன்று வீபூதி, சந்தணம் தரித்து காதுகளில் பூவைத்து பாடசாலை வருகிறார்கள். குருவுக்கு தன் மாணவர்களின் செயல்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் இவர்களது குறும்புத் தனத்தை சோதிக்க எண்ணினார். அடுத்த வெள்ளிக்கிழமை யாரும் அறியாமல் மொந்திப்புலம் வயல் வரம்பு பாதையூடாக அதிகாலை வேளை களபூமி கோவிலை சென்டறடைந்தார். அங்கு எவருமில்லை. 7.30 மணியளவில் பூசகர் கோவிலுக்கு வந்தார். இவ்விடத்தில் பாடசாலை செல்லும் மாணவர் இல்லையா? அவர்கள் வெள்ளிக்கிழமை காலை வேளையில் கோவிலுக்கு வருவதி ல்லையா? பாடசாலை செல்லும் மாணவர் இருக்கிறார்கள் சில சமயம் சாயந்தர பூஜைக்கு வருவதுண்டு. திருவிழாவென்றால் நிட்சயம் வருவார்கள் என்றார் பூசகர். கோவிலுக்கு போகாது வேஷம் போடுகிறார்களோ? காலை 7.30 கோவில் திறந்தால் எப்படி வழிபாடு செய்து பாடசாலை வருவது? என்ற சந்தேகங்களுடன் வந்த வழியே பாடசாலை திரும்பினார் சயம்பு ஆசான். வழியில் வயலோரம் மாணவர்கள் தரித்து நின்று வீபூதி, சந்தணம் பூசுவதை கண்ணுற்றார். சயம்பு ஆசானது வருகையைக் கண்ட மாணவர்கள் அதிர்ச்சியுற்று ஓட்டமும் நடையுமாக பாடசாலை வந்தனர். அன்றைய காலைப் பிரார்த்தனை முடிய கோவில் செல்லாது வீபூதி, சந்தணம் சூடிய மாணவர்களை வணங்குகின்றேன் எனக் கைகூப்பி வணங்கினார் ஆசான். தம்மை குரு வழிபடுகின்றாரே என்ற தண்டனை அவர்களை அன்று முதல் திருத்தி நியமமாக கோவில் வழிபாட்டை மேற்கொள்ளச் செய்தது.

3. 1945ஆம் ஆண்டு சுயபாஷை கல்வித்திட்டம் - தாய்மொழிக்கல்வி அரிவரியில் இருந்து வருடம் ஒவ்வொரு வகுப்பாக அறிமுகமாகியது. அனைவருக்கும் இலவசக் கல்வித் திட்டம் முன்மொழியப்பட்டது. 1960-62 ஆண்டளவில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது.

# கார்த்திகேசு உபாத்தியாயர்



பிறப்பு:- 1895 இறப்பு:- 1969

காரைநகரில் சாமி பள்ளிக்கூடம் -Junior English school, பழைய டிஸ்பென்சறியடி திருஞான சம்பந்தர் ஆங்கில வித்தியாசாலை – சயம்பு பள்ளிக்கூடம் ஆகிய ஆங்கில வித்தியாசாலைகள் இரண்டும் மற்றைய அமெரிக்கன் மிசனறி ஆரம்ப பாடசாலைகளும் இயங்குகின்றன. களபூமி மாணவர்களை பொறுத்த வரையில் கிழுவனை ஆலடியில் அப்புத்துரைச் சட்டம்பியார் கிறீஸ்தவ மிசனறி பாடசாலையும், தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் பாடசாலையும் ஆரம்பப் பாடசாலையும் மட்டுமே உள்ளன. தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தமது பெயரையும் மாற்றி கிறீஸ்து மதத்திற்கு மாறினால் உடன் வேலைவாய்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான சூழ்நிலையில்தான்

வேலுப்பிள்ளை முருகேசு – கோவளம்
பேப்பர் சாமியார்
கணபதிப்பிள்ளை பரமனாதி
வள்ளி சுப்பர் – contractor
கந்தர் சுப்பிரமணியம்
ஆறுமுகம் சங்கரப்பிள்ளை – Time of Ceylon

ஆகிய பல பெரியோர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்து 1927/1928 ஆண்டில் நந்தாவில் என்ற குறிச்சியில் 6 பரப்பு காணி முருகேசு காசிநாதன் என்பவரிடம் உபகாரம் பெற்று கட்டிடம் அமைத்து "சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாசாலை" ஆரம்பிக்கப்பட்டது. அவ்வூரவரும், மாத்தறையில் கற்பித்துக் கொண்டிருந்தவருமான முருகேசு கார்த்திகேசு உபாத்தியாயரை அழைத்து வந்து தலைமை ஆசிரியராக (HEAD MASTER) நியமித்தனர். ஆற்றல் ஆளுமையுடையவர், ஆங்கில புலமையுடையவர், தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவசமயம், கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம் ஆகிய அனைத்துப் பாடங்களையும் சிறப்பாகக் கற்பிக்கக்கூடிய பயிற்சி பெற்ற ஆசான். அரிவரி தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரை (1,2,3,4,5,6,7,8,9) தமிழ் S.S.C வரை ஒன்பது வகுப்புக்கள் நடைபெற்றன. பாடசாலை நேரம் தவிர்ந்த மாலைநேரம், விடுமுறை நாள் வகுப்புக்களும் மேலதிகமாக நடாத்தினார். இரவில் கரப்பிட்டியந்தனையில் உள்ள தனது வீட்டிற்கு J.S.C, S.S.C மாணவர்களை அழைத்து மண்ணெண்ணை விளக்கொளியில் மேலதிக வேதனம் எதுவுமின்றி போதனைகள் நடாத்தினார். இவரிடம் கல்வி பயில்கின்றவர்கள் கூடிய விகிதம் பரீட்சையில் சித்தியடைகின்றனர் என்ற நிலைமை உருவாகியது.

"மரம் பழுத்தால் வௌவாலை
வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாரும் அங்கில்லை
சுரந்து அமுதம் கற்றா தரல்போல்
கரவாது அளிப்பரேல் உற்றார்
உலகத்தவர்"

– *ஔவை (நல்வழி)*

சமகாலத்தில் வியாவில் சைவ வித்தியாசாலை, சக்கலாவோடை சுப்பிரமணியம் வித்தியாசாலை ஆகிய இரண்டு கல்விக் கூடங்களிலும் தமிழ் S.S.C வகுப்புக்கள் நடைபெற்றன. இருந்தும் மாணவர்கள் வலந்தலை, இலகடி, மொந்திப்புலம், சிதம்பராமூர்த்தி கேணியடி, பயரிக்கூடல், ஆயிலி, தங்கோடை, கருங்காலி, பலகாடு ஆகிய இடங்களில் இருந்து வந்து சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியா சாலையில் இணைந்து கார்த்திகேசு உபாத்தியாயரிடம் கல்வி கற்று S.S.C பரீட்சையில் சித்தியெய்தி தராதரப் பத்திர ஆசிரியர்களாகவும், அரச சேவையாளர்களாகவும் பிரபல வர்த்தகர் களாகவும் துலங்கினர்.

இவர் காலத்தில் பூதத்தம்பி, ஸ்ரீவள்ளி, அரிச்சந்திரன் போன்ற நாடகங்கள் பாடசாலையில் மேடை ஏற்றப்பட்டனவாம். வாராந்தம் வெள்ளிக்கிழமைதோறும் விசேட பூஜை வழிபாட்டுடன் ஐப்பசி மாதத்தில் நவராத்திரி விழா - விஜயதசமி, வருடாந்தம் ஆடிமாத சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை என்பன விமரிசையாகக் கொண்டாடப்பட்டு அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்படுமாம். இப்படி சிறப்பாக இயங்கும் பாடசாலை "நல்லன கல் நன்னெறி நில்" என்னும் மகுட வாசகத்துடன் திகழ்கின்றது. அரசினர் கொள்கைப்படி 1972ஆம் ஆண்டு ஆலடி அமெரிக்கன் மிசனறி பாடசாலையும் இதன் கனிஸ்ட பிரிவாக இணைக்கப்பட்டு இயங்குகின்றது. நடராசா மன்று - Open air theatre விளையாட்டு மைதானம், விஞ்ஞான கூடம், சமையல் கூடம், சுற்று மதில் போன்ற பௌதீக வளங்களுடன் வளர்ச்சியடைந்து அடுத்த தசாப்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் "நூற்றாண்டு விழா" நோக்குகின்றது. முருகனுக்கு மறுபெயர் கார்த்திகேசு, தமிழ் வளர்த்த தெய்வம். கார்த்திகேசு உபாத்தியாயரும் தன்னை முழுநேரமும் அர்ப்பணித்து வித்தியா தானம் செய்தவர். 1928 ஆம் ஆண்டு தொடக்கம் 1956 ஆம் ஆண்டு வரை 28 வருடங்கள் வித்தியாபணி செய்து மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்து விட்டார். கார்த்திகேசு உபாத்தியாயர் காலத்தில் கல்வி கற்றவரும், மாணவ முதல்வனாக திகழ்ந்தவரும், உபாத்தியாயரின் மருமகனும், கொம்பாவோடையை வசிப்பிடமாகக் கொண்டவரும், நுகேகொடவில் பிரபல வர்த்தகராக திகழ்ந்து ஓய்வுபெற்று தற்போது பற்பல சைவ சமூகத் தொண்டு புரிந்து வருபவருமான கந்தையா ஆறுமுகம் தனது குரு கார்த்திகேசு உபாத்தியாயர் என்றும், எழுத்தறிவித்தவன் இறைவ னென்றும் சிந்தை கொண்டு 2001ஆம் ஆண்டு மேற்படி பாடசாலை பழைய மாணவர்களிடமும் நிதி சேகரித்து தாமும் மிகுதி செலவினை பொறுப்பேற்று பாடசாலை முகப்பில் நிற்கும் நிலையில் சிலையையும் மேல் மணி மண்டபமும் அமைத்து, சிறப்பாக திறப்பு விழா செய்வித்து கௌரவம் செய்து அவரது பணியை அனைவரும் நினைவுகூர வைத்துள்ளார்.

காரைநகர் பிரதேச சபையினர் கரப்பிட்டியந்தனையில் அவர் வாழ்ந்த 250மீற்றர் நீளமான வீதியினை "கார்த்திகேசு உபாத்தியாயர் வீதி" எனப் பெயர் சூட்டிப் பெயர் பலகை நாட்டி அன்னாரின் சேவையினை புனிதப்படுத்தியுள்ளனர்.

*சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை முன்றலில் கார்த்திகேசு உபாத்தியாயர் உருவச்சிலை*



மேற்படி ஆய்வில் மேலும் சில தகவல்கள் :-

1. 1927 ஆம் ஆண்டுக்கு முன்னர் விளானையில் வசித்த ஞானியார் தில்லையம்பலம் என்ற சைவக்குரு தமது வீட்டில் திண்ணைப் பள்ளி அமைத்துக் கல்வி புகட்டி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கார்த்திகேசு உபாத்தியாயரின் உத்தம சீடரில் ஒருவர் விளானையை சேர்ந்த கதிரவேலு தில்லையம்பலம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி இன்று ஓய்வு நிலையில் சைவப்பணி – சமூகப்பணி செய்து வருகின்றார்.

3. கார்த்திகேசு உபாத்தியாயரின் புதல்வர்கள் : இராசலட்சுமி, தங்கம்மா, மனோன்மணி, ருக்குமணி, செந்தில் நாதன், பத்மலோசினி ஆக அறுவர். பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் அனேகர் இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் பரந்து சிறப்பாக வாழ்கின்றனர்.

4. சுந்தரமூர்த்தி வித்தியாசாலையின் மனேஜர் பதவி : முதலாவது கந்தர் சுப்பிரமணியம், இரண்டாவது ஆறுமுகம் சங்கரப்பிள்ளை, மூன்றாவது பரமு சபாரத்தினம் ஆகியோர் வகித்து 1961 -1962 காலப்பகுதியில் அரசாங்க பாடசாலையாக மாறியது.

5. அங்கு அதிபர்களாக கடமை ஆற்றியோர் விபரம்:

திரு மு. கார்த்திகேசு
திருமதி த. மனோன்மணி
திரு வை. இராமலிங்கம்
திரு S.R.S. தேவதாசன்
திருமதி வி. பாக்கியம்
திரு S.K. சதாசிவம்
திருமதி பெஞ்சமின்
திருமதி கா. கமலாதேவி
திருமதி சி. கந்தையா
திரு ஆ. பாலகிருஸ்ணன்
திரு க. சுப்பையா
திரு சு. கணேசமூர்த்தி
திரு வி. சோமசுந்தரம்
திரு அ. சாந்தகுமார் (தற்போது)

6. பாடசாலை அமைந்துள்ள குறுச்சி – நந்தாவில். சுவர்க்க லோகத்தில் சங்கரன் ஸ்நானம் செய்யும் வாவியின் பெயர். பண்டைய அறிஞர்களால் சூட்டப்பட்டிருக்கலாம். இப்படி - ல் - முடிபாக வரும் வியாவில், விக்காவில், கொதிராவில் ஆகிய கிராமங்களின் பெயர்க்காரணம்? ஒருவேளை புராதன ஆட்சியாளர்கள் போர்த்துக்கேசர் அல்லது ஒல்லாந்தர் மொழிப் பெயர்களாகவும் இருக்கலாம்.

காரைநகரில் ஆரம்பகாலத்தில் கல்விப்பணி - சமயப்பணி அர்ப்பணிப் புடன் செய்த ஆசான்களை நாம் போற்றி நினைவு கூருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி ஆ. தியாகராஜா

*வைத்தியர் திரு S. சுவாமிநாதன்*



காரைநகர் இந்துக் கல்லூரியில் 1943ஆம் ஆண்டு முதல் ஆசிரியராகவும் 1946ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரை அதிபராகவும் போற்றத் தக்க முறையில் சேவையாற்றிய கலாநிதி ஆ. தியாகராஜாவைப் பற்றி கலங்கரை மலரில், நான் அப் பெரியாரைப் பற்றி கேட்டதை அறிந்ததை எழுதுவதில் சந்தோசமடைகிறேன்.

MA.M.Litt, P.h.D கல்வித் தகைமைகளைக் கொண்ட கலாநிதி ஆ. தியாகராஜா அவர்கள் கர்நாடக சங்கீதம் உதைபந்தாட்டம் மல்யுத்தம் போன்ற வற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

கிடுகினால் வேயப்பட்ட கூரையும் பன்னாங்குகளினால் கட்டப்பட்ட சுவர்க ளையும் கொண்டிருந்த எட்டு வகுப்பறை களுக்குப் பதிலாக மாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு, கலாநிதி தியாகராஜா அவர்கள் மலேசியா நாட்டிலுள்ள பல ஊர்களுக்கு சென்று நிதி சேகரித்து, சிக்கனமான முறையில் கட்டடத்தை அமைத்து திறப்பு விழாவிற்கு கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து, இறைவணக்கம் செய்து, ஆசிரியை கமலாவதி கட்டிடத்தினுள் கொண்டு செல்ல சிக்கனமாக இனிது நிறை வேறியது.

தற்பொழுது போல் U.K. போன்ற நாடுகளில் நிதி சேகரிப்பதற்கு சாத்திய நிலை இல்லாத அக்காலத்தில் மலேசியாவிலும் போக்குவரத்து வசதி குறைவாகத்தான் இருந்தது. பெருந் தெருக்கள் (High Ways) குறைவு. எம்மவரும் பரந்து பல ஊர்களிலும் வாழ்ந்தனர். சிலர் வாழ்ந்த ஊர்கள் தாய்லாந்து எல்லைக்கு கிட்டவாக இருந்தன.

இவர் பொறுப்பேற்ற பொழுது "ப" வடிவில் கல்லூரியின் வடக்குப் பகுதியில் இருந்த அறைகளில் சில நிலத்திற்கு மாத்திரம் சீமெந்து போடப்பட்ட நிலையில் இருந்தன. இவற்றில் சில அறைகளில் இரசாயனம், பௌதீகம், தாவரவியல், விலங்கியல் பாடங்களுக்கு ஆய்வு கூடங்கள், புவியியல் அறை, நூல் நிலையம் என்பவற்றை அமைத்தார். இப்படியான வசதிகள் இருந்த படியால் 1963ஆம் ஆண்டு பல்கலைக்கழக புகுமுக பரீட்சைக்கு தோற்றிய ஒரு மாணவன் விவசாய பீடத்திற்கு அல்லது விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டான்.

இவர் காலத்தில் இக் கல்லூரியில் பெரிய கட்டடமாக விளங்கும் நடராஜா ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டது. திருமதி நடராஜா அன்பளிப்பு செய்த காணியுடன் சுகாதார திணைக்களத்தின் மூலமாக பெறப்பட்ட காரைநகர் அரசினர் வைத்தியசாலைக் காணியையும் சேர்த்து கல்லூரி மைதானத்தை அமைத்தார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று, விளையாட்டுப் போட்டி உதைபந்தாட்டப் பயிற்சி போட்டி என்பவற்றைத் தச்சன்பனை என்னும் இடத்தில் நடத்தும் சிரமம் நீங்கியது. கல்லூரி இல்லங்களுக்கு நடராஜா அவர்களின் பெயரையும் சயம்பு அவர்களின் பெயரையும் இட்டார்.

மகாத்மா காந்தி, பாரதியார் போன்ற பெரியார்களின் ஞாபகார்த்த விழாக்களை நடத்தி, அப் பெரியார்களின் பெருமைகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார். எல்லா விழாக்களிலும் கர்நாடக இசைப் பாடல்களை இடம்பெறச் செய்தார். அரிய பொக்கிஷமான கர்நாடக இசையை ஒரு சிலர் அல்லாமல் எல்லோரும் பயின்று நன்மையும் பெருமையும் பெற வேண்டும் என்பது இவரது அவா. அவர் மாணவர்கள் தெய்வ பக்தியும் நல்லொழுக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்துடையவர். எல்லாத் தெய்வங்களிலும் பக்தி கொண்டிருந்தாலும் மணற்காட்டு முத்துமாரி அம்பாளில் அதிக பக்தி உடையவர்.

எல்லா மாணவர்களும் கல்வியில் முன்னேற வேண்டுமென்ற அவாக் கொண்டவர் கலாநிதி தியாகராஜா. கல்வியில் பின்தங்கிய மாணவர்களின் வீடுகளுக்கு சிதம்பரப் பிள்ளை உபாத்தியாரையும், நாகலிங்கம் உபாத்தியாரையும் அனுப்பி, அம் மாணவர்கள் இரவில் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருகிறார்கள், எத்தனை மணி வரையும் படிக்கின்றார்கள், காலையில் எத்தனை மணிக்கு நித்திரை விட்டு எழுகின்றார்கள் என்று விசாரித்து அறிவார். இதேபோல் விளையாட்டிலும் எல்லா மாணவர்களும் பங்குகொள்ள வேண்டுமெனக் கூறுவார். விளையாட்டுக் களில் திறமை காட்டுவார்கள் என எதிர்பாராத பல மாணவர்கள் இவரது முயற்சியால் விளையாட்டுக்களில் பிரகாசித்தார்கள். 1952ஆம் ஆண்டு காரைநகர் இந்துக் கல்லூரி JSSA வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. தலைநகரத்திலிருந்து டயான வாகனம் வந்தவுடன் விளையாட்டு ஆசிரியர், இல்லத் தலைவர்கள் உதைபந்தாட்டக் குழுத் தலைவர்களுடன் ஆலோசித்து தேவையான உபகரணங்கள் விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றை வாங்கிக் கொள்வார். காரைநகர் கல்வியில் முன்னேறியதற்கு இவரே பிரதான காரணமாவார். ஒழுக்க சீலராக இருந்தபடியால் "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது போல் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒழுக்க சீலர்களாக விளங்கினர்.

கல்லூரிக் கூரையில் ஒழுக்கு என்று வீட்டிலிருந்த ஓடுகளை தானே எடுத்து வந்து போடுவித்தவர். இரவு வகுப்பிற்கு வீடடிலிருந்த Petromax ஐ கொண்டு வந்த பொழுது ஏன் Sir? என கேட்டபோது, வீட்டிற்கு Hurricane Lamp போதுமென்றார். இப்படியான, மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டவர்களை இன்று காண்பது அரிது.

அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் காலம் அண்மித்தும் பழைய மாணவர்களைப் பற்றிய சிந்தனை எழுந்தது. ஒவ்வொரு நாளும் பின்னேரத்தில் வலந்தலைச் சந்திக்கு வருவார். அவரின் VOLKWAGON சத்தத்தை கேட்டு ஒழுங்கைக்குள் சென்று மறையும் மாணவர்கள் இப்பொழுது DR. தியாகராஜாவை எதிர்பார்த்திருக்கின்றனர்.

பொன்னாலையில் துவிச்சக்கர வண்டி தொழிற்சாலை, VERNON அணைக்கட்டு, கால்நடைகளுக்கு மேயச்சல் நிலம், நன்னீர்த் திட்டம், பொன்னாலைக் கடலில் மீன் வளர்ப்புத் திட்டம் என்பன பற்றி மாணவர்களுடன் உரையாடுவார். படித்த வாலிபர்களுக்கு விவசாய நிலம் பெற்றுக் கொடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களுக்குச் சென்று, பின்பு வவுனியா அரசாங்க அதிபரையும் சந்தித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் அரசாங்க சார்பான பராளுமன்ற உறுப்பினரான திரு. சிவ சிதம்பரத்தையும் சந்தித்து இது பற்றி பேசினார்.

தேர்தல் வந்தது. G.G. பொன்னம்பலம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு அவரது கட்சி சார்பில் போட்டியிட ஒரு வேட்பாளரைத் தேடிக் கொண்டிருந்தபொழுது இவர் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தலைவரிடம் இருந்து பணத்தை எதிர்பாக்காமல் தனக்கு தெரிந்த அவரது அபிமானிகளுகக் அறிவித்தார். அவர்கள் இவருக்கு கணிசமான பண உதவி செய்தார்கள். இவரது கூட்டங்கள் ஊர்வலங்களை சிக்கனமாகச் செய்யச் சொல்லி வலியுறுத்தியும் இவரது மாணாக்கர்கள் அபிமானிகள் அதனைக் கேட்கவில்லை. அதிகமான ஊர்வலங்கள் கூட்டங்கள் அபிமானிகளால் இலவச உதவிகள் பெற்று நடாத்தப்பட்டன. தற்காலத்தில் நடாத்தப்படும் அரசியல் கூட்டங்களில் போல POP இசை போன்றவை கிடையாது. இன்றும் எங்கள் கண்முன் நிற்பது அவரது வைரவிழா. இது அவர்மேல் எம் மக்கள் கொண்டிருந்த மரியாதையையும் அபிமானத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

மத்தியானத்திற்கு சிறிது நேரம் செல்ல ஆரம்பமான ஊர்வலம் காரை பிரதான வீதியைச் சுற்றி கல்லூரி மைதானத்தை அடைய சூரிய அஸ்தமானமாகி விட்டது. வீதி முழுதும் மாவிலை தோரணம், மலர் மாலை நிறைகுடங்கள் கலந்து கொண்டோருக்கு கரை கடந்த உற்சாகம். அவரது அயல் குறிச்சியான சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்தவர்களால் இலவசமாக செய்யப்பட்ட குதிரை ஆட்டம், மயிலாட்டம் என்பன ஊர்வலத்தை மேலும் அமர்க்களப் படுத்தியது. ஏராளமான மாட்டு வண்டிகள் துவிச்சக்கர வண்டிகள் கலந்து கொண்டன. இந்த ஊர்வலத்தை தற்காலத்தில் செய்வது போல VIDEO எடுத்திருந்தால் இன்றைய இளைஞர்களும் ஏனையோரும் Dr.தியாகராஜாவின் பெருமையையும் செல்வாக்கையும் அறிந்திருப்பர். கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் காலத்தில் அவர்கள் ஆக்கிய பாடல்களை ஒலிப்பதிவு செய்ய வசதிகள் இல்லாததால் அவர்கள் தங்கள் சிஷ்யர்களைக் கொண்டு இப் பாடல்களின் ராக தாளங்களை அவர்களின் மனதில் பதிய வைத்து நிலைக்கச் செய்தார்கள். தற்பொழுது நாங்கள் அந்த இசைச் செல்வங்களை கேட்டு அனுபவிக்கின்றோம்.

இவர் அமைச்சர் செல்லையா குமாரசூரியருடன் சேர்ந்து தனது தொகுதி மக்களுக்கு மாத்திரமன்றி வேறு தேர்தல் தொகுதி மக்களுக்கும் உத்தியோகம் வேலைவாய்ப்பு அடிப்படை வசதி போன்ற நன்மைகளை ஏற்படுத்தி கொடுத்தார். இதற்காக ஒருவித இலாபத்தையும் அவருக்காகப் பெற்று கொள்ளவில்லை. பிரயாணத்திற்கு அவரது மைத்துனரால் அன்பளிக்கப்பட்ட வாகனத்தைத்தான் பயன்படுத்தினார். தலைநகரத்தில் அவரின் உறைவிடமாகவும் கந்தோராகவும் மைத்துனரின் வீட்டைத்தான் உபயோகித்தார். இவரது தேர்தல் கூட்டத்திற்கு அவரது அபிமானிகளின் வாகனங்கள் பாவிக்கப் பட்டன. அவரது வைரவிழா கூட்டத்தின் போது அவரின் அயலவரும் சொந்தக் காரருமான காசிப்பிள்ளை அவர்கள் ஒரு அவரச தேவைக்காக பத்து நிமிடங்களில் காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் சென்றார் என்று கூறுவர்.

எல்லோரும் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். அந்தக் காலத்தில் மலை நாட்டிலிருந்து வந்து வீட்டு வேலை செய்துகொண்டே சிறுவர்கள் கல்வி கற்க வருவதுண்டு. அப்படி கல்வி பயின்ற பெரியசாமி என்னும் மாணவனின் திறமையைக் கண்ட தியாகராஜா ஐயா அந்த மாணவன் இருந்த வீட்டுக்காரரை அணுகி அவரின் கல்வியில் கூடிய அக்கறை எடுக்கச் செய்து அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் உள்ள ஒரு கல்லூரிக்கு அனுப்ப வழி வகுத்தார்.

இன்று கல்லூரிகளில் ஆய்வுகூட வசதி மற்றும் ஏனைய வசதிகளும் இருக்கும் பொழுது மாணவர்கள் சப்புப் பலகை வாங்குகளில் இருந்து தனியார் கல்வி நிலையங்களில் கற்கத் தூண்டப்படு கிறார்கள். பின்பு கல்வி முன்னேற வில்லை சமயப் பற்று இல்லை என்று கூச்சல் இடுகிறார்கள். Dr. தியாகராஜாவின் காலத்தில் கிருபானந்த வாரியாரின் பிரசங்கம் கல்லூரி மைதானத்திலும், முருகானந்த வாரியார் திரு. சசி லோகநாதன் ஆகியோரின் நிகழ்சிகள் நடராஜா மண்டபத்திலும் சிறப்பாக நடந்தன. மேலும் ஒவ்வொரு ஆண்டும் நடந்த கலை விழா 1957ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கு 1958 இனக்கலவரம் என்பவற்றால் நிறுத்தப் பட்டது. சமய சரித்திரப் பாடல்களை மாணவர்கள் பார்த்து ரசிப்பதை விரும்பினார். ஒரு சமயம் இந்தியாவி லிருந்து வந்த ஒரு சுவாமியின் நிகழ்ச்சி ஒன்று வண்ணார்பண்ணை வைத்தீஸ் வராக் கல்லூரியில் நடந்து முடிந்த பின், நிகழ்ச்சிக்கு சென்ற இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களை அப்பொழுது திரையிடப்பட்டிருந்த வீர பாண்டிய கட்டப் பொம்மன் என்ற சரித்திரப் படத்தைப் பார்த்து வருமாறு கூறினார்.

கல்வி கற்கும் பெண்பிள்ளைகள் வயது வந்ததும் யாழ் நகர்ப் பாடசாலைகளுக்கு அனுப்பும் வழக்கம் அக் காலத்தில் இருந்தது. திருமணப் பேச்சு வந்தால் யாழ் பாடசாலையில் கல்வி கற்றவர் என்று கூறுவதற்கு. இது போல வசதிக் கட்ணத்தை எவ்வளவு குறைத்தாலும் வசதி படைத்த சிலர் இன்னும் குறைக்கச் சொல்லி தர்க்கம் செய்வார்கள். கல்லூரியில் படிக்கும் அநேகமான மாணவர்களின் வசதி நிலைமை என்பவற்றை நன்கு அறிந்த இவருக்கு பெற்றோர் நேரடியாகக் கூறாது சுற்றி வளைத்துக் கூறுவதை விரும்பாமல் அவர்களைக் கடிந்து கொள்ளும் வழக்கம் ஒரு சில வேளைகளில் இருந்ததாகக் கூறுவர்.

ஒரு நாள் விடியற்காலையில் தனது வாகனத்தில் சிநேகிதன் PROCTOR இராசையாவிடம் சென்று திரும்பும் பொழுது ஒரு முதாட்டி வாகனத்திற்கு குறுக்கே வந்து விட்டார். இவர் ‘என்ன நாட்டியம் ஆடுகிறாய்’ என்று கூற “நீ விடியற்காலை இப்படி ஓடிக்கொண்டு வருவாய் என்று கண்டேனா’’ என்று முதாட்டி கூறினார். தன்னில் தான் பிழை என்று உணர்ந்து அதிபர் ஒன்றும் போசாமல் போய்விட்டார். வேதரடைப்பு வடகாடு மல்லிகை குறிச்சி மாணவர் யாரோ மருதடி விநாயகர் கோயிலடியில் வாழும் ஒருவரை சாதியின் பெயரால் அழைக்க, அடுத்த நாள் வந்து பாதிக்கப்பட்டவர் அதிபரிடம் சொல்ல, அதிபர் காலை பிரார்த்தனை முடிந்ததும் மருதடியால் முதல் மாலை சென்ற மாணவர்களை நிற்கச் சொல்லி ஒருவரும் இழி சொல் கூறியது யார் என்று கூறாததால் எல்லோருக்கும் தண்டனை வழங்கினார். இது சாதியத்திற்கு அன்னார் எதிரானவர் என்பதைக் காட்டுகிறது. மாப்பாணவூரி நடுத்தெரு இடைப்பிட்டியில் வாழ்ந்த கல்விமான்களும் MALAYAN ஒய்வூதியம் பெறுநர்களும் இவரது உற்ற நண்பர்களாக இருந்தனர். சப்த ரிஷிகளாகிய துருவாசர் (துர்வாசகிரி), அகத்தியர், ஆண்டி முனிவர், தினகரன் முனிவர் நடமாடிய, வாழ்ந்த எமது ஊரின் வடக்கு கடற்கரைக்கு பேருந்து சேவை இவரது காலத்தில் நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துறைக்கு மகத்துவம் சேர்த்த வைத்திய கலாநிதி நா. திருஞானசம்பந்தன்

\- முருகேசு ரவீந்திரன்

காரைநகர் என அழைக்கப்படும் காரைதீவுக்கு புகழ் தேடித் தந்தவர்களுள் முக்கியமானவராக வைத்திய கலாநிதி நா. திருஞானசம்பந்தன் அவர்களைக் குறிப்பிடமுடியும்.

"டாக்டர் சம்பந்தன்" என இவர் வட பகுதி மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர். அவர் அமரத்துவம் அடைந்து இருபது வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் டாக்டர் சம்பந்தனின் புன்முறுவல் தவழும் முகமும், மனிதநேயமும் இன்னும் அவரோடு பழகியவர்களின் நெஞ்சங் களில் நிறைந்து நிற்கின்றது. தனது நற்பண்புகளால் அனைவரையும் ஈர்த்த அன்புமிக்கவராக இவர் காணப்பட்டார்.

எண்பதுகளின் இறுதியில் திருநெல் வேலியில் எங்கள் வீட்டுக்கு அருகிலேயே டாக்டர் சம்பந்தன் வசித்துவந்தார். அப்போது அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

டாக்டர் சம்பந்தன் அவர்களுடன் நெருங்கிப் பழகிய போது பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. மருத்துவ சம்பந்தமான அறிவு மாத்திரமன்றி எந்தக் கருப்பொருளிலும் அவருடன் கதைக்கக்கூடியதாக இருந்தது. எல்லாவற்றையும் அறிந்து வைத்துள்ள ஒருவராகவே அவர் காணப்பட்டார். ஆனால், அது தொடர்பில் தற் பெருமையோ தலைக்கனமோ கொண்டி ருக்கவில்லை. படித்தவரோடும் பாமர ரோடும் அன்போடு எளிமையாகவே பழகினார். அவ்வாறே அவர் வாழ்ந்தார். "உயரும் போது பணிவுகொண்டால் உலகம் உன்னை மதிக்கும்" என்ற கவியரசர் கண்ணதாசனின் பாடல் வரிகள்தான் டாக்டர் சம்பந்தனோடு பழகுவோருக்கு நினைவுக்கு வரும். அந்தளவுக்கு அவர் மிகச் சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் படித்து முடித்துவிட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் டாக்டராக பணி யாற்றியபோதே அவருக்கு சொந்த ஊரான காரைநகருக்குப் போக வேண்டும் என்ற ஆசை மனதில் துளிர்விட்டிருந்தது. அதைத் தூண்டுவது போல் அந்தச் சம்பவம் அமைந்தது. விடுமுறையில் தன் தாயாரைப் பார்க்க காரைநகருக்கு வரும்போது மூளாயில் சிறிய கட்டிடங்களுடன் ஒரு ஆஸ்பத்திரி அமைந்திருப்பதைக் கண்டார். தெருவோர மாக இரண்டொரு மாட்டு வண்டில்கள் நிறுத்தப்பட்டிருந்தன. கிராமச் சூழலில் வசதிகள் எதுவுமின்றி காணப்பட்ட வைத்தியசாலையை கண்டதும் அதுவே தான் வேலை செய்ய ஏற்ற இடமென அவர் உணர்ந்தார்.

ஊருக்குச் சென்றதும் முதல் வேலையாக தன் பெரியப்பாவிடம் சென்று அந்த வைத்தியசாலை பற்றி விசாரித்தார். டாக்டர் சம்பந்தனின் ஆர்வத்தைக் கண்ட பெரியப்பா இது சிங்கப்பூர் பென்சனியர் களால் கட்டப்பட்டது போய் வரலாம் வா என அழைத்துச்சென்றார். பெரியப்பாவும் அவரும் காரைநகரிலிருந்து மூளாய்க்கு நடந்தே சென்றனர்.

சில நோயாளர்களை மட்டுமே கொண்டிருந்த மூளாய் வைத்திய சாலையில் ஊழியர்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் அரிக்கன் லாம்பின் உதவியுடன் வேலை செய்தனர். இதை அவதானித்ததும் இளைஞனான அவருக்குள் ஓர் ஆர்வம் பிறந்தது. முன்னைய எண்ணம் வலுப்பெற்றது. பெரியப்பாவுடன் வைத்தியசாலையை பார்வையிட்டுக்கொண்டிருக்கையில் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் சபாபதிப்பிள்ளை இவர்களை எதிர்கொண்டார். பெரியப்பா இவரை அவருக்கு அறிமுகப்படுத்தினார். உங்கள் வைத்தியசாலைக்கு வேறு டாக்டர்கள் தேவைப்படுகிறார்களா? என டாக்டர் சம்பந்தன் சபாபதிப்பிள்ளையிடம் கேட்டார். ஓம் என பதிலளித்த அவர் இவரை வைத்தியசாலையின் தலைவர் டாக்டர் செல்லையாவுடன் கதைக்குமாறு கூறினார்.

டாக்டர் செல்லையாவிடம் இவர் தனது விருப்பத்தை தெரிவித்தார். சம்மதம் தெரிவித்த அவர், அரசாங்க சம்பளத்திலும் பார்க்க மிகக் குறைந்த தொகையான சம்பளத்தில் வேலை செய்ய தங்களால் முடியுமா? என்று இவரைக் கேட்டார். டாக்டர் சம்பந்தன் தனது பூரண திருப்தியை வெளியிட்டார்.

1944ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் டாக்டராக பணியேற்றார். இவரது செயலுக்கு உறவினர்கள் பலரும் எதிப்புத் தெரிவித்தனர். இவரது தாயாரும் முதலில் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. அருமந்த அரசாங்க உத்தியோகத்தை விடுவதா என்ற எண்ணம் அவர்கள் எல்லோருக்கும் இருந்தது. அதனாலேயே அவர்கள் இவரது செயலை விரும்ப வில்லை. டாக்டர் சம்பந்தன் இளவயதில் மலேசியாவில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்டார். அதனால் இளம் பிராயத்தில் தமிழில் அதிக பரீட்சயம் இல்லாமல் இருந்தது. பாடசாலையில் படிக்கும் போது டாக்டர் அல்பேட் சுவைட்சருடைய சரித்திரத்தை விரும்பிப் படித்தார். அவரைப்போல தானும் டாக்டராக வரவேண்டும் பாமர மக்களுக்கு தன்னால் முடிந்ததை செய்ய வேண்டும் என எண்ணினார்.

1929ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் படிப்பை தொடர்ந்தார். பாடசாலையில் இயங்கிய சமூகசேவை அமைப்பில் இணைந்து கிழமையில் இரண்டு தினங்கள் அயற் கிராமங் களுக்குச் சென்று சேவை செய்து வந்தார். படிப்பில் மிக கெட்டித்தனமாக விளங்கிய இவருக்கு கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அதிக பெறுபேறுகளை பெற்றுத் தந்தன. இருந்தும் டாக்டராக வரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரண மாக உயர்தரத்தில் விலங்கியல், தாவர வியல் ஆகிய பாடங்களை படித்தார்.

1943ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல அணியில் பட்டம் பெற்ற டாக்டராக வெளியேறினார். இவர் கல்வி கற்ற காலத்தில் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் இருக்கவில்லை. பல்கலைக்கழக கல்லூரிகளே இருந்தன. இவை இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங் களில் பதிவுசெய்யப்பட்டனவாக இயங்கி வந்தன. டாக்டர் சம்பந்தனுக்கு கொழும்பு பல்கலைக்கழகம் அளித்த பட்டமே இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட முதலாவது பட்டமாகும்.

இவர் டாக்டர் பட்டம் பெற்ற அதே ஆண்டு கண்டி அரசாங்க வைத்திய சாலைக்கு பணியாற்றச் சென்றார். பின்னர் கொழும்பு அரசாங்க வைத்திய சாலையில் டாக்டர் P.E.பெர்னாண்டோ, டாக்டர் குணரட்ணம் குக் ஆகியோருக்கு கீழ் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. வைத்தியத்துறை சம்பந்தமான பல நுணுக்கங்களை இவர் தெரிந்து கொள்வதற்கு இவர்களுடனான தொடர்பு பேருதவியாக அமைந்தது.

அரசாங்க வைத்தியராக இருந்து விலகி மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் வேலை பார்த்த ஆரம்ப காலத்தில் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் சாக்கோ தலைமை வைத்தியராக பணியாற்றினார். டாக்டர் சம்பந்தன் அவரோடு இணைந்து பெற்றோல் மக்ஸ் உதவியுடனேயே சத்திரசிகிச்சைகளை செய்து வந்தார். அக்காலத்தில் சத்திரசிகிச்சை கருவிகளை கிருமிநீக்கம் செய்வதற்கு உரிய வசதிகள் இருக்கவில்லை. இட்டலிப் பானையே இதற்காக பயன்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களில் 24 மணி நேரமும்கூட டாக்டர் சார்க்கோவும் டாக்டர் சம்பந்தனும் பணியாற்றி இருக்கின்றனர். மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் மொத்தமாக பன்னிரெண்டு ஊழியர்கள் மாத்திரமே கடமையாற்றினர். இவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் சேர்ந்து எட்டு மாதங்களுக்குள்ளாகவே சிரேஸ்ட வைத்திய அதிகாரி சார்க்கோ விடுமுறையில் இந்தியா செல்ல நேரிட்டது. டாக்டர் சம்பந்தன் மட்டுமே மூளாயில் கடமையிலிருந்தார் அந்த வேளையில் கர்ப்பிணி ஒருவரை மகப்பேற்றுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு வந்திருந்தனர். அந்தப் பெண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. இவருக்கோ சத்திர சிகிச்சை செய்து அனுபவமில்லை. அதனால் வேறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு அப்பெண்ணின் கணவரிடம் கூறினார். அவரோ நீங்கள் தான் ஒப்பிரேசன் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்.

காலை ஒன்பது மணி. டாக்டர் சம்பந்தனின் மனதிலோ பதற்றம். மகப்பேற்று சத்திரசிகிச்சை சம்பந்தப்பட்ட நூல்களை ஒருமுறை மேலோட்டமாக தட்டிப்பார்த்த பின் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு செல்கிறார். சத்திர சிகிச்சைக் கருவிகள் அதிகம் இருக்கவில்லை. பிற்பகல் மூன்று மணியிருக்கும் மலாயன் றெஸ்சர் கிருஸ்ணன் மயக்க மருந்து கொடுக்க, டாக்டர் சம்பந்தன் சத்திரசிகிச்சை செய்தார். எல்லாம் நல்ல படியாக முடிந்தது. தாயும் பிள்ளையும் பத்து நாட்களின் பின் சுகமாக வீடு சென்றனர். டாக்டர் சம்பந்தன் மிகுந்த தன்னம்பிக்கை கொண்டவர். அதற்கும் மேலாக இறை நம்பிக்கையும் அவரிடம் இருந்தது. 1947ம் ஆண்டு சத்திரசி கிச்சையில் சிறப்புப்பட்டம் பெறுவதற்காக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகத்தினரின் உதவியுடன் இங்கிலாந்திலுள்ள 'எடின்பரோ' பல்கலைக் கழகத்திற்கு சென்றார். பின்னர் அங்குள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகத்திலும் படித்தார். எடின்பரோவிலும் கிளாஸ்கோவிலும் சத்திரசிகிச்சையில் நிபுணத்துவ பட்டத்தை பெற்றவராக டாக்டர் சம்பந்தன் காணப்பட்டார். சத்திரசிகிச்சைத்துறையில் நிபுணத்துவப் பட்டத்தை பெற்ற இவர், பின்னர் சில மாதங்கள் சுவீடனிலும் சுவிற்சர்லாந்திலும் தங்கியிருந்து மேற்கத்தய வைத்திய முறைகள் மற்றும் மகப்பேறு சம்பந்தப்பட்ட பாடநெறிகளையும் கற்று தாய் நாட்டுக்கு திரும்பி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலேயே தனது பணியைத் தொடர்ந்தார்.

இன்று எமது நாட்டிலே சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் பலர், தமது சுகபோக வாழ்க்கையை நோக்காகக் கொண்டு அந்த நாடுகளிலேயே தங்கி விடுகின்றனர். தமது தாய்நாடு பற்றியோ, தமது பிரதேசம் பற்றியோ, அங்குவாழும் மக்கள் பற்றியோ எந்தவித கரிசனையும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இன்றும் வட பகுதியிலுள்ள பல வைத்தியசாலைகளில் வைத்தியர் களுக்கும் ஏனைய வைத்தியத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் தட்டுப் பாடு நிலவுகின்றது. ஆனால் அந்தப் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் இந்தத் துறைகளில் பணிபுரிந்தாலும் அவர்கள் தமது வசதியொன்றையே நோக்காகக் கொண்டு சொந்த இடங்களில் பணியாற்ற விரும்புவதில்லை. ஆனால் டாக்டர் சம்பந்தன் இந்த விடயத்தில் முற்றிலும் மாறுபட்ட சிந்தனை உடையவராகக் காணப்பட்டார். பாரதி கூறியது போல் சொந்தச் சகோதரர்கள் துன்பப்படுதல் கண்டும் சிந்தை இரங்காத மனிதராக அவர் இருக்கவில்லை. தனது சொந்த ஊரான காரைநகரை நேசித்தார். மக்களை நேசித்தார். அதனால்தான் சத்திரசிகிச்சைத் துறையில் நிபுணத்துவ பட்டம் பெற்ற பின்னரும் தாய் நாட்டுக்கே வந்து, தான் முன்பு பணியாற்றிய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலேயே தனது பணியை தொடர அவரால் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் சம்பந்தன் அவர்கள் இங்கிலாந்திற்குப் போக முன்னரே மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நோயாளர் தொகை அதிகரிக்க தொடங்கிவிட்டது. இதனால் ஓலைக் கொட்டில்கள் பல கட்டி நோயாளர்கள் பராமரிக்கப்பட்டனர். ஊரிலுள்ள கொடை யாளர்களின் உதவியுடன் சத்திரசி கிச்சைக் கூடமும் அமைக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் டாக்டர் செல்லத்துரை என்பவரும் அங்கு பணியாற்றினார். ஆக மொத்தம் மூன்று டாக்டர்கள் கடமையாற்றினார்கள்.

1949ஆம் ஆண்டு ஜெனரேட்டர் ஒன்றும் வாங்கப்பட்டது. அதன் உதவியால் சத்திரசிகிச்சை செய்வது இலகுவாக அமைந்தது. மூளாய் வீதியில் புட்டுத்தின்னி ஆலடி என்று ஓர் இடமுண்டு. காரைநகரிலிருந்து மாட்டு வண்டில் கட்டி தூர இடங்களுக்கு செல்பவர்கள் இவ்விடத்தில் தரித்துச் செல்வது வழக்கம். இங்குள்ள ஆல மரத்தில் வசிக்கும் முனி எங்கே தம்மை அடித்துவிடுமோ என்ற பயத்தால் மக்கள் இரவு வேளைகளில் இவ்வழியால் செல்ல பயப்பிடுவார்கள். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் கிடைத்த பின், மக்கள் மத்தியில் காணப்பட்ட முனி பற்றிய பீதியும் மறைந்து விட்டது. படிப்படியாக வைத்தியசாலையில் வசதிகள் அதிகரிக்கப்பட்டன. சத்திர சிகிச்சைக் கருவிகளை கிருமி நீக்கம் செய்வதற்காக இங்கிலாந்திலிருந்து சாதனங்கள் தருவிக்கப்பட்டன. முன்னர் கிருமி நீக்கம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட இட்டலிப்பானை தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டது. அக்காலத்தில் மக்கள் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு செல்வது குறைவு. மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் வசதிகள் அதிகரிக்கப் பட்டமையால், வெளி இடங்களிலிருந்தும் நோயாளர்கள் பெருமளவு வரத் தொடங்கினார்கள். பருத்தித்துறையி லிருந்து இரண்டு பஸ்கள் வைத்திய சாலைக்கு நோயாளரை ஏற்றி வருவதற் காக விடப்பட்டன. காலை ஏழு மணிக்கெல்லாம் எண்பது பேருக்கு மேல் இலக்கம் கொடுத்து முடிந்திருக்கும். டாக்டர் சம்பந்தனுக்கு அரசாங்கத்தில் வழங்கப்படும் தொகையிலும் பார்க்க மிக குறைந்தளவு ஊதியமே மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. அப்போதய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகிகள் அவருக்கு மூவாயிரம் ரூபா வரை சம்பளம் தருவதாக கூறினார்கள். ஆனால் டாக்டர் சம்பந்தன் அதனை வாங்க மறுத்துவிட்டார்.

1975ஆம் ஆண்டு கண்ணில் ஏற்பட்ட சுகயீனத்தால் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை விட்டு அவர் விலகினார். அப்போது அவர் பெற்ற சம்பளம் ஆயிரம் ரூபா மட்டுமே. பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வைத்திய நிலையமொன்றில் இவர் பணியாற்றினார். அந்த காலகட்டத்திலும் தூர இடங்களிலிருந்து ஏராளமான நோயாளர்கள் அவரிடம் சிகிச்சை பெற யாழ் நகருக்கு வந்தனர். முன்னால் இலக்கம் பெறுவதற்காக விடியற் காலை நான்கு மணிக்கு ரோச் விளக்குடன் வந்து வைத்திய நிலைய வாங்குகளில் அமர்ந்திருந்து இலக்கங்களைப் பெற்று டாக்டர் சம்பந்தனிடம் சிகிச்சை பெற்றுக் சென்றோரில் பலர் இப்போதும் எம்மிடையே வாழ்கின்றனர். இன்று வைத்தியத் துறையில் தேர்ச்சி பெற்ற பல டாக்டர்கள் இருக்கின்றனர். இலங்கையில் வைத்தியத் துறையானது இன்று வளர்ச்சி பெற்ற ஒரு துறையாக காணப்படுகிறது. மக்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்திருக்கிறது. ஆனால் அன்று இன்றுபோல் வசதிகள் எதுவும் இருக்கவில்லை. அத்தகைய தொரு காலப் பகுதியில் மக்களின் சேவையே மகத்தான பணி என உணர்ந்து சேவையாற்றினார். வைத்திய கலாநிதி நா. திருஞானசம்பந்தன் தனது சேவையால் காரைநகர் மக்கள் மனங்களில் மாத்திரமல்லாமல் வடபகுதி மக்களனைவரது நெஞ்சங்களிலும் உயர்ந்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் தமிழுக்கு அளித்த மகாவித்துவான் F.X.C நடராஜா
## ஓர் அறிமுகக் குறிப்பு

*குமாரசாமி குமாரதேவன்*



பிறப்பு: 1911 இறப்பு: 1997

மகாவித்துவான் சி. கணேசையருக்குப் பிறகு மகா வித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் அமரர் F.X.C. நடராஜா ஆவார்.

காரைநகரில் 1911 ஆம் ஆண்டு பிறந்த திரு. நடராஜா தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை காரைநகர் மற்றும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். அவரது ஆசிரியர்களில் காரைநகரைச் சேர்ந்த அம்பலச் சட்டம்பியார், உடையார் நாகலிங்கம், சபாபதிப்பிள்ளை, பொன்னுடையார் வேலுப்பிள்ளை, சுழிபுரம் அதிபர் சு. சிவபாதசுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1931 ஆம் ஆண்டு மட்டக்களப்பு அகஸ்டின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார். இக்காலப் பகுதியில் சுவாமி விபுலானந்தரைக் குருவாகக் கொண்டு பால பண்டிதரானார். 1935 ஆம் ஆண்டு அகஸ்டின் ஆசிரியர் கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையிலும் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1947 இல் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து நாடு திரும்பி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியரான சுவாமி விபுலானந்தர் தொடக்கிய வித்துவான் பட்டத்துக்கான வகுப்புக்களில் அவரின் மேற்பார்வையில் கற்று 1950 இல் வித்துவான் ஆனார். 1929 தொடக்கம் 1952 ஆம் ஆண்டு வரை ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராக கடமையாற்றிய திரு.நடராஜா 1952 ஆம் ஆண்டு அரச கரும மொழித் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தராக சேர்ந்து 1968 இல் அத் திணைக்களத்தில் அத்தியட்சகராகப் பணிபுரிந்து 1971 இல் ஓய்வு பெற்றார்.

அமரர் F.X.C. நடராஜா சுமார் பதினைந்திற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில்,

1. ஈழமும் தமிழும்
2. ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு
3. ஈழத்து நாட்டார் பாடல்கள்
4. மட்டக்களப்பு மான்மியம் (1963 இல் அரச சாகித்திய விருதினைப் பெற்றது)
5. காரைநகர் மான்மியம்

என்பன குறிப்பிடத்தக்கவை.

தனி நூல்களை விட பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் மலர்கள் முதலானவற்றில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

பல தமிழ் மாநாடுகள், விழாக்கள் ஆகியவற்றில் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூல்களுக்கு அணிந்துரை, ஆசியுரை, விமர்சனங்கள் எழுதியுள்ளார். இவ்வாறாக அவரது சுமார் 200 வரையிலான கட்டுரைகள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. இதை விடப் பேராசிரியர் வில்சன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலை தமிழில் மொழிபெயர்த்துள்ளார் (இலங்கை அரசியலும் பொருளாதாரமும்). மதம் மாறிய பொழுதும் சைவ சமயம் மீது வெறுப்புக் கொள்ளாமை கண்டு இன்புறத்தக்கது என பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, நடராஜா குறித்துக் குறிப்பிட்டுள்ளார். காரைநகர் சிவன் கோவில் மலரில் அவர் எழுதிய இரட்டையர்கள் என்னும் கட்டுரை, மணியம் 2, குருக்கள் 2, வேலைக்காரர் 2, மூர்த்திகள் 2 என விரிவடைகின்றது.

அவர் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார். அறியப்பட்ட புனை பெயர்கள் சில,

1. புலியூரான்
2. பிரம்மா
3. ஆடவல்லான்
4. கூத்தப்பிரான்
5. ஆடகமணி

என்பனவாகும்.

எஸ்.பொ என பிரபலமாக எழுத்துலகில் நன்கறியப்பட்ட எஸ். பொன்னுத்துரை நல்லூரில் பிறந்து யாழ்ப்பாண நகரில் வளர்ந்து சென்னையில் உயர்கல்வி கற்று B.A பட்டதாரி ஆனார். மட்டக்களப்பில் ஆசிரியர் நியமனம் பெற்று தொழில் புரிந்து அங்கு திருமணம் முடித்து வாழ்ந்தவர். இறுதிக் காலங்களில் அவுஸ்ரேலியாவில் பிள்ளைகளுடன் வாழ்ந்து அமரர் ஆனவர். அவர் தனது வாழ்க்கை அனுபவங்களை மொத்தமாக 1920 பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுதிகளாக "வரலாற்றில் வாழ்தல்" எனும் தலைப்பில் நூல்களாக வெளியிட்டார். அந்த நூல்களில் பல இடங்களில் F.X.C. நடராஜா குறித்து எஸ்.பொ குறிப்பிடுகின்றார். அவற்றுள் முக்கியமானவற்றை இரண்டு பகுதிகளாக இங்கு தருகின்றோம்.

முதல் பகுதி பின்வருமாறு,

1956 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கலைவாணி புத்தகசாலையில் இலங்கை வரலாற்றைப் பற்றிய மூன்று நூல்கள் விற்பனைக்கு வந்தன. போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்ததானியர் காலம் என்ற மகுடங்களில், இலங்கையின் தற்கால வரலாறு தமிழில் எழுதப்பட்டிருந்தது. நான் என்றுமே வரலாற்றின், அத்தியந்த உபாசகனாய் வாழ்வதினால், அந்த மூன்று நூல்களையும் வாங்கி, ஒரே வாரத்தில் வாசித்தும் முடித்தேன். அதன் ஆசிரியர் மட்டக்களப்பு மத்திய வீதியில் வசிப்பதாகப் புத்தகத்தின் மூலம் அறிய முடிந்தது.

நான் தினமும் செல்லும், சென்ட்ரல் ஹோட்டலுக்கு அடுத்த வீடுதான் அவர் வசிப்பது என்பதை அறிந்தபொழுது ஆச்சரியமாக இருந்தது. அவர் வீட்டுக்கு முன்னால், பென்னம்பெரிய புளிய மரமொன்று உண்டு. படுவான்கரையில் இருந்து, கல்லடித் தெருப் பக்கமாக கொள்ளி களையும், விறகுகளையும் படகுகள் மூலம் கொண்டு வந்து இறக்கும் பெண்கள், அந்தப் புளிய மரத்தின் கீழே அவற்றைப் போட்டு மீண்டும் வியாபாரத் திற்கான கட்டுக்களாக்கி ஊருக்குள் கொண்டு சென்று விற்பார்கள். அந்த வீட்டின் அம்மா, அந்த பெண்களுக்கு உபகாரியாய் வாழ்வதையும் அறிந் திருந்தேன்.

துணிவுடன் வீட்டுக்குச் சென்று, "F.X.C. நடராஜாவைப் பார்க்க வந்திருக்கிறேன், அவர் இருக்கிறாரா?" என்று கேட்டேன்.

"அவர் கொழும்பில் வேலை வேலை செய்கிறார். அடுத்த Week – end வந்தாலும் வருவார்" என்று அறிவித்தல் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் F.X.C. நடராஜா பற்றிய விசாரணையில் ஈடுபட்டிருப்பதை அறிந்த என் மனைவி, இயல்பாகவே தன் தந்தையிடம் சொல்லி இருக்க வேண்டும். அவர் (வன்னியசிங்கம்) ஒரு சனிக்கிழமை காலை எதிர்பாராத விதமாக வீட்டுக்கு வந்தார். நான் விசாரித்துத் திரிந்த மகாவித்துவானைப் பற்றி பின்வரும் தாகவல்களைத் தந்தார்.

"F.X.C. நடராஜா, பெரிய தமிழறிஞர், அவருடைய தமிழறிவு இங்கு மெச்சப்படாத இடம் இல்லை. விபுலாநந்தருக்குப் பிறகு, புலவர் பெரியதம்பிப்பிள்ளைக்குப் பிறகு, நடராஜா தான் பெரிய வித்துவான். மட்டக்களப்புக்கு வரும் பொழுது செல்லப்பா நடராசாவாகத்தான் வந்தார். அவர் சொந்த ஊர் யாழ்ப்பாணம் காரைநகர். இங்கு அவர் ஒகஸ்டின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது, Monograph of Batticaloa எனும் நூல் எழுதியவரும் சட்டசபை உறுப்பினராய் இருந்தவருமான S.O. கனகரட்னம் அவர்களுடைய மகளை காதலித்து திருமணம் முடித்தார். கலியாணம் முடிப்பதற்காக Francis Xavier என்ற ஞானஸ்தானப் பெயரை பெற்று F.X.C. நடராஜாவாக வாழ்கிறார். இவருக்குள்ள தமிழறிவு, வேறு யாருக்கும் இல்லை என்பதை முதலிலே அறிந்தவர் நல்லையாதான் (அமைச்சர்). அவர்தான், இவர் இங்கு இருந்து வீணாகப் போகாமல், கொழும்பில், தன் மொழி அலுவலகத்தில் மொழி பெயர்ப்பு Superintendent ஆக நியமனம் பெற்றுக் கொடுத்தார்" என அவரைப் பற்றித் தேவைக்கும் அதிகமான குறிப்புக்களைத் தந்தார்.

"அவர் உண்மையில் பெரிய படிப்பாளி, பெரிய வித்துவான்", என வன்னியசிங்கத்தார் அவரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தார். இந்த வர்ணனைகளினாலும், அவரைப் பார்க்க வேண்டும் என்கிற தீவிரம் என்னுள் எழுந்தது. ஒருநாள் சனிக்கிழமை, கோட்டைமுனைப் பாலத்தில் நின்று கொண்டிருந்த பொழுது, 'நீ தேடிக் கொண்டிருக்கும், F.X.C. நடராஜா இவர்தான்!' என்று என் செவிக்குள் கிசுகிசுக்கப்பட்டது. பார்த்தேன். ஆறரை அடி உயரமுள்ள மனிதன் வெள்ளைக் காரனோ என்று நினைக்கத்தக்க நிறம், பாலாடையில் தைக்கப்பட்டது போன்ற உடைகள், அந்த மதியம் நோக்கிய வெயிலை தாங்காதவர் போல, விரித்த குடை. ஒரு பையன் அவருக்கு முன்னால், ஒரு பையைச் சுமந்து கொண்டு நடந்தான். தோரணை எல்லாவற்றையும் பார்த்தால் அவர் மார்க்கெட்டிங் முடித்துக் கொண்டு வீடு திரும்புவது தெரிகிறது.

இருபது நிமிடங்கள் கழித்து, அவர் வீட்டுக்குச் சென்றேன். வீட்டில் பிள்ளைகளுடன் ஆறுதலாக இருப்பதற்கு குறைந்தது மாதம் ஒரு முறையேனும் மட்டக்களப்புக்கு வருவதாக சொன்னார். தன்னை எந்த நேரமும் வந்து சந்திக்கலாம் என்றும், மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் சிலவற்றை ஒரு நூலாகத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவுஞ் சொன்னார். இதன் மூலப் பிரதிகளைச் சேர்க்க அவர் பட்டபாடுகளைப் பின்னர் அறிந்தேன். நாமிருவரும் ஒத்த இலக்கியப் பாதையை வகுத்துக் கொண்ட பிறகுதான் இந்த நூல் வெளிவந்தது. 1963 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களிலே மட்டக்களப்பு மான்மியத் திற்கும் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

இவ்வாறு தொடங்கிய எங்களுடைய நட்பு, நான்கு தசாப்தங்களுக்கு மேலாகவும் நீடித்து நின்று வளர்த்துள்ளது. நிறைந்த புரிந்துணர்வுடன், ஒரே அணியில் நின்று, இலக்கிய வளங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளோம். அவரை என்றும், என் இலக்கியத் தலைவனாய் மதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துள்ளேன் என்று பிரகடனப்படுத்து வதில் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

மகாவித்துவான் செட்டித் தெருவில் இருந்த புடவைக் கடை ஒன்றின் மாடியிலே குடியிருந்தார். அறையில் அவர் தனிமையில் இருந்தால், ஆழ்ந்த படிப்பிலே ஈடுபட்டிருப்பார் என்று தான் அர்த்தம்.

இலக்கணம் என்பது, சூத்திரங்களை மனப்பாடம் செய்தல் என்கிற கோட்பாட்டினை அவர் நிராகரித்தார். "மொழி வித்துவர் களுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டது என இலக்கணத்தை வைத்திருக்கக் கூடாது. பாமரர்கள் செவிக்கும் நாவுக்கும் ஊறு செய்யாத இயல்பான விதிகளை கடை பிடித்தார்கள். கல்குடாவுக்குச் சென்று கேள். அவன் கல்க்குடா என்றும் சொல்லாமாட்டான். கற்குடா என்றும் சொல்லமாட்டான். அவன் 'கலுக்குடா' என்றே சொல்கின்றான். அந்தப் பாமரனுக்கு இந்த இலக்கண விதியை சொல்லிக் கொடுத்தது யார்? எனவே, கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்பவும், மொழியைப் பயன்படுத்தும் ஊடகத்திற்கு ஏற்பவும் இலக்கணத்தின் விதிகள் நெகிழ்ந்தும், சிதைந்தும், தொலைந்தும் போய்விடுகின்றன என்பார்.

பண்டிதர்மார்களுக்கு உரிய தனித் தமிழ் மோகம் அவருக்கு இருந்ததில்லை. F.X.C. என்ற தனது, இனிசியலை தமிழிலே எழுதுவதற்கு அவர் மிகச்சிரமப்பட்டார். மொழி பெயர்ப்புத் துறையிலே ஈடுபட்டிருந்த படியால் புதிய சொற்களை தேடுவதிலும், உண்டாக்குவதிலும், பயிற்சிக்கு கொண்டு வருவதிலும் ஈடுபாடு காட்டினார். இந்த முயற்சிகளிலே அவர் கருணாலய பாண்டியனாருடைய மொழி அறிவையும், இ. இரத்தினத்தினுடைய தேடல்களையும், பெரிதும் மதித்தார். இவ்விருவருடைய அறிமுகங்களையும் உறவுகளையும் எனக்கு ஏற்படுத்தித் தந்தவரும் மகாவித்துவானே!

பேராசிரியர் சதாசிவம் தனஞ்சயராஜ சிங்கம், ஆத்மஜோதி முத்தையா போன்ற பலரையும் அவருடைய அறையிலேயே நான் சந்தித்து மகிழ்ந்ததுண்டு.

1964 இல் கிழக்கு எழுத்தாளர் சங்கம் ஒன்றை உருவாக்கி தமிழ் விழா ஒன்றினை மட்டக்களப்பில் பெருமெடுப் பில் நடத்தினோம். அச்சங்கத்திற்கு F.X.C. நடராஜாவை தலைவராக நியமித்தோம்.

ஆதாரம்:

1. வரலாற்றில் வாழ்தல்: எஸ்.பொ.
2. சாம்பசிவம் தவமணி தேவி: நூலகம் இணையத்தளம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடத்திற்கு ஓர் திறவுகோல் என். சபா

***அமரர் நமசிவாயம் சபாரத்தினம் அவர்களின் 103 ஆவது பிறந்த தினத்தையொட்டி (05. 12. 2016) எழுதப்பட்டது***

*எஸ். கே. சதாசிவம்*



அமரர் ந. சபாரத்தினம் அவர்கள் தனது வாழ்வில் ஆற்றிய பணிகள் அனைத்திற்கும் வரைவிலக்கணம் வகுத்துச் சென்றவர். ஆசிரியர், அதிபர், கல்வியாளர், தொழிற்சங்கவாதி, பத்திரிகை ஆசிரியர், சமய, சமூக சேவையாளராக தன் இளமைக் காலத்திலிருந்து வாழ்நாள் இறுதி வரை மானிடத்தின் மேன்மைக்காக பணியாற்றியவர்.

நமசிவாயம் - தெய்வானைப் பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த (05.12.1913) சபாரத்தினம் காரை மண் தந்த அறிஞர்கள் வரிசையில் பல்துறை சார்ந்து ஆற்றிய பங்களிப்புகள் காத்திரமானவை. காரைதீவின் முதல் B. A பட்டதாரி எனும் பெருமைக்குரியவர். ஆங்கிலம், தமிழ், இலத்தீன் ஆகிய மூன்று மொழிகளையும் கற்று லண்டன் B. A பட்டம் பெற்றார். நடுத்தர வர்க்கத்தில் உதித்த திரு சபாரத்தினம் அடைந்த மேன்நிலை யாவும் அன்னாரின் முயற்சியாலும் கடின உழைப்பினாலும் பெற்றுக்கொண்டவை யாகும். (Heights by Great People achieved and Kept were not attained by sudden Flight but they while their companions slept were toiling upwards in the light.)

தூய வெள்ளை வேட்டி, தேசிய முழுக்கைச் சட்டை, தொங்கிக் கொண்டிருக்கும் வெள்ளைச் சால்வை, பார்வைக்கும் பழகுவதற்கும் எளியனாய் வாழ்ந்தவர். மண்வாசனை மறக்காத மனிதர். பிற மொழிகள் பிற மொழி இலக்கியங்கள் கற்றிருப்பினும் தமிழ் மொழி மீதும் தமிழ்த் தேசியத்தின் பாலும் பற்றுறுதி கொண்டவர் அமரர் சபாரத்தினம். "Corridors of Peace The immortal profession its ups and downs" எனும் தனது நூலில் மறந்துவிட முடியாத, என்றும் நினைவில் இருக்கக் கூடிய தன் தொழில்சார் ஏற்ற இறக்கங்கள் பற்றி தன்னைப் பெருமைப்படுத்தாது, எளிமையாய், தன் வாழ்வின் அனுபவங்களையும், தொழில்சார் அனுபவங்களையும் ஆங்கிலப்புலமையின் உச்ச நிலையில் நின்று, வாசிப்பவர் அனுபவித்து வாசிக்கக் கூடிய அதே வேளை, வாசிப்பவரை உயர்நிலைக்கு இட்டுச்செல்லக்கூடிய உந்தல் மிக்கதான எழுத்தாற்றல் மூலம் பல விடயங்களைப் பகிர்ந்துள்ளார்.

வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை மூன்று ஆண்டுகள் கற்றதாகவும், தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அப்புத்துரை உபாத்தியாயர் ஆசிரியப் பணியை தெய்வீகப்பணியாகக் கருதி ஆற்றினார் என்றும் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலையில் கல்வி கற்றார். இப்பாடசாலையில் கற்கும் வேளையில் திரு எம். அம்பலவாணர் ஆசிரியர் "The Hindu Review" எனும் வாராந்த ஆங்கில கையெழுத்துப் பிரதியை உருவாக்கு வதில் அளித்த ஊக்கமும் அவர் கற்பித்த ஆங்கிலமும் தனக்கு ஆங்கில பாடத்தில் ஆர்வம் காட்டக் காரணமாக அமைந்தது எனக் குறிப்பிடுகின்றார். தங்கள் வகுப்பறை விளம்பரப் பலகையில் இடப்பட்ட இப்பத்திரிகை யினை பார்வையிட பாடசாலையின் அனைத்து மாணவர்களும் வருகை தருவது வழமை எனக் குறிப்பிடுகின்றார்.

மதிப்பிற்குரிய ஆசான் எம். அம்பலவாணர், அதிபர் ஆகியோரின் விருப்பத்திற்கு மாறாக தன்னை சைவ பெரியார் சு. சிவபாதசுந்தரனார் பணியாற்றிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தொடர்ந்து கற்பதற்கு தந்தையார் ஆவன செய்தார் எனவும், அரச பரீட்சையில் சித்தியெய்திய பின் சைவ பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் விருப்பத்திற்கு மாறாக யாழ் இந்துக் கல்லூரியில் கற்பதற்கு தந்தையார் ஆவன செய்தார் என்றும் குறிப்பிட் டுள்ளார். யாழ் இந்துக் கல்லூரியில் மகாத்மா காந்தியின் தரிசனம் கிடைக்கப் பெற்றார்

பின் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்பதற்கு தந்தையார் ஆவன செய்தார். அக்காலத்தில் வண. ஜோன் பிக்னெல் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். மனித நேயம் மிக்க வண. ஜோன் பிக்னல் அவர்கள் தனது தந்தையார் இவ்வுலகை நீத்த வேளை இந்தியாவில் இருந்த தாகவும் இலங்கைக்கு வந்த பின்னர் தமது இல்லம் வருகை தந்து தமது தாயாருக்கு ஆறுதல் தெரிவித்து, ''உங்கள் மகனின் கல்வி நிறைவடையும் வரை நான் கவனித்துக் கொள்வேன்'' என்று கூறி, அதனை செயலிலும் காட்டினார் எனவும் குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த வங்கதேச கவிஞர் தாகூரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றார். தனது கல்விச் செயற்பாடுகள் தனக்கு மலர்ப் படுக்கையாக அமைந்திருக்கவில்லை எனவும், தனது பெறுபேறுகளின் அடிப்படையில் பெரிதாகக் கூறுவதற்கும் எதுவும் இருக்கவில்லை எனவும், ஆனால் கல்லூரிக் காலத்தில் இவ்வுலகில் அவதரித்த மகான்களின் தரிசனங்களும் தகைமைசால் ஆசான் களின் கற்பித்தலும் தன் வாழ்வு உயர் நிலைக்குச் செல்வதற்கு செல்வாக்கு செலுத்தின எனவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கல்விசார் நடவடிக்கையில் தன் தந்தையார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தமது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் வகிபாகத் திற்கு முன் உதாரணமாக அமைகின்றது எனக் குறிப்பிடுகின்றார். எப்பாடசாலை யில், எக் கல்லூரியில், எந்தப் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டும் அல்லது எந்தப் பாடநெறியை கற்க வேண்டும் என்பதனை தீர்மானிக்கின்ற பொறுப்பு பெற்றோருக்குரியது என்பதனை மறுக்கமுடியாது எனவும், அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலை வரைதான் தீர்மானங்களை மேற்கொள்ள லாம் எனக் குறிப்பிடுகின்றார். தன் பெற்றோர்கள் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் வளர்த்தமை யால், தன் தந்தையாரை மிக இள வயதில் இழந்த பின் தன் வாழ்வில் ஏற்பட்ட மகிழ்ச்சிகரமற்ற சம்பவங்கள் அனைத்தையும் கடந்து வாழ்வில் தான் ஓர் உயர் நிலையை அடைவதற்கு ஏதுவாக அமைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். தான் தன்னுடைய தந்தையாருக்கு மிகவும் கடமைப்பட் டுள்ளதாகவும் தன் உயர் நிலைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகொள்ள தன் தந்தையார் உயிரோடு இல்லை என்பதனையும் மன நெகிழ்வுடன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய கால கட்டத்தில் அனைத்து இளைஞர்களும் எழுதுனர் சேவை போன்ற அரச சேவைகளில் இணைந்து கொள்வது வழமை. அவ்வாறு இணைந்து கொள்ளாது தனிப்பட்ட ரீதியில் ஆங்கிலம், இலத்தீன் ஆகிய பாடங்களைப் போதித்து வந்தார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தவர் யாழ் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும் காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி உப அதிபராகவும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரிகளின் அதிபராகவும் பணியாற்றினார்.

1942ல் லீலாவதி அம்மையாரை திருமணம் செய்தார். லீலாவதி அம்மையார் தன் கணவரின் பணிகளுக்கு துணை நின்றார். Corridors of Peace எனும் நூலை முழுமைப் படுத்தி வெளியீடு செய்வதில் பெரும்பங் காற்றினார். ஆடம்பரமற்ற அன்பான இல்லத்தரசி லீலாவதி அம்மையார். அன்னாரின் தருமத்தின் அடிப்படை யிலான வாழ்வில் இணைந்து பயணித்தார். வயோதிபமும் நோயும் ஆட்கொண்டிருந்த வேளையிலும், எறிகணை வீச்சுக்களுக்கு மத்தியில் யாழ் நகரில் துணிச்சலுடன் தன் கணவருடன் வாழ்ந்தவர்.

இவர் ஆங்கிலப் பாடத்தை இரசனையுடன் கற்பிப்பது அலாதியானது. கற்பிக்கும் ஆங்கில இலக்கிய பாடத்தில் வரும் கதாபாத்திரங்கள் போன்று போர் இலக்கியம், இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் வரும் கதா பாத்திரங்கள் பற்றியும் எடுத்துச் சொல்லப்படும். பரீட்சையில் சித்திபெற மட்டும் ஆங்கிலத்தைக் கற்காதீர்கள் வாழ்க்கையில் சித்தி பெற ஆங்கிலத்தைக் கற்குமாறு அறிவுரை வழங்கப்படும். சிறந்த கற்பித்தல் மூலம் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி முன் உதாரணமான கற்பித்தலை மேற்கொண் -டார். கடைநிலை மாணவன் முதல் முதன்மை மாணவர் வரை யாபேரும் கற்பித்தலை இரசித்தனர். தண்டனை வழங்குவதன் மூலம் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தலாம் என்பதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இளம் சந்ததியினரிட மிருந்து தன்னை தூர விலக்கி வைக்கவில்லை. இதயத்தில் இளையவரான அன்னாருக்கு சந்ததி இடைவெளி இருக்கவில்லை. இளைஞர் களின் வாழ்விற்கு வழித்தடம் அமைத்தார். அன்பாலும் நயவுரையாலும் மாணவர் மனங்களைக் கவர்ந்தவர். ஒவ்வொரு க. பொ. த உயர்தர மாணவனும் பொறியியலாளராளராக, வைத்தியராக, ஆசிரியராக, அல்லது ஏதேனும் ஒரு தொழில் பெற்றுக் கொள்ளும் தகைமையுடையவர் எனக் கருதினார். அதிபராகப் பணியாற்றிய வேளை அதில் வெற்றியும் கண்டார்.

அர்ப்பணிப்பு மிக்கதான பற்றுடன் ஆசிரியப் பணியாற்றினார். கல்லூரிக் காலத்தில் தன் அன்பாலும் பண்பாலும் ஆசிரியர்களின் இதயத்தில் இடம் பிடித்தவர். கல்வி அபிவிருத்திக்கு அடித்தளம் ஆசிரியர் எனும் சிந்தனைத் தெளிவுடையவர். ஆசிரியர்களின் ஆலோசனைகளை செவி மடுத்தார். சக ஆசிரியர்களால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியு பணிகளை ஆசிரியர்களின் மனம் கோணாதபடி எடுத்துச் சொல்பவர். அவர் தம் பணி நிறைவு பெற்றிட ஆற்ற வேண்டிய பணிகளையும் எடுத்துச் சொல்வார். திறமைமிக்க ஆசிரியர்களை மனம் மகிழும் வண்ணம் பாராட்டி பெருமைப்படுத்தும் பண்பாளர்.

ஆங்கிலமொழி மூலமான கற்பித்தல் தமிழ்மொழி மூலமான கற்பித்தலாக மாற்றம் பெற்ற காலகட்டத்தில் சபாரத்தினம் போன்ற தகைமைசால் ஆசான்கள் கற்பித்தலில் ஈடுபட்டிருந்தமையால் கல்வியின் தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சி அடையாமல் பாதுகாக்கப்பட்டது. இவரின் கற்பிக்கும் திறமை கருதி முதலாம் தர சிறப்பு ஆசிரிய பதவி (Grade 1 Special Post) வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரியை தமிழ் மக்களின் தலைமைப் பாடசாலை யாக ஆக்க வேண்டும் எனும் பெரு விருப்புடன் பணியாற்றியவர். தன் பதவிக் காலத்தில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியை இந் நாட்டின் பெருமைமிக்க கல்விக் கூடங்களில் ஒன்றாக பரிணமிக்க வைப்பதில் வெற்றி கண்டவர். யாழ் இந்துக் கல்லூரியில் தரம் 06 கற்பதற்கு அனுமதி கிடைக்க வேண்டுமாயின் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் எனும் நிலையை உருவாக்கியவர். அதிபராகப் பணியாற்றிய காலத்தில் பொறியியல், மருத்துவம் மற்றும் ஏனைய துறைகளுக்கு செல்லும் மாணவர் தொகை அதிகரித்தது. சில சமையங்களில் நாடளாவிய ரீதியிலும் முதன்மை பெற்றது. துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், தடகளப் போட்டிகள் அனைத்திலும் யாழ் இந்துக்கல்லூரி முதல் நிலை பெற்றது. கல்வி அமைச்சு யாழ் இந்துக் கல்லூரியை அதி உயர் தரத்திற்கு (Supra – Grade) உயர்த்தியது.

வடமாகாண ஆசிரியர் சங்கத்திலும், அதிபர் சங்கத்திலும் அமரர் சபாரத்தினம் பணியாற்றிய காலம் சங்கத்தின் பொற்காலமாகும். இந் நாட்டின் கல்வியில் மாற்றம் கொண்டுவரப்பட்ட காலங்களில் தொழிற் சங்க ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் தெரிவித்த கருத்துக்களும் ஆலோசனைகளும் கல்வி அமைச்சின் கவனத்தைப் பெற்றது. உள்நாட்டிலும் உலக நாடுகளில் நடைபெற்ற தொழிற்சங்க கருத்தரங்குகளிலும் கல்வி அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து ஆசிரியர்களின் உரிமைக் காகவும், பண்புசார் கல்வியை மாணவருக்கு வழங்குவதற்காகவும் காத்திரமான கருத்துக்களை வழங்கினார்.

தொழிற்சங்கவாதியாக கல்வி அமைச்சுடனும், கல்வித்திணைக்கள அதிகாரி களுடனும் மோதலை விரும்பவில்லை. ஆனால் சரணாகதி அடையவில்லை. பேச்சுவார்த்தை மூலம் கோரிக்கைகளை வென்றெடுக்கலாம் என்பதனை நிரூபித்தவர். ஆசிரியர்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காது சமரசத்துடன் நயமாகப் பேசும் பக்குவம் மிக்கவர். கௌரவமான சமாதானத்தை விரும்பியவர்.

“சிங்களம் மட்டும்” மசோதா தொடர்பாக அன்றைய பிரதமர் திரு S.W.R.D.பண்டாரநாயக்காவை சந்தித்த சங்கத் தூதுக்குழுவில் இடம்பெற்றவர். மசோதா வினால் ஏற்படவிருக்கும் பாதகமான விளைவுகளை தூதுக் குழுவினர் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது பிரதமர் அக் கருத்துக்களை அக்கறையுடன் வரவேற்காமல் விட்டதால் நாடு இன்று சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதாக தன் நூலில் குறிப்பிடுகின்றார்.

திரு I.M.R.A. இரியகொல்ல கல்வி அமைச்சராக இருந்த வேளை சங்கத் தூதுக் குழுவினர்கள் ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்த பொழுது அமைச்சர் கோவையை பொறுமையுடன் கையாளத் தவறிய வேளையிலும், கோவையைக் கையிலெடுத்து நிதானம் தளம்பாமல் கோவையில் உள்ள விடயங்களை கௌரவ கல்வி அமைச்சருக்கு எடுத்துக் கூறி சங்கத்தின் கோரிக்கைகள் வெற்றி பெறச் செய்தமையையும் குறிப்பிட்டு ள்ளார். இந் நிகழ்விற்குப் பின்னர் வெளிவந்த அதிபர் பதவி உயர்வுப் பட்டியலில் திரு சபாரத்தினம் அவர்களின் பெயர் இல்லாமை கல்வியில் அக்கறையுள்ள அனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது எனவும், தனது அதிபர் பதவிக்கான போராட்டம் கசப்பானதாகவும் நீண்டதாகவும் இருந்தும் இறுதியில் நீதி கிடைக்கப் பெற்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளை அரசு பொறுப் பேற்பதன் மூலம் பாடசாலைகளில் காணப்படும் குறைகளை நிறைவு செய்யலாம் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தவர். இவ்விடயம் தொடர்பாக சபாரத்தினம் தலைமையிலான குழு, தயாரித்த மகஜரை அரசாங்கத்தின் நிபுணர் குழுவிடம் கையளித்தது. இம் மகஜரில் உள்ள சில விடயங்கள் 1961ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்விச் சட்டத்தில் மாற்றமின்றி உள்ளடக்கப்பட்டது.

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக ஜெனீவா, ரோம், சூரிச், டெல்கி ஆகிய நகரங்களில் நடைபெற்ற சர்வதேச மகாநாடுகளில் பங்குபற்றினார். உலக ஆசிரியர் மகாநாட்டில் (WCOTP) "Public Support for Education" எனும் தலைப்பில் உரையாற்றி மேடையிலிருந்து இறங்கி வருகின்றபோது நிறைவான கரகோசம் வழங்கப்பட்டது. இக் கரகோசம் தன் கடின உழைப்பில் உருவாகிய தன் உரைக்கு கிடைத்த அங்கீகாரம் எனக் குறிப்பிடுகின்றார். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுவில் அடுத்த ஆண்டில் நடைபெற்ற வருடாந்த மகாநாட்டிற்கு பிரதிநிதியாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது மாத்திரம் அல்லாது இலங்கைக்குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாநாட்டின் பின்னர் வெளியிடப்படும் அறிக்கையில் சில நாடுகள் மாத்திரம் குறிப்பிடப்படுவது வழமை. ஆனால் இந்த அறிக்கையில் இலங்கைப் பிரதிநிதி நமசிவாயம் சபாரத்தினம் அவர்களின் கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தது என சில கருத்துக்கள் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் "இலங்கை ஆசிரியர்" தேசிய ஆசிரியர் சங்கத்தின் "குரு" பத்திரிகைகளின் ஆசிரியராக கடமை ஆற்றியவர். ஆசிரியர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் குரலாகவும் ஆசிரியர்களின் உரிமைகளை வெளிக் கொணர்வதற்கு ஒரு ஊடகமாகவும் இப்பத்திரிகைகளை உருவாக்கினார்.

திரு சபாரத்தினம் அவர்களின் தகுதி, அனுபவம், கல்விச்சேவை என்பனவற்றைக் கருத்தில் கொண்டு "பிரிட்டிஷ் கவுண்சில் (British Council)" இங்கிலாந்திலுள்ள Cardiff Summer School க்கு தனது துறையின் நுணுக்கங்களை கற்றறிந்து ஆராய்ச்சி செய்வதற்கான புலமைப்பரிசில் வழங்கியது.

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஈழநாடு ஸ்தாபகர் திரு K.C தங்கராசா அவர்களின் அழைப்பை ஏற்று, ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக பதவியை ஏற்றார். அன்னாரின் ஆசிரிய தலையங்களால் ஈழநாடு பத்திரிகை பிரபல்யமடைந்தது. ஆழமான கருத்துக் களை அவைக்குரிய வீரியம் மிக்க சொற்களால் எடுத்துரைக்க வல்ல முற்போக்கு சிந்தனையும், துணிச்சலும் நிறைந்த பத்திரிகை ஆசிரியர். ஈழநாடு ஆசிரியர் தலையங்கத்தின் மூலம் தன் சிந்தனைகள் இலட்சியங்களை பகிர்ந்து கொண்டதன் மூலம் வாசிக்கும் மக்களுக்கு அறிவூட்டினார். பத்திரிகையில் எழுதிய கருத்துக்கள் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தியது மட்டுமன்றி அவரது எண்ணங்களை ஒழுங்குபடுத்தியது. மக்களை விழிப்படையச் செய்தது. இன்னல் சூழ்ந்த வேளையில் அன்னாரின் எழுத்தாற்றல் தழம்பிய மனநிலையுடன் வாழ்ந்த மக்களுக்கு உற்சாகம் தந்தது. பாராட்டுகள் குவிந்தன. ஏளனங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுறுத்தல்களும் கூடவே வந்தன. பல மொழிகளிலும் கற்ற காவியங்கள், காப்பியங்கள் தேவாரம், திருவாசகம், பகவத்கீதை, பைபிள் என்பனவற்றில் பொதிந்திருந்த கருத்துக்கள் ஒரு சுனையாக (Fountain) ஆசிரிய தலையங்கத்தில் சொரிந்தது. அதிகா லையில் பொதுமக்கள் ஈழநாடு பத்திரிகையின் வருகைக்காக காத் திருப்பர். அமரர் சபாரத்தினம் அவர்களின் சிந்தனைத் தெளிவும் ஆழ்ந்த கருத்துக்களும் துணிச்சல் நிறைந்த தலையங்கங்களும் "ஊடரங்கு வாழ்வு" எனும் பெயரில் தொகுத்து நூலாக்கப்பட்டது. வரலாற்றினை எழுத விரும்புவர்களுக்கு வரலாற்றினை அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கு இத் தலையங்கங்கள் மதிப்பு மிக்கனவாக அமைந்திருந்தது. உண்மையை உண்மையாக உறுதி மிக்கவராக எழுதினார். மெல்லிய ராயினும் திண்ணியராய் சஞ்சலமின்றி அன்னாரின் பேனா வலுமிக்க கருத்துக்களுடன் நகர்ந்தது.

அவர் எழுதிய நூல்கள்

1. ஊரடங்கு வாழ்வு
2. நமது நோக்கு
3. National Education – Its Concept and Content
4. Corridors of Peace

திரு ஹண்டிப் பேரின்பநாயகம் அவர்களின் பேச்சுக்கள், எழுத்துக்கள், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அவர்களினதும் நூல்களையும் வெளியீடு செய்தார்.

ஈழத்துச் சிதம்பர நடராஜப் பெருமானை பக்தி சிரத்தையுடன் வணங்குபவர். சிவ நடனம், ஆருத்திரா தரினம் என்பவற்றைக் கண்டு களிப்பவர். நடராஜப் பெருமானின் அழகுறு தோற்றம், விஞ்ஞானம், சமயம், கலை ஆகியன இரண்டறக் கலந்து உருவானது என உள்ளுற உணர்ந்தார். திரு சபாரத்தினம் அவர்களின் சொற் பொழிவுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கவுன்சில் [Council] உறுப்பினராக இருந்து தெரிவித்த அனுபவங்கள் நிறைந்த கல்விசார்ந்த கருத்துக்கள் வரவேற்கப்பட்டன, மதிக்கப்பட்டன.

தமிழர் வாழ்வு, அரசியல் புதிய பரிணாமம் பெற்ற வேளை அனைத்து நிகழ்வுகளையும் தன் பரந்த அறிவின் ஊடாக சீர்தூக்கி ஆராய்ந்து தன் கருத்துக்களை Corridors of Peace எனும் நூலில் பதிவிட்டுள்ளார்.

நாட்டின் அமைதியின்மை துன்பங்கள், துயரங்கள் மனவடுக்கள் நிறைந்த நோயுள்ள எதிர்காலச் சமூகம் ஒன்றை எங்கள் மத்தியில் உருவாக்கி யுள்ளது. இவர்களுக்கு மீண்டும் கல்வி வழங்கி இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் எதிர்காலம் எதிர்கொள்ள விருக்கும் சவால் மிக்க பணி எனக் குறிப்பிடுகின்றார்.

தேச பிதா மகாத்மா காந்தி, கவிஞர் தாகூர், இந்தியப் பிரதமர் நேரு, இந்திய ஜனாதிபதி சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், மூதறிஞர் ராஜாஜி, ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் போன்ற தலைவர்களின் தரிசனமும் தொடர்பு களும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் தலைவர் ஹண்டிப் பேரின்பநாயகம், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ஆகியோரின் தொடர்புகளும் இளைஞர் காங்கிரஸின் செயற்பாடுகள், இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் அன்னார் பெற்ற கல்வி என்பன அமரர் சபாரத்தினம் அவர்களின் ஆளுமை உருவாக்கத்திற்கு காரணமாயின.

போர், வன்முறை, சந்தர்ப்பவாதம் நிலையற்ற தன்மை நிறைந்த வேளையிலும் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் வசித்து வந்தார். ஒரு சிரேஷ்ட பிரஜை என்ற வகையிலும் அர்ப்பணிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க கல்வியாளர் என்ற வகையிலும் தனது ஆழ்ந்த நம்பிக்கைகள், பெறுமானங்கள் (Value) என்பனவற்றை தியாகம் செய்யாது உறுதியுடன் வாழ்ந்து வந்தார். 1992ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ம் நாள் விரதம் அனுஷ்டித்து ஆலயம் சென்று மதிய போசனம் அருந்திய பின் வாசித்துக் கொண்டிருந்த வேளை இவ்வுலகை விட்டு நீந்தார்.

Man becomes great exactly in the degree
In which he works for the welfare
Of his fellow men.

மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அமரர் சபாரத்தினம் மேற்குறிப்பிடப்பட்ட காந்தியின் பொன்மொழியை அர்த்தம் உள்ளதாக ஆக்கும் வகையில் வாழ்ந்தார். காலத்தால் காவுகொள்ள முடியாத பெறுமதி மிக்க செயல்களுக்கும் கருத்துக்களுக்கும் உரித்தான அமரர் சபாரத்தினம் அவர்களின் மேன்மை என்றும் நினைவு கொள்ளத் தக்கவை.

அவைகள் தோறும் அதி சிறந்த தலைவராக வாழ்ந்தவர்
சபையினிக்க மொழிகள் பேசி சாந்தி நிலவச் செய்தவர்
அசைந்து ஆடும் அம்பலவன் அடியை ஒற்றிப் பணிந்தவர்
அறிவுலகை மேதையாக அரும்பணிகள் செய்தவர்.
என் சபாவின் புகழ் என்றென்றும் வாழ்க

ஆ. கல்யாணசுந்தரேசன்

**உசாத்துணை நூல்கள்..**


1. Corridors of Peace
2. எம்மை வாழ வைத்தவர்கள் - திரு பொ. கனகசபாபதி
3. சபாரத்தினம் நினைவுமலர் – கனடா
4. சபாரத்தினம் நினைவுமலர் – யாழ்ப்பாணம்


★★★★★



The author representing the ACUT at an International Conference



The author representing 'Eelanadu' with President Premadasa in Jaffna

நன்றி – Karainagar.co

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

திரு P. *திருஞானசம்பந்தன்*



கலாநிதி கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை இலங்கை நாட்டின் வட பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ள அழகான தீவுகளில் ஒன்றான காரைநகரில் உள்ள பிட்டியோலைக் கிராமத்தில் பிறந்து, தனது பெயருக்கு முன்னால் "காரை" என்னும் ஊர் பெயரை இணைத்துக் கொண்டு தமிழ் பணிகளில் ஈடுபட்டு, தமிழ் சமூகத்துக்கே பெருமை சேர்த்த ஒரு தமிழறிஞர். இலங்கையில் பிறந்த பெருமை மிக்க தமிழறிஞர்களுள் கலாநிதி காரை. செ. சுந்தரப்பிள்ளை அவர்களும் ஒருவராவார். காரைநகர் மண் பல கல்விமான்களைப் பெற்றெடுத்துள்ளது. அவர்களுள் தமிழ் அறிஞர்கள் வரிசையில் முதலில் உள்ளவர் இவர்.

கவிஞர், எழுத்தாளர், ஆய்வாளர், பத்திரிகை ஆசிரியர், நாடக நடிகர் என பல துறைகளில் காட்டிய ஈடுபாட்டினால் தமிழ் மொழிக்கு மேலும் உயர்வை வழங்கினார் என்று கூறினால் அது மிகையாகாது. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் தமிழ் மட்டுமல்லாது, சிங்களப் பாரம்பரியங்களைப் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்த இவர் கல்லூரி அதிபர், கலாசாலை விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை அதிபர் போன்ற பல்வேறு கல்வித்துறைசார் பதவிகளை வகித்தவர்.

அவர் செய்த இலக்கியப் பணிக்காக சாகித்ய மண்டலப் பரிசை இரண்டு தடவை பெற்றது உட்பட பல பரிசில்களைப் பெற்றுள்ளார். இவர் காரைநகர் முற்றத்தில் மலர்ந்த மல்லிகை. ஆனாலும் அவரது நறுமணம் தமிழ் உலகம் பூராவும் பரவியது. பிற்காலத்தில் பல தமிழ் அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் தங்களின் பெயருக்கு முன்னால் காரை என்னும் மகுட வாசகத்தினைப் போடுவதில் ஈடுபட்டார்கள். ஆனால், காரை என்று அழைத்தால் அது விசேடமாகச் சுந்தரம்பிள்ளை அவர்களைத்தான் இன்றுவரை குறித்துநிற்கின்றது.

அன்பும் பண்பும் நிறைந்த இந்த தமிழறிஞர், தனது சக சிந்தனையாளர் களால் மிகவும் மேன்மையுடன் மதிக்கப்பட்டவர். உயர்தர மற்றும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் போது மாணவர்கள் மீது அன்பும் பரிவும் காட்டுவார். மாணவர்கள் அவரை "காரை சேர்" என்றே அழைப்பார்கள். சக ஆசிரியர்களும் அவ்வாறே அழைப்பர். காரைநகர் கிழக்கில் உள்ள பிட்டியோலைக் கிராமத்தில் சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளியான செல்லர் மற்றும் தங்கம் தம்பதிகளுக்கு மூன்றாவது பிள்ளையான காரை, சிறுவயது முதல் கல்வியில் சிறந்து விளங்கினார். அவர் ஆரம்பக் கல்வியை ஊர் பாடசாலையான ஊரி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் பயின்றார்.

அவர் தனது இரண்டாம் நிலைக் கல்வியை அக்காலத்தில் மிகவும் பிரபலமான கல்லூரியான ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பயின்றார். அங்கு ஆங்கில மொழி மூலம் கல்வி போதிக்கப்பட்ட காரணத்தினால் அவரும், உடன்கற்றவர்கள் அனைவரும் ஆங்கிலப் புலமையுள்ளவர்களாக இருந்தார்கள். இவர்களது கிராமத்தில் இருந்து நான்கு பேர் இந்தப் பாடசாலைக்கு இரண்டாம் நிலைக் கல்வி கற்பதற்காக சென்றார்கள் இவர்கள் நால்வரும் ஆங்கில மொழித் திறமை உள்ளவர்களாகவும் மற்றும் அரசாங்க உத்தியோகங்களில் பதவி வகித்தவர்களாகவும் இருந்தனர். அந்தளவுக்கு இந்தப் பாடசாலை ஒரு தரமான பாடசாலையாக அப்போது மிளிர்ந்தது. இப்பாடசாலைக்கு அவர்கள் கடல் கடந்தே செல்ல வேண்டும். அப்போது "மச்சுவாய்" என அழைக்கப்படும் சிறிய படகுகளில் ஏறியே பிரயாணம் செய்வார்கள். அந்தப் படகுகள் இயந்திரம் பொருத்தப்பட்டவையல்ல. அதன் ஓட்டிகள் தண்டுமரம் என்னும் உபகரணத்தைப் பயன்படுத்தியே வலித்துக் கொண்டு படகுகளைக் கரை சேர்ப்பார்கள்.

பின்னர் உயர்கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் பயின்றார். காரைநகரில் இரண்டாம் நிலைக் கல்விக்காக இரண்டு பாடசாலைகள் இருந்வருகின்றன. இவர்களின் இரண்டாம் நிலைக் கல்விக்காக பெற்றோர் காரைநகர் இந்துக் கல்லூரிக்கு விண்ணப்பித்தபோது, அந்தப் பாடாசாலை நிர்வாகம் அவருக்கு அனுமதி மறுத்திருந்தது. ஆனால் பிற்காலத்தில் தனது கல்வியை நிறைவு செய்த கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தனக்கு அனுமதி மறுக்கப்பட்ட பாடசாலைக்கே அதிபராக நியமனம் பெற்றமை அவரின் கல்வித் திறமைக்கு கிடைத்த கௌரவமாகும்.

தனது கல்வியில் லண்டன் கலைப்பட்டதாரி, முதுகலைமாணி, கொழும்பு பல்கலைக்கழகத்தில் நாடகத் துறை டிப்ளோமா பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பெற்று தனது கல்வியின் தரத்தை மேலும் மேலும் உயர்த்தினார். "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்னும் கூற்றுக்கு அமைவாக மேலும் மேலும் கற்பதிலும் ஆய்வுகளிலும் ஈடுபட்டார்.

தமிழ் இலக்கியத் துறைக்குள் நுழைந்தபோது ஆரம்பத்தில் தன்னை ஒரு கவிஞராகவே அறிமுகம்படுத்தினார். புகைவண்டி என்ற இவரது முதலாவது கவிதை அழ. வள்ளியப்பாவின் பூஞ்சோலை என்ற இதழில் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து "பூஞ்சோலை" யிலும் "கண்ணன்" எனும் சிறுவர் சஞ்சிகையிலும் பல கவிதைகள் வெளி வரத்தொடங்கின. அதனைத் தொடர்ந்து இலங்கைப் பத்திரிகைகளிலும் கவிதை களும் கட்டுரைகளும் வெளிவரலாயின. நாடகத் துறையிலும் பல ஆய்வுகளை மேற்கொண்டார்.

அவர் பிறந்து ஒரு வருடத்தின் பின்னர், இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமானது. உலக மக்கள் முகம்கொடுத்த சமூக நெருக்கடிகளில் அவர் பிறந்து வாழ்ந்த சமூகமும் தப்பவில்லை. அதேபோல அவரின் 45வது வயதில் இலங்கையில் கொடூரமான யுத்தம் ஆரம்பித்தது. அந்த யுத்த சூழ்நிலைக்குள்ளும் வாழ்ந்து கொண்டு தனது இலக்கியப் பணிகளையும் மற்றும் கற்பித்தல் பணிகளையும் மேற்கொண்டு வந்தார். 1990களில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்தபோது, அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்குக்கு பொருளாதார தடைகளை விதித்திருந்தது. எரி பொருளுக்கு மிகப்பெருந் தட்டுப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியபோது, எல்லோரும் சைக்கிள்தான் பாவித்தார்கள். கவிஞர் காரையும் சைக்கிளில் பல மைல்கள் தூரம் ஓடியே தனது கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

அரசாங்க நிறுவனங்கள் மட்டு மல்ல பல தனியார் நிறுவனங்களும் அவரின் ஆசிரியப் பணியை வேண்டி நின்றன. அவ்வாறு தான் கற்பித்த தனியார் நிறுவனங்களில் பணம் செலுத்தி படிக்க முடியாத மாணவர்களை, நிறுவன அதிகாரிகளுடன் பேசி இலவசமாக கற்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

ஒரு இலக்கிய கர்த்தாவாக இருந்த போதிலும், அரசியல் பக்கமும் அவர் தனது கவனத்தினை செலுத்தி யிருந்தார். சமூகத்தில் அவருக்கு இருந்த செல்வாக்கினைக் கருத்தில் கொண்டு, 1970களில் பிரபலமானதொரு அரசியல் கட்சியினர் அவரை தேர்தலில் நிற்குமாறு கோரிக்கை விடுத்தபோதிலும், "நான் ஒரு கவிஞனாகவே இருக்க விரும்புகின்றேன்" எனக்கு பதவிகள் வேண்டாம் என மறுத்திருந்தார்.

ஒரு தமிழ் அறிஞராக மற்றும் பேராசானாக இருந்த அவர், இலங்கையில் நடந்த யுத்தத்தினை பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கவில்லை. அதை எதிர்த்திருந்தார். 1993ல் வெளியிட்ட "காவேரி" என்னும் கவிதை நூலில் யுத்தத்தின் கொடுமை களையும் எதிர்ப்பினையும் பதிவு செய்திருக்கின்றார். அது மட்டுமல்ல தமிழ் பெண்கள் எதிர்நோக்கும் சீதனக் கொடுமை மற்றும் சமூக சமத்துவமின்மை பற்றியும் பேசியிருக்கின்றார்.

இந்த யுத்தத்தில் தனது சகோதரியின் கணவர் மற்றும் மகன் ஆகியோரை இழந்திருந்தார். இடம் பெயர்வு வாழ்க்கையை அவர் அனுபவித்தார். ஆனாலும், இந்த யுத்தப் பேரழிவுக்கு ஒரு போதும் அவர் சாதாரண சிங்களப் பொதுமக்களை குற்றஞ்சாட்டியது கிடையாது. இந்த நாட்டில் சகலரும் சமாதானமாக சமத்துவமாக வாழ வேண்டும் என கோரியிருந்தார்.

அவர் பின்வருமாறு எழுதுகின்றார்

"மனித சமுதாயம்
மண்மீது மாட்சிபெற
அமைதிகுடி கொள்ளாதோ?
அன்பு மலராதோ?
சுமைகள் இறங்காதோ?
சுபீட்சம் பிறக்காதோ?
சாதிமத பேதமெல்லாம்
தவிடுபொடி யாகாதோ?
மோதுமினச் சிக்கலெல்லாம்
முடிவடைந்து போகாதோ?
எல்லோரும் ஓர்குலமாய்
எல்லோரும் ஓர் இனமாய்
பல்லாண்டு வாழவொரு
பாதை திறவாதோ?"

("காவேரி" கவிதை நூலில் இருந்து)

என தனது எதிர்பார்ப்பினை அவர் வெளிப்படுத்துகின்றார்.

ஆகவே கலநிதி கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை சகல துறைகளிலும் கவனஞ்செலுத்திய ஒரு பேராசான் என்பதுவே உண்மையாகும்.

அவர் எழுதி வெளியிட்ட நூல்களாவன,

## கவிதை நூல்கள் :

**தேனாறு** (1968) - சாகித்திய மண்டல பரிசு பெற்றது

**சங்கிலியம்** (1970) - சாகித்திய மண்டல பரிசு பெற்றது

தவம் (1971), உறவும் துறவும் (1985)

பாதை மாறியபோது (1986), காவேரி (1993)

## ஆய்வு நூல்கள் :

**ஈழத்து இசை நாடக வரலாறு** (1990) - சாகித்திய மண்டல பரிசு பெற்றது

**இந்து நாகரிகத்திற் கலை** (1994) - சாகித்திய மண்டல பரிசு பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்** (1996) - சாகித்திய மண்டல பரிசு பெற்றது

சிங்கள பாரம்பரிய அரங்கம் (1997)

வட இலங்கை நாட்டார் அரங்கு (2000)

ஈழத்து மலையகக் கூத்துக்கள் (2006)- இறுதியாக எழுதிய நூல்

**பிற நூல்கள் :**

பூதத்தம்பி நாடகம் (2000)

விவேக சிந்தாமணி - உரைநடை

நாடக தீபம் - தொகுத்தது

உளவியல் - பதிப்பித்தது

கல்வியியல் - பதிப்பித்தது

புள்ளிவிபரவியல் - பதிப்பித்தது

**மேடையேற்றிய முக்கிய நாடகங்கள் :**

**சமூக நாடகங்கள்:** தரகர் தம்பர், தம்பி படிக்கிறான், வாழ்வும் தாழ்வும், சினிமா மோகம், சித்திரமே சித்திரமே

**இதிகாச புராண நாடகங்கள்:** பக்த நந்தனார், கர்ணன், சகுந்தலை, தயமந்தி, வில்லொடித்த விதுரன், சிற்பியின் காதல்

**ஆட்ட நாட்டுக் கூத்துக்கள்:** பாஞ்சாலி சபதம், மூவிராசாக்கள், முத்தா மாணிக்கமா, காமன் கூத்து

**சிறுவர் நாடகங்கள்:** மூத்தோர் சொல் வார்த்தை அமுதம், பாவம் நரியார்

(இக்கட்டுரைக்கு - "கவிஞர் காரை" நினைவு மலர், காவேரி, தமிழ் விக்கிப்பீடியா குறிப்புக்கள், மாதவி சிவசீலன் எழுதிய "காரைஒளி அமரர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை"- என்பவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டன-)

★★★★★







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் படைப்பாளிகளும், அவர் தம் படைப்புக்களும், ஏனைய புலமையாளர்களும்.

திருமதி எஸ். துஷிகாந்தினி

இது எனது இளமாணிப் பட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வின் ஒரு பகுதி ஆகும். இந்நூலில் ஏனைய கட்டுரை களில் இடம்பெறுகின்ற ஆளுமைக ளைத் தவிர்த்து ஏனையோர் தொடர் பான தகவல்கள் மாத்திரம் இங்கு தரப்பட்டுள்ளன.

காரைநகரின் கல்விப் பாரம்பரி யத்தினையும் இலக்கிய வளத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புலமையாளர் களின் சிறப்பியல்புகளையும், படைப்புக் களையும் நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இலக்கியம், இலக்கணம், கவிகள், புராணபடனம், பிரசங்கம் போன்ற துறைகளில் ஈடுபட்டவர்களைச் சுட்டும் அதேவேளை ஆராய்ச்சி அறிவியல் துறைகளைச் சார்ந்தோ ரையும், பண்டிதர்கள் விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் பற்றியும் நோக்கப்பட்டு உள்ளது.

## அருளப்ப நாவலர் (1680 – 1720)

காரைநகரிற் பிறந்த பூலோகசிங்க முதலியார் உள்ளூர்ப் புலவர்களிடம் ஆரம்பக் கல்வி கற்றபின் தெல்லிப்ப ழைக்குச் சென்று மேலும் கற்று மிக்க பாண்டித்தியம் பெற்றார். சமயாசாரத்தால் கத்தோலிக்கராகிய இவர் கத்தோலிக்க மதத்தவரின் பாராட்டுப் பெற்று "அருளப்ப நாவலர்" என்று தமது பெயரையும் மாற்றிக் கொண்டார். இவர் 1700 ஆம் ஆண்டளவில் பெரும் பதவியில் இருந்தார் என்று கூறுவர்.

கி.பி எட்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் சிந்து தேச அரசகுமாரரான திருச்செல்வர் என்பவர் அரசபோகத்தை வெறுத்துத் துறவு பூண்டு ஆன்மீக வாழ்வு வாழ்ந்து நற்கதியடைந்த வரலாற்றை முன்னரே ஓர் அருளப்பர் கி.பி. 773 ஆம் ஆண்டில் எழுதி வைத்தார். அந்தக் கதையை அருளப்பநாவலர் பெருங்காப்பிய இலக்கணங்கள் நன்கு அமைந்த காவியமாகத் தமிழிற் பாடினார். இது கத்தோலிக்க மதத்தவரின் பாராட்டுக்குரிய நூல். 1896 ஆம் ஆண்டில் அச்சுவேலித் தம்பிமுத்து என்னும் பத்திராதிபரால் இது அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இந்தக் காவியத்தில் இருபத்தி நான்கு படலமும், ஆயிரத்துத் தொளாயிரம் பாடல்களும் உள்ளன.

இக்காவியத்தின் சிறப்புப் பாயிரத் தில் இவரின் பிறந்த இடம், புகுந்த இடம் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

*"செல்லினருள் பெருகுதவச் செல்வா*
*ராயன் கதையைத் தேர்ந்து நுண்ணூற்*
*நுல்லியமோர்ந்திடும் புலவர் மகிழ்தாங்க*
*விருத்தத்தாற் சொற்றிட்டானால்*
*நல்லிசைநா டகவியலின் தமிழ்தெரிநா*
*வினன்சதுர நாக தீகன் தெல்லிநகர்*
*அருளப்பன் தென்காரைப் பூலோக*
*சிங்கன் தானே"*

இவர் இந்தத் திருச்செல்வர் காவியக் கதையையே அம்மானை இலக்கியமாகவும் நயம்பட இயற்றி யுள்ளார். சந்தியோகுமையர் அம்மானை என்ற நூலையும் இவர் இயற்றினாரெனக் கூறுவாருமுளர்.

## அருளம்பலவனார் சு. (1910 – 1966)

காரைநகரிலே 11-04-1910 இலே பிறந்த இவர் தமது கல்வியை முதலில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பின்னர் சுப்பிரமணிய வித்தியா சாலையிலும் பெற்றார். தமது குருவாகச் சுப்பிரமணிய தேசிகரைக் கொண்டார்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரானார். காரைநகர் உட்பட ஈழத்தின் பலபாகங்களிலும் ஆசிரியப் பணிபுரிந்துள்ளார். மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையிலே 1936 இலே திறமைச்சித்தி பெற்றார். பெரும்பாணாற்று ப்படை, பதிற்றுப்பத்து, திருவாசகம் முதலாம் நூல்களுக்கு விரிந்த உரைகள் எழுதிப் பேரும் புகழும் பெற்றார். பதிற்றுப்பத்தின் உரைவளங் கண்டு 1960 இலே இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. காரைநகர் மக்கள் இதனைப் பாராட்டி 1961 இல் விழா எடுத்துப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கி "சங்க நூற் செல்வர்" என்ற பட்டமும் அளித்தனர்.

திருவாசக ஆராய்ச்சியுரை பகுதி I, பகுதி II க்கும் சாகித்திய மண்டலப் பரிசில்கள் கிடைத்தன. இந்நூலுக்குக் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ. ஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருள் உரை வழங்கி உள்ளார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, க. வச்சிரவேறு முதலி யார், புலவர் சு. கு. அருணாசலனார், வித்துவான், சொ. சிங்கராவேலன் ஆகி யோர் இந்நூலின் சிறப்புப் பற்றி வாழ்த்துரை வழங்கி உள்ளனர்.

## அல்லின் ஏபிரகாம் சு. (1865 – 1922)

காரைநகர் பயிரிக்கூடல் பகுதியில் சுப்பிரமணியம் பார்வதியம்மைக்கு மகனாக 1865 இல் இவர் அவதரித்தார். இவரது பிள்ளைத் திருநாமம் 'அம்பலவாணர்' என்பதாகும். தமது பதினோராம் வயதில் தந்தை – தாய் இருவரையும் இழந்தவர், தெல்லிப்பளை விடுதிப் பாடசாலையிற் சேர்ந்து படித்தார். இங்கு படித்த காலத்திலேயே அம்பலவாணர் 'அலன் ஆபிரகாம்' என்னும் பெயர் சூடிக்கொண்டு கிறிஸ்துவரானார்.

கல்விப் புலமை காரணமாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்று 1883 இல் பத்திரம் பெற்று ஆசிரியரானார். பின்பு வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கில மொழி பயின்று கலை இளமாணிப் (B.A.) பட்டம் பெற்றார். 1896 இல் கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டதாரியுமானார். அக் காலந்தொட்டு B.A. , F.R.AS. வகுப்புக் களுக்குத் தமிழும், கணிதமும் படிப்பித்து வந்தார். ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை இறந்த பின்னர் உதயதாரகைப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் (1897 – 1909) விளங்கினார்.

இவர் மிக்க விவேகமும், ஆராய்ச்சித் திறனும் வாய்ந்தவர். தமது நுட்பமான அறிவினால் உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு தமது கைகளால் தொலை காட்டியை அமைத்தார். ஆகில உலக வானசாத்திர நிபுணர் சங்கம் (Royal Astronomical Society) 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வால்வெள்ளி ஒன்று தோன்றவிருக்கும் மாதம் நாள் நேரம் முதலிய விபரங்களைப் பத்திரிகைகளில் அறிவித்தது. இந்த வேளையில் சில அரைகுறை விஞ்ஞானிகள் வால் வெள்ளியின் வாலானது பூமியைத் தொடுவதன் மூலம் உலகமே அழியப் போவதாகப் பயமுறுத்தினர். எங்கள் விஞ்ஞானி அலன் அவர்கள் செயலில் இறங்கினார். அவரது நுட்பமான அளவீடுகளின் மூலம் தகவல்களைக் கண்டறிந்து வால்வெள்ளி கண்ணுக்குப் புலனாகும் மாதம், நாள், நேரம் முதலியவற்றை மட்டுமல்லாமல் அவ் வால்வெள்ளியின் வால் பூமியிலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கும் என்ற தூரத்தினையும் கணித்துப் பத்திரிகை களுக்கு அறிவித்ததன் மூலம் மக்கள் கொண்டிருந்த அச்சத்தை அகற்றினார். சர்க்சைக்குரிய வால்வெள்ளியும் தோன்றியது. உலக வானசாத்திர நிபுணர்களின் கூற்றுக்கள் அனைத்தும் பொய்யாகி அலன் ஆபிரகாம் குறிப்பிட்ட அதே திகதி அதே நேரம் அதே தூரத்தில் அந்த வால்வெள்ளி தோன்றியது. அன்றையதினம் (1910) உலகமெங்கும் அலனின் புகழ் ஒலித்தது. காரைநகர் பெற்ற தவப்புதல்வர் உலகின் புதல்வரானார். அவர் ஆக்கிய தொலை காட்டியையும், அவருடைய நுண்மாண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழை புலத்தையும் கண்டு லண்டன் வானசாத்திர நிபுணர் சங்கம் அவருக்கு F.R.A.S (Fellow of the Royal Astronomical Society) பட்டம் வழங்கிக் (1922.01.12) கௌரவித்தது. இந்த விருதினைப் பெற்ற முதல் இலங்கையர் இவரே ஆவார்.

*"எண்ணூலி லெழுத்துமுத லைந்தியலி*
*லின்புதரு மிலக்கியத்தில்*
*விண்ணூலின் பரப்பளந்து புகை வெள்ளி*
*வரவுரைத்தவித்தை தன்னிற்*
*பண்ணூலிற் சொற்பொழிவிற் பழுத்தமதி*
*மிகப் படைத்துப் பாரோ ரேத்த*
*எண்ணூற்பே ராசானா யிலங்கினனா*
*லல்லினே பிரகா மேந்தல்"*

எனும் செய்யுள் இவரது புகழை எடுத்தியம்பும்.

இவர் தமிழில் கவிதை பாடுவதிலும் வல்லவராக விளங்கினார். வானநூல் வல்லுநர் ஆகையால் "வானாதிசயங்கள்" என்னும் நூலை எழுதியுள்ளார். மது விலக்கில் ஈடுபட்டு உழைத்தமை காரணமாக 'மது விலக்குக் கும்மி' ஒன்றினையும் பாடி உள்ளார். மத அனுசாரராக இருந்து பல கிறிஸ்தவ தேவாரங்களையும், கீர்த்தனங் களையும் பாடியுள்ளார். இப்படியாக ஏராளம் பெருமைகளைக் காரை மண்ணிற்கு தேடித்தந்த அல்லின் ஏபிரகாமின் பெயரை மக்கள் இன்று அல்லின் ஏபிரகாம் வீதியினூடாக நினைவு கூருகின்றனர்.

## இரகுபதி பொ.

காரைநகர் சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் என்பவரின் மகனே இரகுபதியாவார். காரைநகர் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்ற இரகுபதி அவர்கள் வரலாற்றுத் துறையை விசேட பாடமாகக் கொண்டு பல்கலைக்கழகத்தில் கற்றுக் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றிருந்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்த இவர் இன்று மாலைதீவில் பணிபுரிகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் காலத்தில் பல்கலைக்கழக ஆதரவுடன் சி. க. சிற்றம்பலமும் இவரும் காரைநகர் சத்திராந்தையில் செய்த அகழ்வாராய்ச்சி காரைநகரின் வரலாற்றை நீண்ட காலத்துக்குரியதான ஒரு கால எல்லையைக் கொண்டதாக வெளிப்படுத்தியது. இவர் இவ்வாராய்ச்சியை வைத்து "EARLY SETTLEMENTS IN JAFFNA" என்ற புத்தகத்தை எழுதியிருந்தார். இந்நூல் சென்னையில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

இந்நூலை விட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு ந. சபாரத்தினம் அவர்கள் ஈழநாடு நாளேட்டில் எழுதிய கட்டுரைகளை "ஊரடங்கு வாழ்வு" என்ற தலைப்பில் தொகுத்து தமிழ்நாட்டில் வெளியிட்டார். தனது மதிப்பிற்குரிய அதிபரின் பெருமையை இந்நூல் மூலம் வெளிப்படுத்திக் காட்டி இருந்தார்.

## கணபதீசுவரக் குருக்கள் ச.

### (1888 – 1967)

வியாவில் ஐயனார் கோயிற் பூசைக்கென இமாமேசுவரத்திலிருந்து அழைத்து வரப்பட்ட அந்தணர் குடும்பத்தில் உதித்தவரே கணபதீசுவரக் குருக்கள். இவர் தமது தொடக்கக் கல்வியைக் காரை சுப்பிரமணிய வித்தியாசாலையில் அருணாசல உபாத்தியாயர், நாகமுத்துப் புலவர் ஆகியோரிடம் கற்றார். அல்வாய் இராமலிங்கக்குருக்களிடம் குருகுல முறையிற் சைவக் கிரியைகளைத் துறைபோகக் கற்றார்.

1915 இல் காஞ்சிபுரம் சென்று சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்றார். ஆலயக் கிரியைகளைச் செய்வதில் ஈழநாட்டில் இருந்த ஆசாரியர் பலருக்கும் முதல்வராகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிரதம குருவாக இருந்து நடத்திய குடமுழுக்கு விழாக்கள், உபநயன விழாக்கள், ஆசாரிய அபிடேகங்கள், திருமணங்கள், சாந்திகள் மிகப் பலவாகும். காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் தொடர்ச்சியாக 64 ஆண்டுகள் சேவை செய்தவர். இவருடைய கிரியை முறைகளைப் பாராட்டி மகாவித்துவான் சி.கணேசையர் அவர்கள்.

*"வடமொழி யறிவின் மிக்கு மன்னுமா*
*கமமும்தேர்ந்து*
*புடவியிற் கோயிற் கேற்ற கிரியையிற்*
*புலமை மிக்கு*
*கடமைகள் வழுவா தாற்றும் கணபதீச்*
*சரப்பேர் பூண்ட*
*குடமுனி போல்விளங்கும் குரு……"*

என்று போற்றினார். இவர் இயற்றிய நூல்களாக ஈழத்துச் சிதம்பரம் (1962), ஆன்மதரிசனம் (1967), திருவூடல் (1964), ஆத்மயாத்திரை (1965) முதலியவற்றைக் கூறலாம். 'ஈழத்துச் சிதம்பரம்' என்ற பெயரில் குருக்களவர்கள் எழுதிய நூல் சமய வரலாற்றுப் பிரியர்களுக்குப் பெரு விருந்தாய் அமைந்துள்ளது. ஈழத் தமிழர்களின் வரலாற்றை அறிய விரும்புவோர்க்குப் பல முக்கியமான செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்தியா, இலங்கைப் பத்திரிகைகள் பலவும் இலங்கை வானொலியும் சைவத் தமிழ் அறிஞர் பலரும் இந்நூலைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். இந்து சாதனம், ஞான தீபம், சுவதரும போதம் போன்ற பத்திரிகைகளில் குருக்களவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

இவர் இல்லத்தில் ஆயிரக் கணக்கான நூல்கள், ஏடுகள், பத்ததிகள், சமஸ்கிருத இலக்கியங்கள் என்பன காணப்பட்டன. மற்றையோரிடம் இல்லாத அபூர்வ ஏடுகள் இவரிடமுள்ளன. சைவ சமயத்துக்கு இவர் செய்த சேவைகளைப் பாராட்டிக் குருமார் சபையும் அபிமானிகளும் 21-10-1962 இல் பெரிய விழா எடுத்துப் பொன்னாடை போர்த்திப் பொற் பதக்கம் சூட்டி "வேதாகம கிரியா பூசனம்" என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தனர்.

இவரின் மறைவின் பின் இவர் பேணிப் பாதுகாத்த நூல்கள் மக்களுக்குப் பயன்பெறும் வகையில் குருக்களவரின் மகன் தத்துவக் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின் அயராத முயற்சியால் வியாவில் ஐயனார் ஆலய வளாகத்தில் "கணபதீஸ்வக் குருக்கள் நூலகம்" நிர்மாணிக்கப்பட்டு சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

## கார்த்திகேயப்புலவர் மு. (1819 – 1898)

காரைநகர் முருகேசையரின் புதல்வராகிய இவர் தமது தந்தையிடம் ஆரம்பக் கல்வியையும், சுவாமிநாத தேசிகரிடமும், சண்முகச் சட்டபியாரிடமும் முறையே வடமொழியையும், தமிழையும் கற்றிருந்தார். அத்துடன் இருபாலைச் சேனாதிராச முதலியாரையும் குருவாகப் பெறும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இவர் பதினைந்தாவது வயதில் ஏட்டில் அட்சரசுத்தியாக வடிவாக எழுதும் பயிற்சியுடையவரானார். 1889 ஆம் ஆண்டிலே இலண்டன் மாநகரத்தில் நடைபெற்ற சர்வபொருட்காட்சிச்சாலைக்கு இவரால் ஏட்டில் எழுதப்பட்ட திருக்குறள், நாலடியார், நிகண்டு ஆகியன பார்வைக்கு வைக்கப்பட்டு மெச்சப் படலாயிற்று. ஊர்காவற்றுறை நீதிபதி கு.கதிரைவேற்பிள்ளை மூலம் ஏடுகள் அனுப்பப்பட்டன.

தந்தை முருகேசையர் இயற்றிக் குறையாக விட்ட தன்னை யமக அந்தாதியின் 71 தொடக்கம் 100 வரையான பாடல்களைத் தமது பதினாறாவது வயதிற் பாடி நிறைவு செய்தார். 'வரகவி' என்று அறிந்தோர் போற்றும் வண்ணம் விளங்கிய இவரின் அற்புதமான புலமையை வியந்து புகழ்பெற்ற கங்காதர சாத்திரியார் 'புலவர்' என்ற பட்டம் இவருக்குச் சூட்டினார். தந்தை முருகேசையர் பாடி வைத்திருந்த குருகேத்திர நாடகத்தைத் திருத்தியும் புதுக்கியும் விளக்கியும் இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி அரங்கேற்றினார். பலரும் வேண்டியபடி இவர் சூரபத்மன் நாடகம், சந்திர வண்ணன் நாடகம் முதலியவற்றை ஆக்கி அரங்கேற்றினார்.

இவர் மக்களின் ஒத்துழைப்போடு சைவப் பாடசாலைகளைக் கட்டிச் சைவப் பிள்ளைகள் சைவ சமயக் கல்வி பெற வழி காட்டியதோடு "கிறிஸ்துமத குடாரம்" என்னும் கண்டன நூலையும் எழுதிப் பரப்பினார். வண்ணைத் திரிபந்தாதி, திக்கைத் திரிபந்தாதி, திருப்போசை வெண்பா, நகுலேசர் யமக அந்தாதி, தில்லைப்பல்சந்த மாலை போன்ற நூல்களையும் எழுதினார். சோதிட நூலாகிய விதானமாலைக்கு உரையெழுதிப் பதிப்பித்தார்.

புலவரது ஆக்கங்களுள் தலைசிறந்ததாக அறிஞர் திண்ணபுர அந்தாதியைப் போற்றுவர். இந்நூல் திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் மேற் பாடப்பட்டது. இதற்குச் செஞ்சொற் கொண்டல் கலாநிதி சிங்காரவேலன் அவர்கள் "செஞ்சொல் விளக்கம்" என்னும் பெயரில் இனிய உரை எழுதியுள்ளார். இவரின் திக்கைத் திரிபந்தாதிக்குப் பணடிதர் க. மயில்வாகனம் அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார்.

*"பாவத்துக் கிறையுமஞ் சாமற்*
*பொருளைப் பலவிதமாய்*
*அவத்துக் கிறைத்துத் திரியும் அசடர்க*
*ளேயுயர்பா*
*தவத்துக் கிறையை வளைத்தோன்*
*மகன்றனைச் சண்முகனைச்*
*சிவத்துக் கிறைவனைத் திக்கைய*
*னைத்தெரி சித்துய்யுமே"*

திக்கையந்தாதியில் உள்ள இச்செய்யுள் புலவரின் கவித்துவ ஆற்றலையும், சைவ சித்தாந்தப் புலமையையும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகுந் தன்மை போலக் காட்டும்.

இவர் தமது எழுபத்தொன்பதாவது வயதிலே தமக்கு அந்திய காலம் கிட்டியதை உணர்ந்து தமது குடும்பத்தார், உறவினர், மாணவர்களை அருகில் அழைத்து, நல்ல புத்திமதிகள் கூறி "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ...." என்ற அப்பர் திருத்தாண்டகத்தைப் பாடச் செய்து தாமும் பாடிக்கொண்டே பரகதி அடைந்தார். எனவே புலவரவர்கள் சிறந்த கவிஞராக, இலக்கிய கர்த்தராக, நாடக ஆசிரியராக, சைவசமயப் பாதுகாவலராக சோதிடக் கலை விற்பனராக, சிறந்த நூற் பதிப்பாசிரியராக, நல்ல ஆசானாக, அருளாளராக விளங்கியுள்ளார்.

## குமாரசாமி வே.

இவர் 1947.07.03 இல் காரைநகர் சடையாளியில் பிறந்தார் புலவர் குமாரசாமி அவர்கள் தமது மூதாதையரின் கல்வி நிலையமான வலந்தலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்று காரைநகர் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியினைப் பெற்றார். தந்தை வேலுப்பிள்ளை ஆசிரியரைப் போன்று பிறப்பிலிருந்தே இவரும் ஒரு இயற்கைக் கவிஞர் ஆவார். கவிதை எழுதுவதன் மூலம் இலக்கியத்துறையில் காலடி பதித்த இவர் ஆலயங்களுக்கான பதிகங்கள், பாட சாலைக் கீதங்கள், சமூக வாழ்த்துப் பாக்கள் என்பவற்றை எழுதி வருகின்றார்.

*"வாழிய வாழிய வாழியவே*
*வாழிய வாழிய வாழியவே – காரைநகர்*
*என்றும்*
*செயற்கரிய செய் பிரதேச செயலகம்*
*செப்பரியசெய் பிறசெயல் மிகு பணியகம்*
*உயர்வான விருத்தியாம் நல் அபிவிருத்தி*
*ஓங்க*
*உண்மை நேர்மை ஊமதில் செழித்தி..."*

என்ற காரைநகர் பிரதேச செயலக கீதம், இது போன்று வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலய கீதம், நீலிப்பந்தனை ஸ்ரீ துர்காதேவி பயனைப் பாடல், திண்ணபுரம் ஐயனார் பாடல்கள், தினகரன் பிட்டி வைரவர் ஊஞ்சல், அத்திபுரக்கந்தன் திருப்புகழ், ஊரி பழனி முருகன் ஊஞ்சல் என ஏராளம் பாடல்கள் இயற்றிய புலவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தில் நடந்த திருமுறை விழாவில் சிறப்பாக திருமுறைக் கவியரங்கம் நடாத்திப் பெரும் புகழ் பெற்றவர். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய கலை இலக்கியப் பெரு விழாவில் நல்லை ஆதின முதல்வர் முன்னிலையில் அப்போதய உதவி அரசாங்க அதிபர் திரு. வே. சாம்பசிவம் அவர்களால் "கலைச்சுடர்" என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார்.

இவ்வாறாக "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற சீரிய கொள்கையுடன் சமூக சேவைகள், சமய தொண்டுகள், இலக்கிய பணிகள் எனப் பற்பல துறைகளில் நிறைவான சேவை செய்து வாழ்ந்து வருகிறார்.

## சண்முகம் அ.

காரைநகரிற் பிறந்து வளர்ந்து கல்வி கற்று மலாயாவில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறியதும் பிறந்தகம் வந்தார். இங்கு நகை அடைவு பிடிக்கும் தொழிலைச் செய்ததுடன் பொதுச் சேவையிலும் ஈடுபட்டார். ஈழத்துச் சிதம்பர உள்வீதி மண்டபம் அவரது உபயமாக இருப்பதுடன் கோவில் திருப்பணிச் சேவையில் காலமும் பொருளுஞ் செலவு செய்பவராயினர். இதன் விளைவாக "காரைநகர்த் திண்ணபுரம் சுந்தரேசுவார் ஆலய உற்பத்தி வரலாறும் திருப்பணி வேண்டுகோளும்" என்ற நூலினைப் பிரசுரித்துத் திருப்பணி புரிந்தவர்.

## சபாபதி ச. (1908 – 1989)

சங்கரப்பிள்ளை வள்ளியம்மையின் புத்திரனாகிய இவர் ஆரம்பக் கல்வியைக் காரைநகரிலும், இடைநிலைக் கல்வி யைத் தெல்லிப்பழையிலும் பெற்ற பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் கற்று 1928 ஆம் ஆண்டிற் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். இவர் பால பண்டித பரீட்சையிலும் சித்தியடைந்திருந்தார். நொத்தாரிசு பரீட்சையிலும் சித்தி பெற்றிருந்தார். பல இடங்களில் ஆசிரியப் பணி புரிந்ததுடன் இலங்கைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து மூன்று ஆண்டுகள் கற்றுத் தமிழ் டிப்புளோமா பட்டம் பெற்று வித்துவான் ஆயினார். இவரைக் கல்வித் திணைக்களம் வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமித்தது.

சேவையிநின்றும் ஓய்வு பெற்ற பின்பு அவர்கள் ஆன்மீகத் துறையில் முன்னையிலும் தீவிரமாக ஈடுபட்டார். இராமகிருஷ்ணர், விவேகானந்தர், சித்பவானந்தர் போன்றோரின் அருள் மொழிகளைத் தொடர்ந்து படித்து இன்பங்கண்டார். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டுமென்ற உயரிய நினைவில் அவ்வருள் மொழிகளில் பலவற்றைத் திரட்டி "அருள்நெறித் திரட்டு" என்னும் நூலையாக்கி பலருக்கும் இலவசமாக வழங்கினார்.

## சபாரத்தின ஐயர் மு. (1880 – 1935)

தமிழ்நாட்டின் சீர்காழிப்பதியில் இருந்து இங்கு வந்த கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்தவரே முத்துக் குருக்கள். இவரின் மூத்த புத்திரனே சபாரத்தின ஐயர். இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவர். தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்காகக் காரைநகரில் மாணிக்கவாசக அச்சியந்திர சாலையை நிறுவினார். தனி யொருவராகவே நின்று "கலிகால தீபம்" என்னும் பத்திரிகையையும் நடத்தினார். 1924 ஆம் ஆண்டு முதன் முதலில் காரைநகரிலிருந்து இப் பத்திரிகையை வெளியிட்ட பெருமைக்குரியவர். ஆலயந்தோறும் சென்று புராணபடன விரிவுரை செய்து வந்த இவர் ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேசுவரப் பெருமான் மீது திருவூஞ் சலும் பாடியுள்ளார். இந்நூல் 1923 ஆம் ஆண்டில் கணபதீசுவரக் குருக்களாற் பதிப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாரத்தினம் ஆ.

களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வியை மலேசியாவில் உள்ள கோலாம்பூரில் கற்றார். ஆங்கிலத்தில் நல்ல திறமை கொண்டவர். இவர் The Divine Luminous Wiz Dom என்ற நூலை மொழிபெயர்த்துள்ளார்.

## சபாரத்தினம் மு. (1924 – 1989)

முத்தையா சின்னக்குட்டி தம்பதியினரின் புத்திராகிய இவர் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பின் இந்துக் கல்லூரியிலும் கற்று சி.பா.த பரீட்சையிலே தேறினார். தமிழகம் சென்று தஞ்சாவூர், சென்னைப் பல்கலைக் கழகங்களிற் படித்து வித்துவான் பட்டதாரியானார். கற்கும் காலத்திலேயே சொல் வன்மையிற் சிறந்து அகில இந்திய ரீதியில் நடைபெற்ற நாவன்மைப் போட்டியிலே முதலிடம் பெற்றார்.

1984 ஆம் ஆண்டில் அவரின் தமிழ், சமய, சமூக சேவைகளைப் பாராட்டிக் காரைநகர் மக்கள் மிகச் சிறந்த முறையில் மணிவிழா நடத்தி "செஞ்சொல் வாரிதி" என்ற விருது சூட்டி, பட்டும், பொன்னும் வழங்கிச் சிறப்பித்தனர். தொடர் சொற்பொழிவுகள் செய்து 'சைவமணி' 'சித்தாந்தச் செம்மல்' என்னும் விருதுகளையும் பெற்றார். ஈழத்தில் புகழ் பூத்த ஆலயங்களில் சமய சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று பிரசங்கங்கள் பல செய்து புகழ் பெற்றவர்.

"ஆண்டிகேணி ஐயனார்" என்னும் நூலை 1987 இல் எழுதி வெளியிட்டதுடன் காரைநகரில் 'பால அச்சகம்' எனும் பெயரில் அச்சகம் ஒன்றை நிறுவி அதன் மூலம் தான் ஆக்கிய பல நூல்களை அச்சிட்டுச் சைவத்துக்கும், தமிழுக்கும் பெருந் தொண்டாற்றினார்.

## சம்பந்தன் தி.

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எழுத்தாளராக வேண்டுமென்ற ஆவலில் "கலைச் செல்வி" என்ற மாத வெளியீட்டில் பணிபுரிந்தார். அதனால் எழுதும் ஆற்றலும், ஆவலும் பெற்றார். இந்து கலாசார அமைச்சராக விளங்கிய கௌரவ திரு மகேஸ்வரன் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி அவரது காரியதரிசிகளில் ஒருவராகப் பணி புரிந்தவர். லண்டனில் வாழ்ந்தபோது அங்கு புதிய காரை ஒளி, சுடரொளி லண்டன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

## சர்வேஸ்வரன் அ.

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வியில் மிக்க ஆர்வம் கொண்ட இவர் இன்று கொழும்பு பல்கலைக்கழகச் சட்டபீட சிரேஸ்ட விரிவுரையாளராகப் பணி புரிகிறார். சட்டத்துறையில் பல புதிய விளக்கங்களைக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் தங்கப் பதங்கங்கள் பல பெற்றுப் புகழ் கொண்டு விளங்குகின்றார். இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்று வரும் கருத்தரங்குகளில் சிறந்த உரைகளை ஆற்றிப் பெருமைகளைப் பெற்றுள்ளார்.

## சிவசரவணபவன் சி.

1933.02.28 காரைநகரில் பிறந்த இவர் தற்பொழுது கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியில் வசித்து வருகின்றார். 'சிற்பி', 'யாழ்வாசி' என்ற புனைபெயர்களால் அழைக்கப்படும் இவர் சிறுகதை, கவிதை, இதழியல் போன்ற துறைகளில் ஈடுபட்டு 1952 இலிருந்து தனது கலைப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்.

நிலவும் நினைவும், சத்திய தரிசனம், நினைவுகள் மடிவதில்லை ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், உனக்காக கண்ணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நாவலையும் எழுதியுள்ளார். மேலும் ஈழத்துச் சிறுகதைகள் எனும் பெயரில் பன்னிருவரின் சிறுகதைகள் உள்ளடங்கிய ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளதுடன் மொழிபெயர்ப்புப் பணிகளையும் ஆற்றியுள்ளார். கலைச் செல்வி பத்திரிகையின் ஆசிரியராகவும், லண்டன் சுடரொளி பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகவும் பணியாற்றி உள்ளார்.

யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் விளங்கினார். யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை இலக்கியக் குழு தலைவரா கவும், இலங்கை சாகித்திய மண்டலம், அரசாங்க இலவச பாடப் புத்தக எழுத்தாளர் குழு, யாழ் இலக்கிய வட்டம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணி ஆற்றியுள்ளார். மேலும் இவர் ஆசிரியரா கவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

2006 இல் வலி – தெற்கு கலாசாரப் பேரவையால் "ஞா ஏந்தல்", 2008 இல் காரைநகர் பிரதேச சபையால் "கலைச் சுடர்" முதலான பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் 2002 இல் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருதும், கொழும்பு கம்பன் கழகத்தின் இலக்கிச் சேவைக்கான கௌரவ விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்.

## சிவசிதம்பர ஐயர் கா. (1851 – 1912)

கார்த்திகேயப் புலவரின் இளைய குமாரனாகிய இவர் தமிழ், ஆரியம் இரண்டிலும் பெரும் புலமை பெற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானாகிய இவர் சிறந்த சைவப் பிரசாரகர்.

இவர் தட்சின கைலாச புராணத்தைப் (1887) பதிப்பித்தவர். தந்தை கார்த்திகேயப் புலவரால் முதலிற் பதிப்பிக்கப்பட்ட சோதிட நூலாகிய விதானமாலையை (1900) இரண்டாம் பதிப்புச் செய்தவர். கந்தபுராணம் மகேந்திர காண்டத்துக்கு (1908) இவரெழுதிய உரை சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரால் பரிசோதிக்கப் பட்டு இவரின் புதல்வராகிய கா.சி.மகேசவர்மாவினால் (1909) அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

இவர் பாடிய திக்கை நாயகர் மும்மணி மாலை களபூமியிலுள்ள திக்கரைத் தலத்து முருகப்பெருமான் மீது (1882) பாடப்பட்டது. இந்நூல் பற்றிய குறிப்புக்களை 1882 இல் வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகை பேசும். காலிக்கதிரேசர் அடைக்கலபத்து (1887). கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908) என்னும் நூல்களும் இவரால் ஆக்கப்பட்டவையாகும். தந்தையாரின் மறைவின் பொழுது இவர் பாடிய சரமகவிகள் கேட்போர் மனதைப் பிணிக்கும் இயல்பின.

*"…..எண்ணுகேன் என்னுமதல்*
*இயற்பதிகம் இசைத்தியென*
*உண்ணெகிழ்வி னோடுமொழிந்*
*துச்சியின்மேற் கைகுவித்து*
*அண்ணலே நின்மலர்த்தாள்*
*அடைகின்றேன் எனவுரைத்த*
*வண்ணமொழி இனித்தமியேம்*
*மனங்குளிரக் கேட்போமோ"*

## சுப்பிரமணியதேசிகர் சி. (1885 – 1970)

பருத்தித்துறை அல்வாய் சிவசங்கரக் குருக்கள் வள்ளியம்மை தம்பதியினரின் புத்திரராகிய இவர் ஆரம்பக் கல்வியை மேலைப்புலொலிச் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் கற்றார். 1907 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதரானார். இவர் காரைநகரில் திருமணம் செய்ததைத் தொடர்ந்து 1925 ஆம் ஆண்டு தொடக்கம் காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டவர்.

காரைநகரிலுள்ள கோயில்கள் பலவற்றிற் கந்தபுராண படனம், பெரிய புராண படனம், திருவிளையாடற்புராண படனம் நிகழ்த்தியதுடன் பண்ணிசை வகுப்புக்களையும் நடத்தி வந்தார். திருவெம்பாவையுரை, திருப்பள்ளியெழுச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை, அல்வாய்ச் சித்திவிநாயகர் தல வரலாறு – பதிகம், திருப்பொன்னூஞ்சல், சைவக்கிரியைகள், கம்பராமாயணம் காட்சிப்படலம், நிந்தனைப் படலங்களுக்கு விளக்கவுரை, திண்ணபுரச் சுந்தரேசுவரர் ஆலய வரலாறு என்பன இவரது படைப்புக்களாகும்.

## சுப்பையர் மே. (1744 – 1795)

தென்னிந்தியாவிலிருந்து வந்து காரைநகரில் குடியேறிய மேருகிரி முனிவரின் மூத்த புத்திரனே சுப்பையர். தெலுங்கு, ஆரியம், தமிழ் மூன்றிலும் வல்லவர். சங்கீத சாகித்தியத்திலே மிக்க பாண்டித்தியம் உடையவராய் வட தேசத்துக்குப் போக்குவரவு செய்து இசைக் கலையிற் பிரசித்தி பெற்றுச் 'சங்கீதச் சுப்பையர்' என்று அழைக்கப் பட்டார். இவர் நல்லை நாயகர் நான்மணிமாலை காரைக் குறவஞ்சி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

## நாகநாத ஐயா .கா (1848 – 1916)

இவர் கார்த்திகேயப் புலவரின் மூத்த மகனாவார். தந்தையாரிடம் படித்துப் பெரிய கல்விமானாக விளங்கியவர். கவிதை பாடும் ஆற்றலும் வாய்த்தவர். இவர் பாடியனவாகப் புலியூரந்தாதிக்கு உரையாசிரியர் வேற்பிள்ளை எழுதிய உரையை பாராட்டிய சிறப்புப் பாயிரக் கவிதைகள் உள்ளன.

*"சீர்மேவு மாதைநகர் மயில்வா*
*கனப்புலவர்*
*செய்தசிற் பரம தான*
*செம்பொனம் பலமருவு புலியூரினந்தாதி*
*யுரையைநீ செய்க என்ன*
*பேர்மேவு நல்லைநகர் வேலாயுதபிள்ளை*
*பெருமகிழ்வொ டருள்செய் குமரன்....."*

இவரது தந்தையாராகிய கார்த்திகேயப் புலவர் இறைவனடி அடைந்த வேளையில் இவர் பாடிய இரங்கற் பாக்கள் சுவை மிகுந்தவை யாகும்.

## நாகமுத்துப் புலவர் த.

## (1857 – 1939)

காரைநகர் தனுக்கோடிப் பிள்ளைக்கும் சேதுநாயகியம்மாளுக்கும் தனிப் புதல்வனாகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற் பெற்றவர். இலக்கண இலக்கிய படிப்பை நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையிடம் கற்றுணர்ந்தார். தமது குருவை மிகவும் போற்றியதுடன், அவரின் மறைவை ஒட்டி சமரகவிகளும் பாடியுள்ளார். புலவர் தமது நண்பர்கள், புரவலர்கள்மேற் பாடிய சீட்டுக் கவிகளும் பல. சண்முகன் ஆசைப்பிள்ளை என்பவருக்கு எழுதிய சீட்டுக்கவி வருமாறு,

*"சகராசா சேகரன் கோத்திரன் காரைத்*
*தனிநகரான*
*மகராசன் சண்முகம் சேயாசைப்பிள்ளை*
*மகிழ்ந்தறிக*
*மிகராசர் போற்றிடு நாகமுத் தாசான்*
*வீடுகடிதம்*
*சகராச சேகர என்மீடி கிழ்கிநீ*
*வாழியபோ"*

இவ்வாறான நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளைத் திரட்டி "திருமங்கல வாழ்த்துச் சீட்டுக் கவித்திரட்டு" என்னும் நூலாக்கி 1914 இல் வெளிப்படுத்தினார்.

காரைநகர் திண்ணபுர சுந்தரேசர் திருப்பதிகம், திருவூஞ்சல், சுந்தரேசர் பத்திரச கீர்த்தனங்கள், பயிரிக்கூடல் சுப்பிரமணியர் திருவூஞ்சல், கலிகால வேடிக்கைக் கும்மி, மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

## பஞ்சாட்சர ஐயர் (1889 – 1953)

நாவலர் காவிய பாடசாலையிலே சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் கற்றுப் பண்டிதரான இவர், பயிற்சிபெற்ற ஆசிரியருமாவார். கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் கற்பித்த தென்கோவைப் பண்டிதர் கந்தையா பிள்ளை அவர்களைத் தமது ஆசிரியராகக் கொண்ட குருக்கள். சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி அறிவும் நிரம்ப உடைய இவர் கவிதை புனையும் ஆற்றல், புராணபடன விரிவுரை ஆற்றுதல், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல் போன்ற வற்றிலும் வல்லவர். காரை சுப்பிர மணிய வித்தியாசாலையில் அதிபராய் இருந்தவர்.

திண்ணபுர வெண்பா (1945), வலந்தலை மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை (1931), விநாயகர் அகவல், விநாயக கவசம் பதவுரை (1947), கொழும்பு தம்பையா சத்திரம் சித்திவிநாயகப் பெருமான் திருப்பதிகம், திருவூஞ்சல் (1948) என்பன இவராக்கிய நூல்களாகும்.

## பாலேந்திரன் ச.ஆ.

காரைநகர் பாலாவோடையில் ஆறுமுகம் அன்னம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியைக் காரைநகர் பாடசாலையிலும், கொழும்பு விவேகானந்தா வித்தியா சாலை, யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்றிருந்தார். சிறு வயது முதல் திறமை மிக்க இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (1965 – 1968) கற்று பி. ஏ. பட்டதாரியானார்.

தற்போது கொழும்பில் வசித்து வரும் இவர் கொழும்புக் கம்பன் கழகப் பொருளாளராக இருந்ததுடன், பொதுப் பணிகள் பலவற்றையும் செய்து வருகின்றார். சிறந்ததொரு எழுத்தாள ராகிய இவர் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழச் சங்க மலர், "இளங்கதிர்" (1967 – 1968) இதழாசிரியராகப் பணி யாற்றியுள்ளார். பாலாவோடை அம்மன் கோயில் கும்பாபிஷேக மலர் (1977) பாலாவோடை அம்மன் கோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மலர் (1984) முதலியவற்றின் ஆசிரியராகத் திகழ்ந்துள்ளார். அத்துடன் மயூர மங்கலம், ஸ்ரீ மயூரபதி பத்திரகாளி அம்மன் ஆலய கும்பாபிசேஹ மலரின் (2000) ஆசிரியர் குழுவிலும் இருந்து அரும்பணியாற்றியுள்ளார்.

"காரைநகர் தொன்மையும் வன்மையும்" என்ற வரலாற்று நூலை எழுதி காரைநகரின் வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றாய்வாளர்களின் முடிவுகளையும், பழந்தமிழ் இலக்கி யத்தில் பொதிந்து கிடக்கும் தகவல் களையும் ஒருங்கே அணுகி தற்றுணி வோடு ஒரு முடிவுக்கு வந்து தன் ஆய்வினை முன்வைத்துள்ளார். இந் நூலுக்கு அணிந்துரை எழுதிய கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள் "யாழ்ப்பாண வரலாற்றுச் சங்கிலியின் நொய்ந்த இழைப்பிணைப்பு க்கள் சில இந்நூலின் வாயிலாக வலிமை பெற்றிருக்கின்றது" எனச் சுட்டிக் காட்டுகின்றார். காரைநகரின் வரலாறு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோர் பாலேந்திரன் அவர்களது இந்நூலினை உசாத்துணையாக குறிப்பிடாமல் செல்ல முடியாத நிலை உள்ளது.

## பஸீரணம் ஏ.

காரைநகர் சின்னாலடியை சேர்ந்த கந்தப்பு அவர்களின் புத்திரியே புலவர் பூரணம். தங்கோடை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், யாழ்ற்றன் கல்லூரியிலும் கற்ற இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 5 ஆண்டுகள் கற்றுப் புலவர், B.O.L. விருதுகள் பெற்றார்.

ஈழநாடு செய்தி இதழின் உதவி ஆசிரியராயும், குடும்பச் சுடர் சஞ்சிகை யின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். "பழந்தமிழ்ச் சோலை" என்னும் வார மலரிலே இவர் சங்ககாலந் தொட்டு 1969 வரையான காலம் வரையான இலக்கிய விடயங்கள் பற்றித் தொடர் கட்டுரைகள் எழுதியவர். இலங்கை வானொலியிலே இவரின் உரைச் சித்திரங்கள் 1964 – 1969 காலப் பகுதியிலே இடம்பெற்றன. சமய இலக்கியங்களிலும் ஈடுபட்டவர். இவரின் ஆக்கமான "தாய்மையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை'' என்னும் கட்டுரைகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப் பாக நூலுருவம் பெற்றன.

## பொன்னம்பலம் சி.

காரைநகர் சயம்பு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த கவிஞரும், எழுத்தாளரும் ஆவார். இலக்கியத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் தனது பதினான்காவது வயதில் இருந்து ஆங்கில தமிழ்க் கவிதை எழுதுதல், வரலாற்று நூல்கள். பாட நூல்கள் ஆக்கம் செய்தல், இலக்கிய இலக்கண நூல்களுக்கு உரை எழுதுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் தனது கலைச் சேவையை ஆரம்பித்தார்.

பாடசாலைக் கல்வியைத் தொடர் ந்து ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியதுடன் இற்றைவரை சமய சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். இவர் தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களிற்குப் பல நூல்களையும், வழிகாட்டிகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய நூல்களாக சுந்தரத் தமிழ்மாலை, இலக்கிய வழிகாட்டி, இலக்கண வினாவிடை, கட்டுரைக் கதம்பம், கட்டுரைக் குறிப்பு, சங்கநூல் திரட்டு, கம்பன் கண்ட வாலி, பாஞ்சாலி சபதம், திண்ணபுரத் திருச்சதகம், வாணிமலர், மடத்துக்கரை அம்பாள் ஊஞ்சல் எனப் பலவற்றை இயற்றியதுடன் ஆண்டிக் கேணி ஐயனாரின் அற்புத வரலாறும் ஆண்டி முனிவர் புராணமும் என்ற தலவரலாற்று நூலையும் இயற்றியுள்ளார். அத்துடன் கவிஞர் அவர்கள் தனது முதுகலைமாணிப் பட்டப் படிப்பை (M.A) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்ற துடன் அதற்குரிய ஆய்வுக் கட்டுரையாக "ஈழத்துச் சிதம்பர புராணமும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும்'' என்னும் விடயத்தை ஆய்வு செய்துள்ளார்.

இவர் காரைநகர் இந்துக் கல்லூரி ஸ்தாபகரான சயம்பருக்கு 1976 இல் சிலையை நிறுவுவதற்குப் பெரும் பங்காற்றிய பெருமைக்குரியவர். இவரது கலைச் சேவையைப் பாராட்டி கரைநகர் கலாசாரப் பேரவையில் "கலைஞான வித்தகர்'' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## முருகேசனார் க. (1916 – 1988)

காரைநகர் மாப்பாணவூரியில் உதித்த முருகேசனார் தமது கல்வி யைச் சுப்பிரமணிய வித்தியாசாலையிலே பஞ்சாட்சரக் குருக்கள், நாகமுத்துப் புலவர் என்போரிடம் பெற்றுத் தமிழ்நாட்டு க்குச் சென்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நான்கு வருடம் படித்து வித்துவான் பட்டதாரியானார்.

ஆசிரியப் பணிபுரிந்த இவர் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க உறுப்பினராகவும் இருந்துள்ளார். இச் சங்கம் நடத்திய பிரவேச பாலபண்டித வகுப்புக்களில் கற்பித்தார். இலங்கை வானொலியிலே இவருடைய நற்சிந்தனை உரைகள் அடிக்கடி இடம்பெற்றன. தமிழ்விடு தூது என்ற பிரபந்தத்தை ஆக்கி வானொலியிலே நிகழ்த்தியுள்ளார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் பேச்சு, கவிதை, நாடகங்கள் எழுதி நிகழ்த்தினார். இவை காரணமாக மக்கள் இவருக்கு "முத்தமிழ் மணி'' என விருது சூட்டினர்.

## முருகேசு சு.

ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோயிலின் திருப்பணிச் சபைத் தலைவராக (1982 – 1999) விளங்கிய இவர் பல சமய சமூக சேவைகளை முன்னின்று நடாத்தியவர். "ஈழத்துச் சிதம்பரம்'' (1984) என்னும் நூலின் ஆசிரியராகிய இவர் அத்தல வரலாறு மூலம் தலவரலாற்றுப் பெருமைகளையும், இவ்வூர் சிறப்புக்களையும் சைவ தத்துவங்களையும் எழுதியுள்ளார்.

## முருகேசையர் கா. (1785 – 1870)

சங்கீதச் சுப்பையாவின் பேரனா கிய இவர், வடமொழியிலும் தமிழிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த புலமை பெற்றிருந்தார். இவர் இயற்றியனவாக தன்னையமக அந்தாதி, தன்னை நாயகர் ஊஞ்சல், குருச்சேத்திர நாடகம் போன்ற நூல்கள் உள்ளன. குருசேத்திர நாடகத்தில் வரும் ஒரு பாடல் இது,

"*வாழை கரும்புகள் நாட்டுங்கோ-நல்ல*
*வளமான பந்தலையும் போடுங்கோ*
*நொச்சி வழுதலை நாட்டுங்கோ-இரண்டு*
*கூடாரப் பந்தலையும் போடுங்கோ*
*மாவிலைக் கும்பங்கள் வையுங்கோ-நல்ல*
*மகர தோரணங்களைப் போடுங்கோ*"[31]

இது கட்டடியக்காரான் கூற்றாக வரும்.

## யோகலட்சுமி

இவர் காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் சோமசுந்தரம் அவர்களின் புத்திரியாவார். தமது கல்வியை ஆயிலியிலும், யாழ்றன் கல்லூரியிலும் பெற்ற இவர் வட்டுக் கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் நடத்திய பாலபண்டித வகுப்பிலும், பண்டித வகுப்பிலும் சித்திபெற்றிருந்தார். 1970 இல் பண்டிதரான இவர் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரியுமாவார். 1990 – 1991 இலே யாழ் பல்கலைக்கழகக் கல்வி டிப்புளோமா பரீட்சையிலும் சித்தி பெற்றவர். பண்டிதர் தேர்விலே சித்திபெற்ற பின் "திருவெம்பாவையும், திருக்கோவையாரும்" என்னும் தலைப்பிலே ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தவர். வாழ்த்துப் பாக்கள், பிரிவுபசாரப் பாக்கள், சரமகவிகள் எனப் பல கவிகள் பாடி வழங்கியவர். காரைநகர் யாழ்ற்றன் கல்லூரிக் கீதத்தை ஆக்கிய பெருமைக்குரியவர்.[32]

## வேலாயுதபிள்ளை மு.சு.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியா சாலையிலும், காரைநகர் இந்துக் கல்லூரியிலும் கற்ற இவர் வட்டுக் கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் நடத்திய பிரவேச பால பண்டித பரீட்சையில் சித்தியடைந்து பண்டிதரானார். ஆசிரியர், அதிபராகக் கடமையாற்றியதுடன் பல்வேறு சமய – சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான மணிவாசக சபையின் செயலாளராக, தலைவராக பல ஆண்டுகள் பணி செய்தவர். வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக விளங்கிய இவர் காரைநகரில் கம்பன் கழகக் கிளையை இயக்கி வருவதில் முக்கிய பங்கு வகித்தவர்.

காரைநகரின் பெரும் புலவர்களில் ஒருவரான நாகமுத்துப் புலவரின் மகன், ஆசிரியர் கனகசுந்தரத்தின் மகளை திருமணம் செய்தவர். நாகமுத்துப் புலவரின் கவிதைத் திரட்டினை 1974 இல் மறுபதிப்புச் செய்து வெளியிட்டார். சிறந்த பேச்சாளர், எழுத்தளர், கவிஞராக விளங்குகின்ற இவர் அருணாசல உபாத்தியாயர் மீது பாடிய கவிதை பின்வருமாறு.

"*வண்டிகளின்றிச் செருப்புமில்லாது*
*மண்ணுறக் காலினால் நடந்தும்*
*மண்டிய இருளிற் பனியினில் வெயிலில்*
*மழையினிற் பலஇடர் உழந்தும்*
*உண்டியை ஒறுத்தும் ஊரெங்கும் ஓடி உத்தமத் தொண்டர்கள் பலரைக்*
*கண்டுமெங் காரை நகரினிற்*
*கல்விக் கழங்கள் தாபித்த பெரியார்*"

## வைத்தீஸ்வரக் குருக்கள்

கணபதீஸ்வரக் குருக்களுக்கும் சிவயோக சுந்தராம்பாளுக்கும் புத்திரராகப் பிறந்த வைத்தீஸ்வரக் குருக்கள் தந்தையார் கணபதீஸ்வரக் குருக்களிடமும், பஞ்சாட்சரக் குருக்கள், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோரிடத்திலும் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். மகாவித்துவான் சி. கணேசையரிடம் தமிழையும், சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதத்தையும் கற்றார் பிரவேச பண்டிதம், பாலபண்டிதம் முதலான வகுப்புக்களில் சித்தியடைந்ததுடன் பரமேசுவர பண்டித ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பண்டித பரீட்சையிலும் பயிற்றப்பட்ட ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சித்தி பெற்றுள்ளார்.

முதன் முதலில் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். விவேகானந்த சபையால் நடாத்தப்படும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக் குழுவில் அங்கத்தவராகப் பணிபுரிந்தார்.

தினகரன் பத்திரிகையின் செய்திப் பகுதியில் பணியாற்றியதுடன் வெலிக்கடை, மகரகம சிறைச்சாலைகளுக்கு ஞாயிற்றுக் கிழமைதோறும் சென்று அங்குள்ள சைவத்தமிழ்க் கைதிகளுக்குச் சமயச் சொற்பொழிவாற்றி அவர்களின் தூய வாழ்விற்குப் பேருதவி புரிந்தார். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகர் சபை என்பவற்றின் தாபகராக விளங்கியுள்ளார்.

குருக்கள் அவர்கள் நிறுவிய மணிவாசகர் சபை அவருக்கு மட்டுமல்ல காரைநகருக்கும் ஓர் பொக்கிஷமாகத் திகழ்கின்றது.

இவர் எழுதிய காரைநகரில் சைவ சமய வளர்ச்சி (1982) என்னும் நூல் இவரது தமிழ்ப் புலமையை எடுத்துக் காட்டியது. இதை விட ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், தொடர்மொழிக்கு ஒரு மொழி, எதிர்ச் சொற்கோவை, உரைநடையாக்கம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குண இயல்பு, பெரிய புராணம் - திருநகரப் படல உரை, மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவை என்பன இவர் எழுதிய நூல்களாகும்.

இவர் தான் எழுதிய நூல்களோடு வேறு பலர் எழுதிய நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அவை பின்வருமாறு,

1. கலாநிதி மு. கந்தையா எழுதிய நாவலர் பிள்ளைத் தமிழ்
2. கலாநிதி எவ். எக்ஸ். சி. நடராசா எழுதிய நன்னூற் காண்டிகை, உரையும் நாவலர் பெருமானும்
3. கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் எழுதிய திருமுறைப் பெருமை
4. காரைநகர் காத்திகேயப் புலவர் எழுதிய திண்ணபுல அந்தாதி உரை கலாநிதி சொ.சிங்காரவேலன்
5. வித்துவான் B.சபாபதி எழுதிய அருள்நெறித்திரட்டு
6. காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய திரிபந்தாதி உரை பண்டிதர் புலவர்மணி க. மயில்வாகனனார்.
7. ஸ்ரீசேத்திரத்தி வேண்பா – 11ஆம் திருமுறை ஐயடிகள் காடவர்கோன் நாயனார் உரை கலாநிதி மு.கந்தையா
8. திருவெழுக் கூற்றிருக்கை உரையுடன்
9. சீறாப்புராணம் உமறுப்புலவர் உரை ஸனாப் அ.ஸ.அப்துல் சமது
10. ஈழத்துச் சிதம்பரம் சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக் குருக்கள்
11. சீறாப்புராணம் - நபி அவதாரப் படலம் - உமறுப்புலவர் - உரை திக்குவலை பெஸ்வான்.
12. திருப்போசை வெண்பா - காரைநகர் கார்த்திகேயப் புலவர்.
13. திருப்போசை வெண்பா காரைநகர் கார்த்திகேயப் புலவர் உரை – திரு.வை.கா.சிவப்பிரகாசம்.
14. புதுமுறைக் கட்டுரைக் கோவை – புத்தகம் 1, புத்தகம் 2
15. காரைநகர் கார்த்திகேயப் புலவர் நினைவுமலர்
16. ஈழத்துச் சிதம்பர புராணம், புலவர் மணி.சோ.இளமுருகனார், உரை – பேருரையரசி பண்டிதை இ.பரமேசுவரியார்.

இவற்றை விட மணிவாசக சபைப் பொன்விழா மலர், காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிசேக மலர், திருவாதிரை மலர்கள் நான்கு, சைவமகா சபையின் பொன்விழா மலர் என்பன இவரின் தமிழ் சமயச் சேவைகளை எடுத்தியம்புகின்றன. பெரியார் க. அருணாசலத்தின் பின்னர் காரைநகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த பெரியாராக இவரைக் கொள்ளலாம்.

இவரது சேவையைப் பாராட்டி 2002 இல் யாழ் பல்கலைக்கழகத்தினால் 'தத்துவ கலாநிதி', சர்வதேச இந்துமத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமார் குருபீடத்தினால் 'சிவாகமகிரிஜா பூஷணம்', திருவாவடுதுறை ஆதினத்தினால் 'சிவாகமச் செல்வர்', கனடா சைவசித்தாந்த மன்றத்தினால் 'சித்தாந்த வித்தகர்', 'அகில இலங்கை கம்பன் கழகத்தினால் "முதறிஞர்", இந்துசமய கலாசார திணைக்களத்தினால் 'கலை ஞானகேசரி', 2008 இல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசாரப் பேரவையினால் 'கலைஞானச் சுடர்' போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

காரைநகர் கல்விப் பாரம்பரியத்திலும் இலக்கிய வளத்திலும் மேற்சுட்டிய படைப்பாளிகளுடன் இன்னும் பல புலமையாளர்கள் தொடர்புபூண்டு இருக்கின்றனர். காரைநகரின் மரபுவழி முகிழ்த்த கல்விப் பாரம்பரியத்தின் உரத்திலே வாழையடி வாழையாக வளரும் கல்வியியலாளாகள், புத்திஜீவிகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள். 'வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது" என்ற முதுமொழிக்கமைய காரைநகரில் ஆரம்ப காலத்திலேயே ஊறிய கல்விப் பாரம்பரியம் இன்றுவரை பல்கிப் பெருகி வளர்ந்து செல்கின்றது.

காரைநகரில் வைத்தியக் கலாநிதிகள் பலர் வாழ்ந்துள்ளனர். வாழ்கின்றனர். வைத்திலிங்கம், கனகசுந்தரம், தண்டாயுதபாணி, பத்மநாதன், வைரமுத்து வைத்தியர், (பெயராலும், தொழிலாலும் வைத்தியர்) ஆனந்தக்குமாரசாமி, ஜெகசோதி, குணரத்தினம், சிவசோதி, சிவகுமாரன், ஆனைமுகன் முதலிய பலரைச் சுட்டிச் சொல்லலாம். அத்துடன் டாகடர் என்.ரி. சம்பந்தன் என அழைக்கப்பட்ட திருஞானசம்பந்தன் 1943 இல் வைத்தியக் கலாநிதி (M.B.B.S) பட்டத்தைப் பெற்றார். அதன் பின் வைத்தியத்துறையில் F.R.C.S (Ed.in) FRCS (GLAS) ஆகிய பட்டங்களையும் பெற்றிருந்தார்.

காரைநகரில் வாழ்ந்த புத்திஜீவிகள் சிலர் சமூகத்திற்குச் செய்த அரும்பணிகள் வியப்புக்குரியன.

யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற பேராசையில் வாழ்நாள் முழுவதும் செயற்பட்டவர் காரைநகர் அருணாசல உபாத்தியாராவார். இவரது முயற்சியால்தான் காரைநகர் ஆங்கில வித்தியாசாலையும், வியாவில் சைவ பரிபாலன வித்தியாசாலையும் தோன்றின. அத்துடன் மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை, கரணவாய் மாணிக்க வித்தியாசாலை, வல்லை சிவகுரு வித்தியாசாலை, அனலை தீவு சதாசிவ வித்தியாசாலை என்பன இவரது விடா முயற்சியால் உருவாக்கப்பட்டவை. மேலும் சைவ ஆசிரிய கலாசாலை உருவாகவும் அரும்பாடுபட்டவர்.

இவ்வகையில் "யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ ஆசிரிய கலாசாலைக்கு முதற் காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிகளென்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்களுள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்கு அடுத்து இரண்டாவதாக யான் மதித்திருப்பது இவரையே" என்று நாவலரின் தமையனார் மகன் த. கைலாசபிள்ளை குறிப்பிட்டுள்ளார். இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்களுள் பெரியார் அருணாச்சலமும் ஒருவர். ஸ்ரீமத் அருணாச்சலம் அவர்கள் நாவலர் அவர்களின் சிந்தனைகளுள் இந்த நூற்றாண்டின் சைவ எழுச்சிக்குக் காரணமாய் அமைந்ததொரு சேது பந்தனம் ஆவார்கள். ஆயிரத்து தொள்ளாயிரத்து பன்னிரண்டு தொடக்கம் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்திரண்டு வரை வெளிவந்த இலங்கையில் உள்ள திருநீறு பூசுகின்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் அருணாசலம் பொரித்த குஞ்சுகளே ஆவார்" என்றும் கூறியுள்ளார்.

காரைநகரின் கல்விப் பாரம்பரியத்திலிருந்து முகிழ்த்து பலர் காரைநகரைச் சூழவுள்ள பகுதிகளில் கல்வி மரபினைப் பேணியுள்ள அதேவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் பல பாகங்களிலும் அதனை விஸ்தரித்துமுள்ளனர். காரைநகரின் புதல்வர்களாகிய வே. கைலாயநாதன் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உதவிச் செய்தித் தயாரிப்பாளராக பணிபுரிந்துள்ளார். கே. எஸ். ராஜா என அழைக்கப்படும் ஸ்கந்த ராஜா கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். இலங்கை வானொலியில் இணைந்து பெரும் புகழ் படைத்திருந்தார். இலங்கை வானொலி மயில்வாகனத்தைத் தொடர்ந்து தன் குரல் வளத்தால் வர்த்தக சேவையில் தனக்கென ஒரு தனி வழியை வகுத்து இலங்கை இந்திய தமிழ் நெஞ்சங்களில் இடம் பிடித்திருந்தார். மனோகரி சதாசிவம் இவர்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபாவாகினிக் கூட்டுத் தாபனம் ஆகியவற்றில் செய்தி வாசித்துள்ளார். வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு ரவீந்திரன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் ஓர் வளர்ந்து வரும் கலைஞனாகத் திகழ்கின்றார். இளையதம்பி தயானந்தா ஒலி, ஒளிக் கூட்டுத்தாபனங்கள் மூலம் நிறைய இரசிகர்களை பெற்றுள்ளார்.

காரைவாழ் மக்கள் காரைநகரில் மட்டுமில்லாது ஈழத்திலும், பிற நாடுகளிலும் கல்விச் செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்றனர். நமசிவாயம் கணநாதா பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலை இளமாணி விசேட சித்தி பெற்றவர். 1977இல் சாம்பியா - zimco Institute இல் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். இன்று சாம்பியா நாட்டின் உலக வங்கிக் கிளையின் தலைமைப் பிரதிநிதியாகப் பணிபுரிகின்றார். கந்தப்பர் சிதம்பரப்பிள்ளை இலண்டன் சென்று பாரிஸ்ரார் பட்டம் பெற்றதுடன் இரங்குண், பிணாங்கு ஆகிய இடங்களில் நியாய துரந்தரராக தொழில் புரிந்துள்ளார். அத்துடன் அல்லின் ஏபிரகாம், மகேஸவர்மா ஆகியோர் இலண்டன் F.R.A.S சங்கத்தின் மகிமை அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டனர். கந்தையா செந்தில்நாதன் கணக்காளராய் இலண்டனில் வசிப்பதுடன் இலண்டன் I.B.C ஒலிபரப்புச் சேவைப் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார்.

காரை வாழ் மக்களில் சிலர் பேராசிரியராகவும், விரிவுரையாளராகவும் ஆங்காங்கே உள்ளனர். வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணன் அவர்கள் விரிவுரை யாளராக பேராதனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் கட்மையாற்றியதுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சமய ஒப்புவியல் பேராசிரியராகவும், இந்து அமைச்சின் ஆராய்சித் துறை தலைவ ராகவும், அகில இந்திய சமூகவியல் அறிவுக் கழகத்தில் சிரேஷ்ட ஆய்வாள ராகவும் செயலாற்றி இருக்கின்றார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய விசேட விரிவுரைகள் "PERAPECTIVES IN SAIVISM" எனும் நூலாக அப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.


பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வாழ்நாள் கணிதப் பேராசிரியராகக் கடமையாற்றி வருவது கரைநகர்க் கல்விப் பாரம்பரியத்தில் சாதனையான தொரு அம்சமாகும். இலங்கையிலேயே பல்கலைக்கழகத்தில் ஐம்பது வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பெருமைக் குரியவர். முப்பது வருடங்கள் முழுப் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அவர் தற்போது காரை மண்ணிலே வாழ்ந்து கொண்டிருப்பது பெருமையைத் தருகின்றது. இதேபோல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய விரிவுரையாளரான திருமதி. யோ. வீரமங்கை ஸ்ரலினா, இசைத்துறை விரிவுரையாளரான செல்வி. க. பரமேஸ்வரி ஆகியோரும் கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிறிசற்குணராசா ஆகியோரும் காரைமாதா பெற்றெடுத்த கல்வியியளர்களேயாவர்.

இவ்வாறு காரைநகரின் புலமையாளுமைகள் பரந்துபட்டு பல்கிப் பெருகிக் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரை மு. மயில்வாகனம்

செல்வி கோகிலா கந்தசாமி



தமிழர்களின் மிகவும் பழமை வாய்ந்த பாரம்பரிய கலை வடிவமான தாளக்காவடி முன்னர் மேடைகளிலும் கோயில்களிலும் ஆடப்பட்டு வந்தது. நாதஸ்வரம், நடனம் போல் தாளக்காவடியும் தமிழர் விழாக்களில் ஆரம்பத்தில் இடம்பெறும் நிகழ்ச்சியாக இருந்து வந்துள்ளது. ஆயினும் காலப்போக்கில் மேடையில் ஆடப்படுவது அருகி இன்று கோயில்களில் மட்டும் ஆடப்படும் கலைவடிவமாக தாளக்காவடி அமைந்துள்ளது.

ஈழத்தில் இன்று தாளக்காவடியை முறைப்படுத்தி பயிற்றுவித்து வரும் அண்ணாவியார்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். அவர்களில் அண்ணாவியார் முருகேசு மயில்வாகனம் மிகவும் முக்கியமானவர் அவர் வேலையின் நிமித்தம் எங்கெல்லாம் செல்ல நேரிடுகிறதோ அங்கெல்லாம் சிறார்களை சேர்த்து தாளக்காவடி பயிற்சி அளித்து அக்கலையை அழியாது பாதுகாத்து வருகிறார்.

யாழ் மாவட்டத்திலே கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலப்பரப்பில் புகழ்பெற்ற ஆலயங்களும், வரலாற்று சிறப்பு மிக்க இடங்களும் ஒருங்கே அமையப் பெற்ற காரைநகரின் விக்காவிலைச் சேர்ந்த மு. மயில்வாகனம் அவர்கள் 1940 ஆனி 05ஆம் திகதி இலகடி வலந்தலையில் முருகேசு – பொன்னாச்சி தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். இவரின் சகோதரர்கள் அமரர் வள்ளியம்மை, அமரர் சீதேவி, அமரர் அன்னலட்சுமி, அமரர் கந்தசுவாமி இவர்களுடன் கடைசி மகனாக மயில்வாகனம் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை இலகடி இந்துக் கலவன் பாடசாலையில் பயின்றார். அதன் பின்பு காரைநகர் இந்துக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் வரை பயின்றார். அப்போது பாடசாலையில் கீழ் பிரிவு, மத்திய பிரிவு மேற் பிரிவுகளில் நடைபெற்ற சங்கீதப் போட்டிகளில் முதலிடம் பெற்றார். பாடசாலையில் கல்வி கற்கும் காலங்களில் இவர் தனது கலை அறிவினை வளர்த்து அதனைத் திறம்பட பயின்றும் வந்தார்.

1962 ஆம் ஆண்டு நடனக் கலையை தனது பெரிய தந்தையாராகிய சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (அண்ணாவியார் மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியர்) அவர்களிடம் பயின்று அவரின் ஆசியினைப் பெற்றார். அன்றிலிருந்து காவடியினை மாணவர்களுக்கு பழக்கி வந்தார். 1963 ஆம் ஆண்டிலிருந்து நடனக் காவடியை பழக்கும் காலத்தில் பக்த மார்க்கண்டேயர், பக்த பிரகலாதா, சுந்தரமூர்த்தி நாயனார், திருவிளையாடல் என்னும் பல நாடகங்களில் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேஷமும், ஆண் வேஷமும் தரித்து நகைச்சுவை செய்து மக்கள் மத்தியில் புகழ் பெற்று விளங்கினார்.

இதன் பின்னர் இவர் காவடியினை மாணவர்களுக்கு பழக்கி பல இடங்க ளுக்கு கொண்டு சென்று அரங்கேற்றி பெருமையையும் புகழினையும் ஈட்டினார். கோவில் நேர்த்திகளுக்கு சிறுவர்களுக்கு நடன காவடியை பழக்கி பிரசித்தி பெற்றார். கோயில்களில் காவடியினை அரங்கேற்றி மக்கள் மத்தியில் அதற்கு பெரும் வரவேற்பை ஏற்படுத்தினார். அத்தோடு 1972 ஆம் ஆண்டு யாழ்ற்ரன் பாடசாலையில் (வாரிவளவு கலை மன்றத்தின்) போட்டி களுக்கு மயில் நடனம், சிவநடனம், கும்மி, கோலாட்டம் என்பன 9 வருடங்கள் பழக்கி முதலாம் இடத்தை பெற்று பாடசாலைக்கு புகழீட்டினர்.

1972 ஆம் ஆண்டு சிவசக்தி நடனக் குழுவை உருவாக்கி அதன் மூலம் எண்ணற்ற சிறார்களுக்கு கிராமியக் கலைகளை கற்பித்து வருகிறார். இதன் மூலம் காரை சிறார்களின் மத்தியில் கலை ஆர்வம் அதிகமாகி பல நடன நிகழ்ச்சிகளை பல இடங்களில் நடாத்தினார். அந்த சிவசக்தி நடனக் குழுவில் 5 வயது பாலகர்களுக்கு நடனக் காவடியை பழக்கி கோவில் திருவிழாக் களிலும், மன்றங்களிலும் கொண்டு சென்று அரங்கேற்றி புகழீட்டினார்.

அத்தோடு கொழும்பு, நொச்சியாகம, வவுனியா, அனுராதபுரம், கிளிநொச்சி, மாங்குளம் போன்ற இடங்கிளில் உள்ள கோவில்களுக்கும் கொண்டு சென்று புகழீட்டினார். அத்தோடு யாழ் மாவட்டத்தில் உள்ள தீவுப்பகுதிகளான நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலை தீவு, ஊர்காவற்றுறையில் புளியங்கூடல் அம்மன், இந்தன் பிள்ளையார், வேலனை ஐயனார், சுருவில் ஐயனார், சிவன் கோவில் என்பவற்றிற்கும் கொண்டு சென்று தனது புகழை நிலைநாட்டினார்.

1978 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமிய நடனங்களை பார்வையிடுவதற்காக யாழ் மாவட்ட செயலகத்திற்கு கலை, கலாசார அமைச்சர் மாண்புமிகு E.L குருளே அவர்கள் வருகை தந்தபோது, இவரால் அங்கு அரங்கேற்றப்பட்ட நடனம் அவரது பாராட்டைப் பெற்றதோடு, அந் நடனம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் அரங்கேற்றி பாராட்டுச் சான்றிதழையும் பெற்றார். 1972 ஆம் ஆண்டு புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடனங்கள் இடம்பெற்றது. சிவநடனம், காவடி, கும்மி, கப்பல் நடனம், பிள்ளையார் நடனம், பாம்பு நடனம், உறி நடனம் எனும் பல நடனங்களை அரங்கேற்றினார். அப்பொழுது ஆலயத் திற்கு வந்த தவில் நாதஸ்வர வித்துவானகளாகிய N.K பத்மநாதன், N.R கோவிந்தசாமி, M.B பாலகிருஸ் ணன், N.R சின்னராசா, கைதடி பழனி ஆகியோர் நடனத்தைக் கண்டு களித்ததும் அல்லாமல், இவருக்கு மாலை போட்டு நடனக் கலைஞர் என்னும் பட்டத்தையும் வழங்கினார்கள்.

ஏறக்குறைய 30 போட்டிகளில் பாடசாலைகளிற்காக நடனத்தைப் பழக்கி காரைநகர், வட்டுக்கோட்டைத் தொகுதி, யாழ் மாவட்டத்திலும் முதலிடம் பெற்று பாடசாலைகளுக்கு பெருமை சேர்த்தார். அல்சர் என்னும் கொடிய நோயினால் 1970ல் இருந்து 1983 வரையும் பாதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப் பெற்று சுகமடைந்தார். காரைநகர் ப.நோ.கூ. சங்க கிளையில் விற்பனையாளராக கடமை புரிந்தார். 1993ல் எழுவை தீவு ப.நோ.கூ. சங்க முகாமையாளராக பதவி உயர்வு பெற்றார். ஊர்கவாற்றுறை தலைமைக் காரியால யத்தில் எழுதுவினைஞராகவும், அனலை தீவு ப.நோ.கூ சங்கத்தில் 1995ல் முகாமையாளராகவும் பதவி வகித்தார். அப்பொழுது அங்கு உள்ள 36 சிறார்களுக்கு தனது கலையை பயிற்றுவித்தார். அம்மக்கள் நடனங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு களித்து பொன்னாடை போர்த்தி "கலைமாமணி" என்னும் பட்டமும் சான்றிதழும் வழங்கி இவரைக் கௌரவித்தனர். அது மாத்திரமல்லாமல் 1993 – 2000 ஆண்டு வரை விஷக்கடி வைத்தியராகவும், சித்த ஆயுள்வேத வைத்தியராகவும் பணியாற்றி வந்தார்.

1998ல் சங்கானை கலாசார சபையால் வீரமணி ஐயர் அவர்களின் கரங்களால், இவரது நடனத்தை பாராட்டி பொன்னாடை போர்த்தி "தாளலயஞான பூபதி" எனும் பட்டமும் சான்றிதழும் வழங்கினார்கள். 1998 ஆம் ஆண்டு இவரை ப.நோ.கூ சங்கத்தில் கிளை மேற்பார்வையாளராக பதவி உயர்த்தினர். 2000 ஆம் ஆண்டுடன் இவரது சேவைக்காலம் முடிவுற்றது.

இவர் அனலைதீவு வடக்கு இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தலைவராக பதவி வகித்தார். அனலை தீவு ஐயனார் ஆலய மெய்க்காப்பளராகவும் பதவி வகித்து அவ்வூரை விட்டு விடைபெற்றார்.

அது மாத்திரமல்லாமல் 1988 ஆம் ஆண்டு ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சங்கத்தில் செயலாளராக பதவி வகித்து சங்கத்தை ஊக்கப்படுத்தி வளர்த்தார். 1998 இல் தலைவராகவும் பிராந்திய தலைவராகவும் செயற்பட்டார். 2000 ஆண்டில் நோய் வாய்ப்பட்ட காரணத்தினால் அப் பதவியை ராஜினாமாச் செய்தார். இப்பொழுது நிர்வாக உறுப்பினராக செயற்படுகிறார்.

இவர் இணுவில் கந்தசுவாமி கோவில், அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில், மருதடிப் பிள்ளையர் கோவில், மாதகல் நுணசை என பிரசித்தி பெற்ற பல கோயில்களிலும் தனது கலைப் பணியினை திறம்பட நடாத்தி வந்தார். இவர் 1970ல் வவுனியா குருக்கள் மடத்து முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கரகப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார் படுத்தி ஆடி புகழ்பெற்றார். ஆனலை தீவு முருகன் ஆலயத்தில் போட்டிக்கு குதிரை ஆட்டம் ஆடி புகழ் பெற்று மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றார்.

இவ்வாறாக இவர் தனது கலைப்பணியை திருப்திகரமாக மாணவர் களுக்கு கற்றுக்கொடுத்து காரைநகரில் கிராமிய இசையினை தளர்ச்சி பெறவிடாது வளர்த்து வருகின்றார். அத்தோடு கோயில்களிலும், மன்றங்களிலும், அற நெறிப் பாடசாலைகளிலும் தனது கிராமிய நடனக் கலைகளான காவடி, கரகம், குதிரை ஆட்டம், கோலாட்டம், சிவநடனம், பாம்பு நடனம், உறி நடனம் போன்ற வற்றைப் பழக்கி கிராமியக் கலையை வளர்ச்சியடையச் செய்தார்.

இவ்வாறாக கிராமியக் கலையினை திறம்பட நடத்தி வரும் இவருக்கு 2007 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இதயத்திற்கு வரும் இரத்தக் குழாய் தடைப்பட்டு வருகின்றபடியால் நடனக் கலையை மூச்சுப் பிடித்து செய்ய முடியாமல் போயிற்று. அத்தோடு அவர் தனது பரம்பரைக் கலையான காவடிக் கலையானது தன்னோடு நிறைவடையப் போகின்றது என்றும், வேறு யாருக்கும் கற்றுக் கொடுக்கலாம் என்றால் ஒருவரும் முன்வரமாட்டார்களாம் என்றும் மன வேதனை அடைகின்றேன் என்று மிகவும் கவலையாக கூறியுள்ளார்.

அத்தோடு இவர் 2007 பிற்பகுதியிலிருந்து 2016 வரை உள்ள காலப்பகுதியில் ஆயுள்வேத டாக்டர் கி. தவமணியுடன் உதவி மருந்தாளராக இருந்து மருந்துக்கு, கட்டுப்படாத நோய்களுக்கும், விஷகடிக்கும் விபூதி போட்டும் குழை அடித்தும் மக்களுக்கு சேவை புரிந்து வருகிறார்.

இறுதியாக 2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் தனது கிராமியக் கலையான காவடியினை பயிற்றுவிப்பதற்கு அழைப்பு வந்தது. அதனூடாக பல்கலைக்கழக நடன மாணவர்களுக்கு காவடியினை பயிற்று வித்தார். நடனத் துறையில் காவடி ஒரு பாடமாக பயிற்றுவிக்கப்பட்டமையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காவடி நடனமானது அழிவடையாது பேணிப் பாதுகாத்து இனிவரும் சமுதாயத்தினரும் பயனடைவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாகவும், இதனால் தான் சந்தோசமாக உள்ளார் என்றும் அவர் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் 2002ல் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை கலாசார சபையினரால் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் அவர்களின் கரங்களால் மூத்த கலைஞர் கௌரவிப்பு விழாவில் "கலாஞான வித்தகர்" எனும் பட்டத்தை வழங்கி பொன்னாடை போர்த்தி பட்டச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2003 இல் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமாள் தேவஸ்தானத்தில் "கலைஞான தொண் டன்" எனும் பட்டம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப் பட்டார்.

2005 இல் காரைநகர் கலாசார பேரவையினர் "கலைஞானசுரபி" எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள்.

அத்துடன் யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தால் 13.08.2005 அன்று நடாத்தப்பட்ட சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவில் "சிறந்த கூட்டுறவாளர்" என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

2010 ஆம் வருடத்திற்கான வடக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் 05.10.2010 அன்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் வைத்து அன்றைய பாரம்பரிய கைத்தொழில், சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கரங்களால் பொன்னாடை போர்த்தியும், அப்போதைய வடமாகண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி அவர்களால் சந்தன மாலை அணிவித்து கேடயம் மற்றும் சான்றிதழ் ஆகியன வழங்கி ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

04.11.2010 அன்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் காலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட கலை இலக்கிய பெருவிழாவில் உதவி அரசாங்க அதிபர் கௌரவ இ.த.ஜெயசீலன் அவர்களாலும், கௌரவ பேராசிரியர் S. சிவலிங்கராஜா (தலைவர், தமிழ் துறை யாழப்பாணப் பல்கலைக் கழகம்) அவர்களாலும் பொன்னாடை போர்த்தி சந்தனமாலை அணிவித்து கேடயமும் "கலைஞானச்சுடர்" எனும் பட்டச் சான்றிதழும் கொடுத்து கௌரவிக்கப் பட்டார்.

2015 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் உயர் விருதுகளில் ஒன்றான கலாபூசண அரச விருது வழங்கி உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் இவர் கௌரவிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு இவரது 60 வருட கால கலைப் பணியைக் கௌரவிக்கு முகமாக யாழ்ப்பாண மாவட்ட கலாசாரப் பேரவையினால் 'யாழ் முத்து' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

காரை மண் பெற்றெடுத்த திரு. மு. மயில்வாகனம் அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய கலையான நாட்டார் கலையை பயின்று அதிலும் குறிப்பாக காவடிக் கலையினை தனது மூச்சாகக் கொண்டு பல மாணவர்களுக்கு பயிற்றுவித்து வருகிறார். இவர் தனது கிரமத்தில் மட்டுமன்றி பல்வேறு இடங்களிலும் இக் காவடியினை மாணவர்களுக்கு கற்பித்து "காவடி மயில்வாகனம்" என எல்லோராலும் அழைக்கப்பட்டு வருகிறார்.

இவர் தனது காவடி இசையினை சிறுவயதிலிருந்தே தனது பெரிய தந்தையிடம் இருந்து கற்றுக் கொண்டார். அன்று முதல் காவடியில் அலாதிப்பிரியம் ஏற்பட்டு அதனை முழுமையாக கற்று தானும் தாளக் காவடி நடனத்தில் தேர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டும் என விரும்பினார். அவ்வாறே அவரது பெரியப்பா இறந்தவுடன் இத் தாளக் காவடி நடனத்தை தானே முன்னின்று மாணவமணிகளுக்கு பயிற்றுவித்தார்.

கோவில் நேர்த்திகளுக்கு சிறுவர்களுக்கு காவடி பயிற்றுவித்து பிரசித்தி பெற்ற கோவில்களில் அரங்கேற்றி புகழ்பெற்றார்.

அத்தோடு இவர் தானே முன்னின்று ஒரு கலாமன்றத்தை உருவாக்கி அதற்கு "சிவசக்தி" நடனக்குழு எனப் பெயரிட்டு அதன்மூலம் பல சிறார்களுக்குக் காவடியினை பொதுநல நோக்கோடு பழக்கித் தனது ஊரில் காவடிக் கலையினைத் திறம்பட வளரச்செய்தார்.

அத்தோடு காரை மெய்கண்டான் பாடசாலையில் 30 மாணவர்களைக் கொண்டு காவடியினைத் திறம்பட நடாத்தி வந்தார். அதே போல வலந்தலை அத்திபுரக் கந்தசாமி ஆலயத்தில் பலவிதமான தாளக் காவடி நடனங்களை நடாத்திப் புகழீட்டினார்.

ஒருமுறை இவர் வவுனியா குருக்கள் மடத்து முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவுக்கு மேளம் கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு மற்றும் காவடி கலைஞர்களை அழைத்து சென்றிருந்தார். அங்கு வேறு இடத்தை சேர்ந்த ஒருவரும் கரகம் ஆட வந்திருந்தார். வந்தவர் தன்னுடன் போட்டிக்கு காவடி ஆட முடியுமா என்று மயில்வாகனம் அவர்களிடம் ஒலிவாங்கி மூலம் சவால்விட்டார். மேளகாரர் வீராச்சாமியிடம் நடையை நாலாம் காலத்தில் வாசிக்க சொல்லிவிட்டு மேடையில் காவடியைத் தலையில் வைத்தபடி மயில்வாகனம் ஆடத் தொடங்கினார். அவரது ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கரகம் ஒரு பக்கமும் கரகாட்டக்காரர் மறுபக்கமுமாக மேடையில் விழுந்து போனதை தன் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாகக் குறிப்பிடுகிறார்.


காரைநகர் பிரதேச செயலகத்தால் 2015 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'காரைநகர் பிரதேச வழக்கப் பாடல்கள்' ஆவணப்படுத்தல் இறுவட்டில் இவரால் இயற்றப்பட்ட பிள்ளையார் நடனப் பாடலான 'வா மகா சிவசுத கணபதியே' என்ற பாடலும், ஐயனாருக்குரிய கும்மிப் பாடலான 'மதகரிதனிலே ஏறிவரும்' என்ற பாடலும், சிவதாண்டவ நடனத்துக்குரிய 'ஆடினார் அம்பலவாணரே' என்ற பாடலும், கப்பல் நடனப் பாடலாகிய 'தக்கத் தெய்யாம் ஏலெலோ' என்ற பாடலும் இவரால் ஜதியுடன் பாடப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகப் பல இடங்களுக்கு மாணவரின் காவடி நடனத்தைக் கொண்டு சென்று தனது கலைத்துவக் கவிஞானத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரையிற் பிறந்தது
# 'ஈழப்பெரும் பேரிகை'

*லெப்ரினன் லி. அனிருத்தன், விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி,*



**"கல்வி கலை கலாசாரம் செல்வ மொடுசிவம்
நன்மக்கள் பெற்றெடுத்த காரையிற் பிறந்தது
ஒரு பேரிகை, ஈழப்பெரும் பேரிகை அல்லஅது
உலகப்பெரும் பேரிகையே."**

இறைவனையும், இயற்கையையும் இசைய வைக்க வல்லது இசை. இது குரலிசை, வாத்திய இசை என வகைப் படுத்தப்பட்டுள்ளது. வாத்திய இசை சுருதியை அடிப்படையாகக் கொண்டு ஸ்வரங்களை வாசிப்பதும், லயத்தினை அடிப்படையாகக் கொண்டு ஜதிகளை வாசிப்பதும். இவ் இரண்டாவது வகை லய வாத்தியங்கள், தாள வாத்தியங்கள், கொட்டற் கருவிகள், முழக்கு வாத்தியங்கள் (முழங்குதல் - முழக்கம், முழக்குதல் - முழவு) என்றவாறு அழைக்கப்படுகின்றது.

முழவுகள் குடுகுடுப்பை முதல் பேரிகை வரை வடிவங்களிலும், பருமனிலும், ஒலிகளிலும், வாசிப்பு முறைகளிலும் வேறுபட்டு காலத்திற்குக் காலம் மாறியும் மாறாமலும், குறிப்பாகத் தமிழர் பாரம்பரியத்தோடு பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன. இவை ஒரு முகமாகவும், இரு முகமாகவும் (ஐந்து முகமுள்ள பஞ்சமுக வாத்தியமும் உண்டு) மரம், உலோகம், சிரட்டை, மூங்கில் துண்டு, சுரைக்காய், மண் போன்றவற்றாலான பீப்பாய்களில் தோலைப் போர்த்தி வடிவமைக்கப் படுகின்றன. **'ஆதி மனிதன் கல்லைக் குடைந்து தோலைக் கட்டி ஒலி எழுப்பினான்'** (சபா. ஜெயராசா) எனவே இவை **'சர்மஜம்'**, **'அவனந்தம்'** என அழைக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து அடித்துப் பெறப்படும் ஒலி **'ஆத்யாதம்'** என உபநிடதம் கூறுகின்றது.

வேத, இதிகாச காலங்களில் லம்பரம், ஆடம்பரம், பேரி, துந்துபி, முரசு, படகம் போன்றனவும், சங்க காலத்தில் பேரிகை, பறை வகைகள் அதிகம் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பண்டைய முழவுகள் நான்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(1) உத்தம வாத்தியம் :-
படகம், பேரிகை, மிருதங்கம், கரடிகை, திமிலை, உடுக்கை, தல்லிகை, இடைக்கா போன்றன. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன், திருமால் ஆகியோருக்குப் பிடித்தமானவை.

(2) மத்திம வாத்தியம்:-
மிருதங்கம், சுத்த மத்தளம், துந்துபி, தடாரி, துடுப்பு, கண்விடுதூம்பு, தக்கை, சவ்வரி, முல்லைப் பறை போன்றவை. இவை இந்திரன், திருமால் போன்றோரிற்குப் பிடித்தமானவை.

(3) அதம வாத்தியம்:-
அந்தரி, முளவு, நாளிகைப்பறை, பாலைப்பறை, சந்திரவளையம், தகுணி, கணப்பறை, விரலேறு என்பன.

(4) வீர வாத்தியம்:-
தம்பட்டம், டக்கை, நிசானம், முரசு, நெய்தற்பறை, குறிஞ்சிப்பறை இவை அரசனுக்குரியன.

இவற்றைவிட தப்பு, கஞ்சிரா, பஞ்சமுக வாத்தியம், செண்டை, கிரிக்கட்டி, உறுமி, டமாரம் போன்றனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் சுயமாக இயங்குபவை (குடுகுடுப்பை) கையால் முழங்குபவை (மிருதங்கம்) கைக் குச்சியால் முழங்குபவை (தவில்) குச்சிகளால் முழங்குபவை (டமாரம், பறை) ஆனால் சம்மட்டியால் முழங்கப்படுவது பேரிகை என்பதாகும்.

அத்தோடு மங்கல, அமங்கல வாத்தியங்கள், கோயில் வாத்தியங்கள், போர்க்கள வாத்தியங்கள், கச்சேரி வாத்தியங்கள், சாதக (பயிற்சி) வாத்தியங்கள் எனவும் வகைப்படுத்தப் படுகின்றன. அத்துடன் இவ் வாத்தியங்களை முழங்கும் குழுவினர் **"பாணன் பறையன் கடம்பனென்றின் நான்கல்லது குடியுமில்லை"** என யாழ்நூல் குறிப்பிடுகின்றது.

நாட்டிய சாஸ்திரத்தில் 33 ஆவது அத்தியாயத்தில் தமிழகத்தில் பயன் படுத்தப்பட்ட 86 வகை வாத்தியங்கள் பற்றியும் (ஆடற்கலை 193) பஞ்சமரபு, அடியார்க்கு நல்லார் உரை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 80 வகை வாத்தியங்கள் பற்றிய குறிப்புக்களிலும், பரிபாடற் குறிப்பு உட்பட பதினெண் கீழ்க்கணக்கு, மேற்கணக்கு நூல்களிலும் முழவியல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முழவிற்கும் நந்திதேவருக்கும் உள்ள தொடர்பினை சாத்தனார் குறிப்பிடுமிடத்து,

**"பேரிகைமுதல் பெரும்பறை வரை**
**இறுதியான**
**தோற்கருவிகளின் இயல்புரைத்தவனும்**
**அவற்றைச் செய்தவனும் நந்தி"**
**"நந்தியே முழவினை முழைத்தானே**
**இவையெலா நந்தியன்றின னென்ப"**

- கூத்தநூல்

ஈழத்தமிழர்கள் மத்தியில் பறை, தப்பட்டை, உடுக்கை, தவில், மிருதங்கம், கஞ்சிரா, டோல்கி, தபேலா போன்றனவும், மலையகத்தில் தப்பு வாத்தியமும், சிங்கள மக்களால் கட்டபெறய, ஜக்பெறய, தௌல, றபான போன்ற வாத்தியங்களும் கையாளப் படுகின்றன.

பேரிகையே பேரி என்றும் அழைக்கப்படுகின்றது. இராமாயணத்தில் போர்ப் பறை எனவும் அழைக்கப் பட்டுள்ளது. ஆனால் தேவமங்கள பேரிகை, இராஜமங்கள பேரிகை, அமங்கல பேரிகைக்கான வேறுபாடுகளை உபநிடதங்கள் வகைப்படுத்தியுள்ளன. அத்தோடு கொடியேற்றத்தின்போது மேளம் அடித்து ஆரம்பிக்கும் முறையை **"பேரிதாடனம்"** என்று மஹோற்சவ பத்ததி கூறுகின்றது.

சுவாமி வீதிவலம் வரும்போது இவ்வாத்தியத்தையும், வாசிப்பவரையும் இடபவாகனத்தில் ஏற்றி சுவாமிக்கு முன் கொண்டு செல்ல அவர் வாத்தியத்தை முழக்கி இறைவன் வரும் செய்தியை மக்களுக்கு அறிவிப்பாராம். யுத்தத்தில் பயன்படுத்தப்படும் பேரிகை **'ரணபேரி'** என அழைக்கப்பட்டிருக்கின்றது.

பேரிகை பகைவர்களை நடுங்க வைக்கும் ஓசை உடையது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்க்கு நல்லாரால் வன்மைக் கருவி எனவும், தலைக் கருவி, அகமுழவு எனவும் அழைக்கப்படும். இவ் வாத்தியத்தின் பெருமையினை **"ஜெய பேரிகை கொட்டடா..."** என பாரதியார் சிறப்பிப்பதையும் காணலாம்.

செம்பு, பித்தளை, இரும்புத் தகடுகளால் இணைத்து உத்தமமான பசுவின் தோலினால் பரப்பி இரண்டு தொடக்கம் மூன்று அடி விட்டமுள்ளதான பெருவாத்தியம் பேரிகை (தமிழர் முழவியல் - 129) அத்தோடு கிராமங்களின் காவல் தளங்களில் வைத்து காவலர்கள் திருடர் வரும் சந்தர்ப்பத்தில் ஒலி எழுப்பி ஏனையோரது உதவியுடன் சிறைப்பிடித்தனர் என்றும் ஒரு செய்தி உள்ளது.

**"பேரியாம் முழவொலித்தன"**

*-இராமாயணம்*

**"தழங்கு பேரியெனத் தணித்தேங்குவாள்"**

*- இராமாயணம்*

சூர்ப்பனகை அழுத ஒலி அரக்கர்களுக்கு அழிவுக் காலத்தை அறிவுறுத்த இயமன் முழங்குவித்த பேரியொலி எனவும் குறிபிடப்பட்டுள்ளது.

**"திடுதிடென் றொலித்த பேரிகை"**

*– உதயணகுமார காவியம்*

இவ்வாறான பெருமைகள் பெற்ற பேரிகையின் ஒரு புதிய பரிமாணம் எமது நாட்டில், எமது ஊரில் எங்கும் இல்லாதவாறான பிரமாண்ட உருவத் துடனும், ஓசையுடனும் கூடிய அந்த **'ஈழப்பெரும் பேரிகை'** என்ற பெயரையுடைய பொக்கிஷம் உருவாகி இருக்கின்றது.

காரைநகர் மணற்காடு கும்ப நாயகி முத்துமாரி அம்மன் ஆலய பன்னிரண்டாம் திருவிழா உபயகாரர் கலைஞர் சின்னையா சோமசேகரம் பிள்ளை அவர்களின் சிந்தனையில் தோன்றிய ஒன்றே ஈழப் பெரும் பேரிகை. தன் சொந்தப் பணத்தில் (ஏறத்தாள 100,000/= ரூபா செலவில்) தானே தனது இளைய புத்திரனின் உதவியுடன் தனது தொழிலகத்திலேயே இரவு பகலாக வேலை செய்து ஐந்து அடி விட்டமும், நான்கரை அடி உயரமும் கொண்ட உருக்கினாலான உலோகப் பீப்பாயைத் தயாரித்தார். இசைசார், இசைக்கருவிசார் நுட்பங்கள் சம்மந்தமாக **'முழவியல் ஞாயிறு'** மா. சிதம்பரநாதன் அவர்களது ஆலோசனைகளுடனும், இது சம்பந்த மான நிர்வாக மற்றும் வெளிக்கள வேலைகளில் தனது சேவையை அர்ப்பணித்த சமூகசேவகர் திரு. கதிரமலை ஜெகதீசன் அவர்களது துணையுடனும், இணைந்து தோல் வேலையினை பிரபல மிருதங்கத் தொழிலாளர் திரு. இந்திரன் அவர்கள் மூலமும் செய்து கும்பநாயகியின் திருவருள் கைகூட காரையிற் பிறந்தது ஈழப்பெரும் பேரிகை.

அடியேனின் தலைமையிலும், திரு. மி. புருஷோத்தமன் அவர்களின் நெறிப்படுத்தலிலும் இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு கொம்புகள், சங்குகள், தப்புகள், இடைத்தாளம் சகிதம் பிரமஸ்ரீ மேருகிரீஷ்வரக் குருக்கள் தலைமையில் புண்ணிய வாசக சடங்கு நிறைவேற்றப்பட்டு வேட்டை உற்சவத்தில் சந்நிதிகள் தோறும் பேரிகை அணி இசை முழங்கத் தொடங்கியிருக்கிறது.

இறைவி வேட்டையாடுவதை மிகைப்படுத்திய இவ்வாத்திய முழக்கம் பல கிலோ மீற்றர் தூரங்களிற்கு அப்பால் கேட்டதோடு பலராலும் நீண்ட நாட்களாகப் பேசப்பட்ட இவ்வாத்தியத்தை பல உள்ளூர், வெளியூர் தமிழ், சிங்கள கலைஞர்களும், ஆங்கிலேயர்களும் பார்வையிட்டு புகைப்படம் எடுத்து தங்கள் முகப்புத்தகங்களில் அதனைப் பிரசுரித்து பாராட்டியுள்ளனர். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதத்தில் வரும் வேட்டைத் திருவிழாக்களில் மட்டும் ஈழப்பெரும் பேரிகை முழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் காவலர் கந்தப்பு நடராஜா


காரைநகர் களபூமியில் வசித்து வருகின்ற கந்தப்பு நடராஜா அவர்கள் தமிழர் வாழ்வியலின் தனித்துவமான தொரு பாதுகாவலனாகத் திகழ்கின்றார். பாரம்பரியமான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் தமது முன்னோர் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வந்த பொருட்களைப் மிகவும் பக்குவமாகப் பாதுகாத்து வருகின்றார். ஆவை இன்றைய சந்ததியினருக்கும், இனிவரும் தலைமுறையினருக்கும் தமிழர்தம் வாழ்வையும் பண்பாட்டையும் இலகுவில் உணர்த்தும் அரும் பொக்கிசங்களாகத் திகழ்கின்றன.

1935 ஆம் ஆண்டு மாதம் ஆம் திகதி பிறந்த இவர் தனது கல்வியை எஸ்.எஸ்.சி எனக் குறிப்பிடப்படும் சாதாரண தரம் வரை காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் கற்றார். கற்கும்போதே விவசாயத்திலும் ஈடுபட்டுவந்த இவர் பின்னர் முழுநேர விவசாயியாக இன்றுவரை இயங்கு கின்றார்.

பாரம்பரியமான மரத் தளபாடங் கள், பெட்டகங்கள், கட்டில், பித்தளைப் பொருட்கள், விவசாயத்திற்குப் பயன் படுத்திய பல்வேறு வகையான கலப்பைகள் உள்ளிட்ட உபகரணங்கள், கடகம், பெட்டிகள், அரை நூற்றாண்டுக்கு முன்னர் வெளிவந்த நூல்கள், நாணயங்கள் என எண்ணிடலங்காத பண்டைய பொருட்கள் இவரின் சேகரிப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலைமறை காயாக இருந்து வந்த இவ் வரலாற்றின் காவலர் இன்று ஊடகங்களால் இனங்காணப்பட்டு உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். இவரின் செவ்வி இவ்வருடம் நவம்பர் 26 ஆம் திகதிய புதுவிதி பத்திரிகையில் வெளிவந்ததுடன், IBC தொலைக்காட்சி, உதையன் பத்திரிகை ஆகியவற்றினாலும் இவர் பேட்டி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரால் பாதுகாக்கப்படும் பொருட்களைப் பற்றிய ஆவண நூல் ஒன்று 'வரலாற்றின் பாதுகாவலர்கள்' என்ற பெயரில் காரைநகர் பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை மிக்க பிரபு சு. இராசசேகரம்

உ.இ.ம. இளவரசர் இராஜசேகரம்



சுப்பிரமணியம் அன்னமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனாக 07.08.1928 இல் இவர் தோன்றினார். ஆரம்பத்தில் சுப்பிரமணிய வித்தியா சாலையில் தமிழ் முலம் கற்று 1943 இல் சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் ஆங்கிலக் கல்வியை இந்துக் கல்லூரியில் கற்று 1950 இல் S.S.C சித்தியடைந்தார். இளம் பராயத்திலேயே விவேகம், விடாமுயற்சி, நற்சிந்தனை, மருத்துவத்தில் நாட்டம் உள்ளவராகத் திகழ்ந்தார். சிறுவயதில் இருந்தே தந்தையாருக்கு மருத்துவப் பணியில் உதவி புரிந்தும் வந்தார். தந்தையாரிடம் மருத்துவம் கற்று, நன்கு தேர்ச்சி பெற்று மருத்துவப் பணியில் தாமும் ஈடுபட்டார். தங்கள் குடும்பத்தின் ஏனைய மருத்துவர்களிடமிருந்த ஏடுகளை யும் தமிழ், ஆங்கில மருத்துவ நூல்களையும் ஆராய்ந்து தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார். ஹோமியோபதி மருத்துவ முறையையும் கற்றுப் பட்டம் பெற்றார்.

தாய் மாமன் வெற்றிவேலு கந்தையாவின் மகள் சிவபாக்கியத்தை குலச்சிறப்புகளுடன் சைவ முறைப்படி 1956 இல் திருமணஞ் செய்தார். அவரின் பாரியார் மிகக் குறுகிய காலத்திலேயே கணவரிடம் மருத்துவம் கற்றும், பழகியும் கணவருக்கு உதவியாளராகவும், அவர் இல்லாத நேரத்தில் மருத்துவப் பணியும் புரிந்து வந்தார். இராசசேகரம் தமது அன்பினாலும் பண்பினாலும் மக்கள் அனைவரினதும் நம்பிக்கையையும், நன் மதிப்பையும் பெற்றார். 'தமது மருத்துவ திறமையாலும், பண்டிதத்தினாலும், சித்தி யாலும் தன் காலத்தில் குலச்சிறப்பையும் குடும்ப மதிப்பையும் மேலோங்கச் செய்தார்.' என வித்துவான் சைவமணி மு.சபாரத்தினம் குறிப்பிட்டுள்ளார். இவர் தமது ஆளுமையாலும், இராசப்பிரபுத்துவ தன்மையினாலும் காரைநகரின் முடிசூடா மன்னனாக மக்களால் மதித்துப் போற்றப் பட்டவர்.

*சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலையும்*
*கந்தம் குறைவு படா*

என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர்.

யாழ்ப்பாண குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து நோயாளர்கள் இவரை தேடி காரைநகர் வந்தனர். இவர் ஒரு சிறந்த மனிதநேயமிக்க சான்றோன். சமய, சமூக, சமுதாய, அரசியல் பணிகளில் முன்னின்று உழைத்தவர். அரசியல் தலைவர்கள் இவரின் புகழால் கவரப்பட்டு இவரின் உதவி நாடி வந்தனர். இவரின் சேவைகளைப் பாராட்டி அரசினர் 1966 ஆம் ஆண்டு சமாதான நீதவான் பட்டம் வழங்கி கௌரவித் தனர். அந்தப் பட்டத்தினால் இராசசேகரத் திற்குப் புகழ் சேரவில்லை. மாறாக இராசசேகரத்தைச் சேர்ந்ததால் அப்பட்டம் பெருமை அடைந்தது. ஆகில இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்த வைத்திய சங்கம் இவரை செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்தது. கிராம முன்னேற்ற சங்கத் தலைவராகவும் கிராம மக்களால் தெரிவுசெய்யப்பட்டார். கிராம சபைத் துணைத் தலைவராகவும், ஈழத்து சிதம்பர அன்னதானசபை, நல்லிணக்க சபை, மாணிக்கவாசகர் சபை, சைவ மகா சபை ஆகியவற்றில் உறுப்பினராகவும் இருந்து பெரும் பங்களிப்பு செய்தார். இவர் பங்குபற்றாத சபைகள், சங்கங்கள் இல்லை எனலாம். 1969 இல் இவரை விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளராக அரசு நியமித்தது. தமது சிறந்த சேவையால் மாவட்டப் பதிவாளரின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டார். இராசப் பிரபுக்கள் குலத்தில் பிறந்தாலும் அடக்கம், புன்சிரிப்பு, நீதிபிறழாமை, அன்போடு பழகும் பண்புகளை கொண்டிருந்தவர். அவருடைய பூபதி வாசா இல்லம் எல்லோருக்கும் ஆதரவழிக்கும் இடமாக சிவன் கோவில் வீதியில் அமைந்திருந்தது. அவருடைய வைத்திய நிலையம், தங்கோடை ஆலடிச் சந்தியில் அமைந்திருந்தது. பணம் கொண்டு வந்தாலும் கொண்டு வராவிட்டாலும், மருந்தின் பெறுமதிக்கு குறைவாக இருந்தாலும் பணத்தை பாராது மனித உயிரின் மான்பினை மதித்து சேவை யாற்றிய வள்ளல். அவருக்கு அன்னபூபதி, இராசபூபதி, ஞானபூபதி, இரத்தினபூபதி, இராசதுரை, சித்திராபூபதி ஆகிய பிள்ளைகள் பிறந்தனர்.

"தமிழினத்தின் இழிநிலை கண்டு அதனைப் போக்குவதில் ஆர்வத்துடனும் துடிப்புடனும் தமிழினத்தின் விடுதலைக்கு உழைத்த வீரராக விளங்கியவர்" என்று முன்னைநாள் எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ அ. அமிர்தலிங்கம் (பா.உ) அவர்கள் இவரைப்பற்றிக் குறிப்பிட்டு உள்ளார். திரு. தா. திருநாவுக்கரசு (பா.உ) "மக்கள் சேவையே மகேசன் சேவையாக வாழ்ந்த உத்தமன்" என வியந்துள்ளார்.

இலவசமாக தன் செலவில் சமாதான நீதவான், பதிவாளருக்குரிய பணிகளை தானாகச் சென்று சேவையாகப் புரிந்தவர். இவ்வாறு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த செம்மலின் துணைவியார் 1979 இல் அமரருலகு சென்றார். பேடையிழந்த அன்றிலைப்போல வாடிய பெருந்தகை நோய்வாய்ப்பட்டு 30.01.1980 இல் வானுலகம் சென்றார். இலட்சிய சுடர் அணைந்தது. அன்னாரின் அன்புத் தம்பி குலசேகரமும் குடும்பமும் ஆற்றொணாத் துயரில் தவித்துக் கலங்கிய இராசசேகரத்தின் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ஆறுதல் கூறியும், அன்பு காட்டியும், தென்பு ஊட்டியும் உறுதுணையாக இருந்தனர். தற்பொழுது இவரது மகன் இராசதுரை அவர்கள் கிராம சேவையாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

நன்றி : இராசசேகரம்

இராசசேகரம் அவர்களால் வைத்தியத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணபடன வித்தகர் வேலுப்பிள்ளை நடராஜா



காரைநகர் வளுப்போடை என்னும் கிராமத்தில் 03.03.1941 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை கரைநகர் மணிவாசக வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையிலும், இந்துக் கல்லூரியிலும் பயின்றார். பாடசாலை பருவத்திலேயே பேச்சு, நாடகம், கதாப் பிரசங்கம் ஆகியனவற்றில் சிறந்து விளங்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார். இளமைப் பருவத்தில் சமூக நாடகங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்து பாராட்டு தல்களைப் பெற்றுக் கொண்டார். விவசாயத் திலும் சமய மேம்பாட்டிலும் ஊக்கமுடன் செயற்பட்டு வந்தார். இவருடைய சமய, கலை, இலக்கிய, பேச்சு, பயன் சொல்லுதல், பிரசங்கம் ஆகியவற்றின் சிறப்பைப் பாராட்டி பலரும் பல்வேறு பட்டங்களை வழங்கியுள்ளார்கள்.

அந்தவகையில் வவுனியா சேக்கிழார் மன்றம் "புராண படன விரிவுரைச் செம்மல்" என்ற பட்டத்தினையும், கச்சியப்பர் கழகம் "புராணபடன வித்தகர்" என்ற பட்டத்தினை யும், மெய்கண்டார் ஆதினம் "சித்தாந்த சிவ வித்தகர்" என்ற பட்டத்தினையும், திக்கரை சுப்பிரமணிய தேவஸ்தானம் "சிவஞானசுடர்" என்ற பட்டத்தினையும், காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை "கலைஞானச்சுடர்" என்ற பட்டத்தினையும், கரப்பிட்டியந்தனை விநாயகர் தேவஸ்தானம் 'சிவத்தொண்டன்' என்ற பட்டத்தினையும், தன்னை பிள்ளையார் தேவஸ்தானம் 'சிவஞானச் செல்வர்' என்ற பட்டத்தினையும், போசுட்டி ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தானம் 'உரைஞான சுரபி' என்ற பட்டத்தினையும் வழங்கியுள்ளனர். இன்னும் சிறப்பாக இந்தியா திருவாவடுதுறை ஆதீனத்தில் இவரைப் பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கிக் கௌரவித் தனர். அத்துடன் பாலாவோடை அம்மன் ஆலயத்தில் தங்கப் பதக்கம் வழங்கி இவரைப் பாராட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பல இலங்கைக் கோவில்களில் இவரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளமையும் குறிப்பிட த்தக்கது. இவருக்கு 29.12.2014 அன்று காரைநகர் கலாசாரப் பேரவை 'கலைஞானச் சுடர்' என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் 2016 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப் படும் உயர் விருதுகளில் ஒன்றான கலாபூசணம் அரச விருது வழங்கி கலாசார அலுவல்கள் அமைச்சினால் இவர் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைநாதன் சண்முகசுந்தரம்



திரு தில்லைநாதன் சண்முகசுந்தரம் அவர்கள் காரைநகர் தங்கோடையில் 01.02.1952 இல் பிறந்தார். க.பொ.த சாதாரண தரம் வரை பயின்று பின் 1975 ஆம் ஆண்டு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா இரு வருடங்கள் பயின்றார். இவர் கிராம சேவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

இளமையில் இருந்தே இசைத் துறையில் நாட்டமுடையவராக விளங்கிய இவர் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த தனது மாமனார் வே. அம்பலவாணரிடம் மிருதங்கக் கலை பயின்று 1969 ஆம் ஆண்டு வாரிவளவு கற்பக விநாயகர் கோவிலில் அரங்கேற்றம் செய்தார். தெய்வீக இசையில் மிகுந்த நாட்டங் கொண்டதனால் சங்கீதபூஷணம் கணபதிப் பிள்ளை அவர்களது கச்சேரிகளிலும், வேறுபல இசைக் கச்சேரிகளிலும், ஆலய விழாக்கள், பாடசாலை விழாக்கள், அரங்கேற்றங்களில் மிருதங்கம், கெஞ்சிரா ஆகிய வாத்தியங்களை வாசித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசை நிகழ்ச்சிகளிலும் 1983, 1985 காலப்பகுதியில் மிருதங்கம் வாசித்துள்ளார். மேலும் நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தால் வருடா வருடம் நடாத்தப் படும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சி களில் இற்றை வரை மிருதங்கம் வாசித்து வருகின்றார்.

இவரது கலைச் சேவையைப் பாராட்டி ஊர்காவற்றுறை கலாசாரப் பேரவையால் 2002.05.04 அன்று நடாத்தப்பட்ட மூத்த கலைஞர் கௌவரிப்பு விழாவில் "கலாஞான வித்தகர்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், 2010.11.04 அன்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசாரப் பேரவையால் இசைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக "கலைச்சுடர்" எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் உயர் விருதுகளில் ஒன்றான கலாபூசண அரச விருது வழங்கி கலாசார அலுவல்கள் அமைச்சினால் இவர் கௌரவிக்கப்பட்டார்

வடக்கு மாகாண பண்பாட் டலுவல்கள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் நடாத்தப்பட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் வைத்து வட மாகாண முதலமைச்சர் திரு C. V. விக்னேஸ்வரன் அவர்களின் கரங்க ளால் முதலமைச்சர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் இற்றை வரை தமது சேவையினை கலை உலகிற்கு மிகவும் உற்சாகத்துடன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலைஞர் கணவதி பரமசாமி



காரைநகர் சடையாளியில் வசித்து வருகின்ற நாடகக் கலைஞர் கணவதி பரமசாமி அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி கொழும்புத்துறையிலே பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும், உயர் கல்வியை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார்.

1973 ஆம் ஆண்டிலிருந்து விவசாயத் திணைக்களத்தில் சாரதியாக இணைந்துகொண்ட இவர் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் கடமையாற்றியுள்ளார்.

தனது கலை வாழ்வில் ஏறக்குறைய பத்து நாடகங்களுக்கு மேல் நடித்துள்ள இவர், அவற்றுள் மிகவும் புகழ்பெற்றவையாக வெளிக்கிடடி விசுவமடுவுக்கு, சுழலும் சுந்தரி, உடையாரின் உபத்திரவம், கந்தற்றை வெருளி ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கூறுகின்றார்.

இவற்றில் வெளிக்கிடடி விசுவமடுவுக்கு என்ற நாடகம் இலங்கை முழுவதும் பல மேடைகளைக் கண்டதாகவும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றி அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் கரங்களால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதாகவும், இந்நாடகத்தின் இறுதி அரங்கேற்றம் 1984 ஆம் ஆண்டு மன்னார் அடம்பனில் இடம்பெற்றதாகவும், அங்கு தங்கப்பதக்கம் வழங்கித் தாம் பாராட்டப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிலாயபிள்ளை திருச்செல்வம்



கயிலாயபிள்ளை திருச்செல்வம் அவர்கள் 05.05.1947 அன்று சடையாளி காரைநகரில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சடையாளி அ.மி.த.க பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பாடசாலையில் படிக்கும்போதே பாடல்களைப் பாடியும் நடித்தும் தனது திறமையை வெளிக்காட்டியுள்ளார். கற்பகப் பிள்ளையார் வில்லிசைக் குழுவினருடன் இணைந்து வில்லுப்பாட்டுக்களையும் நடத்தியுள்ளார். கோவில் பஜனைகளிலும் பண்ணிசை பக்திப்பாடல்களை இசைப்பதிலும் இன்று வரை சோர்வின்றி ஈடுபட்டு வருகின்றார்.

இவரது சேவையைப் பாராட்டி காரைநகர் அத்திபுரம் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் 2012 ஆம் ஆண்டு "பத்திப்பாவேந்தன்" எனும் பட்டம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2016.09.04 அன்று இவ் ஆலய பயனைக் குழுவினராலும் இவர் கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கு 29.12.2014 இல் காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை 'கலைஞானச்சுடர்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தொழிநுட்பக் கல்வியும் வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக்கழகமும்

*வே. கலாவதி, திறன்கள் அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம், காரைநகர்.*

இலங்கையில் தொழிநுட்பக் கல்வியானது 1893ஆம் ஆண்டு மருதானையில் தொழிநுட்ப பாடசாலையினை உருவாக்கியதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தொழிற் கல்வியானது 1991ஆம் ஆண்டு மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவின் (Tertiary and vocational Education Commission -TVEC) உருவாக்கத்துடன் முக்கியத்துவம் பெற்றது. மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழு பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும்.

1) தொழிநுட்ப வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் திட்டமிடல்
2) தேசிய தொழில் தகமை வலையமைப்பை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
3) பயிற்சி நிறுவனங்களில் கல்விசார் விடயங்கள் மற்றும் திறன் நியமங்கள் ஆகியவற்றை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்

இவ் ஆணைக்குழுவின் உருவாக்கத்தின் பின்னர் தொழிற் கல்வியில் தேசிய தொழில் தகைமை முறைமை (National Vocational Qualification-NVQ) அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய தொழில் தகைமையானது பின்வரும் செயற்பாட்டின் பின்னரே வழங்கப்பட முடியும்.

**1) *பதிவு செய்தல்*** (Centre Registration)

தேசிய தொழில் தகைமை முறைமையின் கீழ் தொழிற் பயிற்சியை வழங்கும் நிறுவனங்கள் தம்மை மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக் குழுவின் கீழ் பதிவு செய்தல் வேண்டும். இதன் மூலம் தொழிற் பயிற்சியை வழங்குவதற்கான சட்ட ரீதியான அங்கீகாரத்தை குறித்த நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன. இவ்வாறு மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழானது அனைவரது பார்வைக்காகவும் காட்சிப்படுத்தப்பட வேண்டும். இப் பதிவுச் சான்றிதழில் மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் பயிற்சி வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பாடநெறிகளை பார்வையிட முடியும்.

**2) *சான்றுப்படுத்தல்*** (Course accreditation)

பதிவுச் சான்றிதழில் உள்ள பாடநெறிகளுக்கு சான்றுப்படுத்தலை மேற்கொள்ள உரிய நிறுவனங்கள் விண்ணப்பிக்க முடியும்.

**3) *தேசிய தொழில் தகைமை சான்றிதழ்*** (National Vocational Qualification-NVQ)

சான்றுப்படுத்தலைப் பெற்றுக் கொண்ட பாடநெறிகளை பின்பற்றும் மாணவர்கள் தகுதி வாய்ந்த மதிப்பீட்டாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். ஆகவே தேசிய தொழில் தகைமை சான்றிதழை வழங்குவதற்கு நிறுவனத்தின் பதிவும், பாடநெறிகளின் சான்றுப்படுத்தலும் அவசியமானதாகும். தேசிய தொழில் தகைமைச் சான்றிதழானது 7 மட்டங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சான்றிதழ் கற்கைநெறி

1 தொடக்கம் 4 வரையான மட்டங்கள் சான்றிதழ் கற்கைநெறி ஆகவும் இதனை அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களிலுள்ள சான்றுப்படுத்திய கற்கை நெறிகளை பின்பற்றுவதன் மூலமும், ஏற்கனவே தொழில் செய்பவர்கள் முன்னறிவை இனங்காணல் (Recognition of prior learning - RPL) முறையிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

### டிப்ளோமா கற்கைநெறி

5 மற்றும் 6 ஆவது மட்டங்கள் டிப்ளோமா கற்கைநெறியாகவும் இதனை தொழிநுட்பவியல் கல்லூரிகளிலும், பல் கலைக்கழகக் கல்லூரிகளிலும், இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனங் களிலும் (Srilanka German Training Institute) பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

### பட்டக் கற்கைநெறி

7 ஆவது மட்டம் பட்டக் கற்கை நெறியாக காணப்படுகின்றது. இதனை வழங்கும் ஒரே ஒரு நிறுவனமாக வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் (UNIVOTECH) காணப்படுகின்றது.

வாழ்க்கைத் தொழிநுட்பப் பல் கலைக்கழகமானது மகிந்த சிந்தனையில் உதித்து 2008ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட 31வது இலக்க சட்டம் மூலம் அனுமதி வழங்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபஹ்சவினால் இலக்கம் 100, கந்தவல வீதி, இரத்மலானை என்ற முகவரியில் திறந்து வைக்கப்பட்டது. வாழ்க்கைத் தொழிநுட் பப் பல்கலைக்கழகத்தில் இரு பீடங்கள் காணப்படுகின்றன.

1) Faculty of Training Technology

2) Faculty of Industrial & Vocational Technology

Faculty of Training Technology பின்வரும் துறைகளில் தொழிநுட்ப இளமாணிப் பட்டத்தை (B.Tech) வழங்குகின்றது.

1) Education in Technology

2) Education in English language Technology

3) Multimedia & Web Technology

4) Net work Technology

5) Software Technology

6) Industrial Management Technology

Faculty of Industrial & Vocational Technology பின்வரும் துறைகளில் தொழிநுட்ப இளமாணிப் பட்டத்தை வழங்குகின்றது.

1) Building Service Technology

2) Manufacturing Technology

3) Mechatronic Technology

4) Food progress Technology

5) Films &Television Production Technology

6) Quantity Surveying

7) Construction Technology ,Recourse management

வாழ்க்கைத் தொழிநுட்பப் பல் கலைக்கழகத்தில் 2012ஆம் ஆண்டு யூலை 17ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபஹ்சவின் தலைமையில் நடைபெற்ற வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கல்வி தொழிநுட்பத் துறையில் தொழிநுட்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமாணி (B.Tech) பட்டத்தை 28 பேர் பெற்றுக்கொண்டனர்.

தேசிய தொழில் தகைமை சான்றிதழின் 7 வது மட்டத்திற்கான கற்கை நெறிகளை வழங்கும் நிறுவன மாக வாழ்க்கைத் தொழிநுட்பப் பல் கலைக்கழகம் காணப்படுவதால் நவீன உலகின் மாற்றத்திற்கேற்ப தொழிநுட்பத் துறையை வளர்க்கும் நோக்கில் தொழிநுட்பத்துறை சார்ந்த ஆசிரியர் களுக்கான பயிற்சி நெறிகளையும் காலத்திற்குக் காலம் வழங்கிவருகின்றது.

வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பல்கலைகழக கல்லூரிகள் (University colleges) செயற்படுகின்றன.

இப் பல்கலைக்கழக கல்லூரிகள் இலங்கையில் 25 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும் தற்போது இரத்மலானை, யாழ்ப்பாணம், குளியாப்பிட்டிய (குருநாகல்), அநுராத புரம், மாத்தளை, பற்றங்கல (இரத்தினபுரி) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் 23 டிப்ளோமா கற்கை நெறிகள் (மட்டம் 5/6) கற்பிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியில் பின்வரும் கற்கைநெறிகள் காணப்படுகின்றன.

1) Hospitality Management
2) Cosmetology
3) Farm Machinery Technology
4) Building service Technology
5) Construction Technology
6) Mechatronics Technology
7) Production Technology
8) Food Technology

மேற்படி பல்கலைக்கழக கல்லூரிகளில் NVQ மட்டம் 6 முடித்தவர்கள் 7 ஆவது மட்டத்தை வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு தொழில்நுட்பத் துறையில் இளமாணிப் பட்டத்தை (B.Tech) பெற்றுக்கொள்ள முடியும்.

தொழிநுட்பக் கல்வியின் முக்கிய த்துவம் காரணமாக 2013ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பிரிவில் தொழிநுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முதற் தொகுதி மாணவர்கள் 2015ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்கள் இலங்கையிலுள்ள 13 பல்கலைக் கழகங்களில் 28 தொழிநுட்பப் பிரிவுகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர். இதற்காக நாட்டிலுள்ள பல் கலைக்கழகங்களில் உள்ள விஞ்ஞான பீடங்கள் விஞ்ஞான தொழிநுட்ப பீடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

உலகமயமாக்கலின் காரணமாக தொழிற் சந்தைகளின் கேள்வியும் தொழிநுட்பத் துறை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இலங்கையிலும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்விச் சட்டம் 1990ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுடன் அதனுடன் இணை ந்ததாக மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் {TVEC} உருவாக்கமும் காணப்படுகின்றது. நாட்டின் தொழிற் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள இம்மாற்றத்தின் காரணமாக பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாதவர்களும் வாழ்க்கைத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கை நெறிகளை பின்பற்றுவதன் மூலம் தமது தொழில் வாய்ப்புக்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுக் கொள்ள முடியும். இதன் காரணமாக தொழிலற்றவர்களின் எண்ணிக்கை குறை வடைவதுடன் நாட்டின் ஊழியப் படையும் அதிகரிக்க சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. ஆகவே மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்ததும் தமது எதிர் காலத்தைச் சுபீட்சப்படுத்தும் வகையில் வாழ்க்கைத் தொழிநுட்பப் பல்கலைக் கழகத்தில் கற்கை நெறிகளை மேற்கொள்வது சாலச்சிறந்தது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் சிறக்கட்டும்

கலாபூஷணம் பண்டிதை. செல்வி. யோகலட்சுமி சோமசுந்தரம்
(B.A Dip. in Ed)

கடவுள் சிருஷ்டியில் ஒருவர் போல் மற்றவர் இருப்பது இல்லை. ஐந்து விரல்களும் ஒன்றாக அமைவதும் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் தனி வடிவம் கொடுத்திருக்கின்றான். சிறு வயதில் இருந்தே எமக்குள் உருவான வேண்டுபவை - வேண்டாதவை என்ற இரண்டு குணங்களும் எமது நடை, உடை, பாவனையில் செல்வாக்குச் செலுத்து கின்றன.

எனவே நடை, உடை, பாவனை, பேச்சு, அன்பு, கருணை, அறிவு, ஒழுக்கம், உழைப்பு, மனிதாபிமானம் எல்லாவற்றிலும் ஒருவரிடமிருந்து மற்றவர் வேறுபட்டி ருக்கின்றனர். எனினும் மனதை வளப் படுத்தி, மனப் பக்குவம் பெற்று, மனதை உய்விக்கும் நெறிமுறையைக் கடைப் பிடித்தால் ஒவ்வொருவரும் உன்னத வாழ்வு பெற வழி உண்டு.

தள்ளா விளையுளும், தாக்காரும், தாழ்விலாச் செல்வமும் நிறைந்தது நம் புண்ணிய பூமி. இம் மண்ணின் பெருமைக்கேற்ப நம் முன்னோர்கள் ஒப்பற்ற உன்னத வாழ்க்கையை வாழ்ந்து காட்டினர். அவர்கள் வாழ்ந்து காட்டிய பண்பாடு காலங்காலமாக ஓடி வரும் வற்றாக ஜீவநதி. அதை நாம் உபயோகித்துப் பயனடைய வேண்டியது நம் கடமை அல்லவா?

பிறருடன் பேசும் போதும், பழகும் போதும் மற்றவர்களுடைய சுய கௌரவத்திற்குப் பங்கம் வரும்படி பேசுதல் அவர்களுக்கு வருத்தம் ஏற்படக் காரணமாகின்றது. எனவே பிறருக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது குறைகளை மிகைப்படுத்தாமல் அவர்களது நல்ல குணங்களைப் பாராட்டிப் பேசிப் பழகுவதே வாழ்க்கையில் வெற்றி காண்பதற்குரிய சிறந்த வழி. எம்மவர் இதனைச் சிந்தித்துச் செயற்பட்டால் எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத் தைக் காண முடியும் என்பதில் ஐயமில்லை.

உறவுகளுக்குப் புனிதத் தன்மை தந்து கூட்டுக் குடும்பமாக, மகிழ்ச்சியாக, பண்பாடு, கலாசாரத்தைப் போற்றி வாழ்ந்த நம் சமுதாயத்தில் இன்று அன்பைக் காண்பது அரிதாகிவிட்டது. உதட்டளவில், வியாபார நிமித்தம் ஏற்படும் உறவு போல போலி உறவே கோலோச்சுகிறது.

நாட்டடில் ஒற்றுமை இல்லை. அமைதி இல்லை. எத்தனை பேருடன் நட்பை வைத்துக் கொள்கிறோம் என்பது முக்கியம் அல்ல. அந்த நட்பை எவ்வாறு காப்பாற்றிக் கொள்கின்றோம் என்பதுவே முக்கியம்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா"

மனித வாழ்க்கை இனிமையான வீணை போன்றது. வீணையை முறையாக இசைத்தால்தான் இன்பம் பெற முடியும். இயற்கையிலும், செயற்கையிலும், வாழ்வி லும் எவ்வளவோ புரிந்து கொள்ள முடியாத புதிர்கள் இருக்கின்றன. மனிதனுக்குரிய குணங்கள் மூன்று, அவை, சாத்துவம், ரஜோ, தமோ என்பன அதற்கேற்ப ஒவ்வொருவரதும், மனப் பான்மை அமைகின்றது. மனப்பான் மையைப் பொறுத்து அனுஷ்டானங்களும் கோட்பாடுகளும் வேறுபடுகின்றன.

குடும்பங்களிலும், அலுவலகங் களிலும், சமூகங்களிலும், சவால்கள், பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றை எதிர்நோக்கிப் போராடும்போது உறவுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிசல்கள் ஏற்படுகின்றன. குடும்ப அமைதி குறைகின்றது. சமுதாய ஒற்றுமை சிதறிப் போகின்றது. நமது திறமை நமது செயலின் மூலம் வெளிப்படும்.

நமது முன்னோர் பேணிப் பாதுகாத்த பண்பாடு அடியோடு மறைந்து போய்விட்டது. "பண்பாடு" என்றால் என்ன? என்று கேட்கும் நிலை உருவாகி விட்டது. உள்ளத்தால், பண்பாட்டால், உற்றதொரு நல்லுணர்வால், அணைத்தொழுகும் அன்பு நலத்தால் சமுதாயம் வளர்ந்துள்ளதா? மனித உள்ளுணர்வுகளும் புற நிகழ்வுகளும் ஒன்றிச் செல்ல வேண்டிய நிலையில் சமூகம் எங்கே செல்கின்றது?

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த மக்கள் அலகலகாகப் பிரிந்து பல இடங்களிலும் சிதறி வாழத் தலைப்பட்டு விட்டார்கள். ஒற்றுமை, கூட்டு மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் பண்பு, தியாகம் என்பன இல்லாமல் போய்விட்டது. முகவரியைத் தொலைத்துவிட்டு எங்கோ தேடுகின்றோம். வளர்ச்சி இன்றேல் வாழ்வு இல்லை. எனவே வளர்ச்சி அவசியம். மரம் பருத்தால் கிளைகள் தழைத்தால், பரந்த நிழலில் பலரும் தங்கிச் செல்ல வாய்ப்புண்டு. எனவே சமூகம் வளர்ந்தால் பண்பாடும் வளரும். ஒரு மரத்துக் கிளைகள் போல ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

சமுதாயமோ, சமுதாய வளர்ச்சியோ, அதன் பணியோ எண்ணித் திட்டமிட்டு அமைவன அல்ல. இயற்கைச் சூழலுக்கேற்ப மனிதன் வாழ வேண்டியவனானான். விலங்குகளையும், பறவைகளையும் கண்டு தானும் தன்னை ஒத்தவனோடு கூடிக் குலவ விரும்பிய அவனது உள்ளத்து உணர்வே அவனைச் சேர்ந்து வாழத் தூண்டியது.

செடி, கொடிகள் கூட இணைந்தும், பிணைந்தும் வாழ்கின்றன. எறும்பு, கறையான் முதலிய சிற்றுயிர்களும், பறவைகள், விலங்குகளும் கூடக் கூடி வாழ்கின்றன. ஆனால் மனிதன் தன் அறியாத் தனத்தாலோ, மிடுக்கு நடையாலோ மனம் போன வழியில் செல்லத் தலைப்பட்டுவிட்டான். ஒரு இயந்திரம் பல பகுதிகளைக் கொண்டது. அப் பகுதிகள் யாவும் ஒன்றிணைந்தால் தான் அது செயற்படும். ஒரு சிறிய அச்சாணி கழன்று விடினும் அது செயற்படாது. எனவே எமது சமூகமும் ஒன்றிணைந்தால் தான் எந்தச் செயலையும் சாதிக்க முடியும்.

"எண்ணிய முடிதல் வேண்டும்

நல்லவே எண்ணல் வேண்டும்

திண்ணிய நெஞ்சம் வேண்டும்

தெளிந்த நல்லறிவு வேண்டும்"

- என்றார் பாரதியார் -

சமுதாயத்தில் ஒருவர் மற்றவருக்குச் சார்பாக இருத்தல் அவசியம். இந்தச் சார்பே சமுதாய வாழ்வின் அடிப்படை. அது வளர வளரப் பண்பாடு உயரும். "மனிதனை உயர்த்துவது பணம் அன்று, பதவி அன்று, குலம் அன்று, பருமன் அன்று, உயரம் அன்று, அறிவு ஒன்றுதான்." என்பது கிருபானந்தவாரியார் கூற்று. எனவே ஒருவரின் உள்ளத்தின் உயரம் தான் அவரது உயரம்.

எல்லாம் தெரிந்தவன் என்ற கர்வம் தலைக்கேறும் போது அது உண்மையை மறைத்து விடுகிறது.

"செருக்குற்றோர் சிறுமைப்படுவர்"

எனவே எமது சமுதாயம் இன்பமாக வாழ வேண்டுமானால் பரந்த மனப்பான்மையோடு, பிறர் நலத்தையும் பேணி வாழ வேண்டும். ஒவ்வொருவருக்கும் தான் செய்யும் செயலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. செயலின் வெற்றி தங்கத் தட்டில் வைத்துத் தரப்படுவது அல்ல. நமது உயர்வுக்கும் மேன்மைக்கும் நாமே காரணம். விவேகம், பணிவு, நகைச்சுவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

பேச்சுத்திறன், அன்பு, இரக்கம், மனித நேயம், நாணயம், பொறுப்பு, கடமை உணர்வு என்பன நாம் திறமை பெறத் தேவையான குணங்கள்.

"அல்லவை தேய அறம் பெருகும்"

எண்ணங்கள் தான் வாழ்வை நிர்ணயிக்கின்றன. ஒவ்வொருவரும் தம்மை வளர்த்துக் கொள்வதும், அழித்துக் கொள்வதும் அவரவர் கையில்தான் உண்டு.

"நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"

-என்றார் பாரதியார்.

சாதனைகள் புரியச் சலியாத உழைப்புத் தேவை. எண்ணற்ற புத்தி ஜீவிகள், ஆன்மீக வள்ளல்கள், அருளாளர்கள், வாழ்ந்த புண்ணிய பூமி மட்டும் அன்று கல்வியிலும், செல்வ வளத்திலும், பண்பாட்டிலும் கூட சிறந்த பூமி எங்கள் பூமி.

பண்பாட்டை வளர்க்க எண்ணற்ற மன்றங்கள். சைவ மகாசபை, மணிவாகர் சபை, வாரிவளவு நல்லிணக்க சபை, முத்தமிழ் மன்றங்கள், ஆலயங்கள், கலை மன்றங்கள் என்பன காணப்பட்டன. ஆனால் இன்று நம்மிடையே ஒற்றுமை இல்லை. போட்டியும், பூசலும் குரோத மனப்பான்மையும் தலைவிரித்தாடுகின்றன.

"நாம் அனைவருமே நமக்குள்ளே ஒரு தெய்வீக அக்னியுடன் பிறந்திருக்கின்றோம். இந்த அக்கினியைக் கொழுந்து விட வைத்து, அதன் பொன்னொளியை இந்த உலகத்தில் பரப்புவதற்காக முனைவதே நமது கடமை"

என்றார் . ஏ.பி.ஜே. அப்துல்கலாம் -

"அன்பு மிக்க முகம் தான் அழகான முகம். அன்பு நம்மை சொர்க்கத்தில் சேர்க்கிறது" -என்றார் ரஜனீஸ் -

எனவே அன்பார் உறவுகள் பலமடைய வேண்டும். புறத்தோற்றங்களில் மாற்றங் கண்ட மனிதனால் இயற்கையோடு கலந்து உயிரோட்டத்தை மாற்ற முடியுமா?

"வான் குருவியின் கூடு வல்லரக்கு தொல்
தேன் சிலந்தி யாவர்க்கும் செய்வதரிதாம்"

எனவே புற வாழ்க்கையிலும் வெற்றி பெற்று விட்டோம் என்று கூற முடியுமா? எமது சமுதாயம் மீகாமனில்லாத மரக்கலம் போல திக்குத் திசை தெரியாமல் தடுமாறுகிறது. வழி காட்டும் கலங்கரை விளக்கமும் ஒளி மழுங்கி விட்டது.

உறவுகள் பிறப்பால் தொடரும் உறவுகள், பிணைப்பால் தொடரும் உறவுகள் என இரண்டு வகைப்படும். இரண்டுமே ஆரோக்கியமானதாக இல்லை. பொழுதையும், மனதையும் பகிர்ந்து கொள்வதற்கு பிறப்பிலிருந்து ஏற்படும் துணைதான் பிறப்பில் தொடரும். குகன், விபீஷணன், சுக்கிரீவன் ஆகியோர் இராமனுடன் கூடப் பிறக்காதவர்கள். எனினும் அவர்களைத் தன்னுடைய உடன் பிறப்புக்களாக ஏற்றுக் கொண்டு விட்டார் இராமபிரான்

"பெரியவர் கேண்மை பிறைபோல் நாளும்

வரிசை வரிசையாக நந்தும் - வரிசையால்

வானூர் மதியம் போல் வைகலும் தேயும்

தானே தனியார் தொடர்பு"

- நாலடியார் 125 -

எனவே பிறப்பால் தொடரும் உறவுகளை விட பிணைப்பால் தொடரும் உறவுகள் உன்னதமானவை. ஏற்றத் தாழ்வுகளில், சேர்ந்து விடுகின்ற பந்தத்தில் தான் உண்மையான உறவு இருக்கிறது.

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல

உற்றுழித் தீர்வார் உறவல்லார் -

அக்குளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியும் ஆம்பலும் போலவே

ஒட்டி உறுவார் உறவு"

-ஔவையார்-

எனவே மனித வாழ்க்கை கணிதம் போன்றது. நண்பர்கள் கூட்டப்படுகின்றார்கள். பகைவர்கள் கழிக்கப்படுகின்றார்கள். மகிழ்ச்சி பெருக்கப்படுகின்றது. துயரம் வகுக்கப்படுகின்றது. எனவே கூட்டிக், கழித்துப், பெருக்கி, வகுத்து எமது உறவைப் பலப்படுத்துவோம்.

தனி மனிதனே சமுதாயம், தனி மனிதன் இல்லாமல் சமுதாயம் இல்லை. தனிமனிதனின் செயற்பாடுகள் தான் சமுதாயத்தின் உயர்வுக்கும், மேன்மைக்கும் காரணம். எனவே நாம் ஒவ்வொருவரும் எமது சமுதாய வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுது தான் சிறந்ததொரு சமுதாய அமைப்பை எதிர்கால சந்ததிக்கு எம்மால் உருவாக்கிக் கொடுக்க முடியும்.

**"உறவுகள் சிறக்கட்டும்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணிலும் விதைத்திடலாம்

பொன். சிவாராசசிவம்
பிரதேச கலாசார மத்திய நிலையம், காரைநகர்

அந்தி பகல் பாராது
அயராது பாடுபட்டால்
பார் போற்றும் பூமியிலே
பொன் விளையும் வயல் நிலங்கள்

நெற்றி வியர்வையது
நிலத்தடியில் விழு முன்னே
சுட்டு விரல் மடித்து
வழித்தெறிந்து வீசிடுவான்

கட்டிலில்லை மெத்தையில்லை
கனமான-மண் குந்திருக்கு
ஓலைப் பாய் விரித்தால்
தூக்கத்துக்கும் பஞ்சமில்லை

மண்பானை சட்டியிலே
பழஞ்சோறு பிசைந்துறுட்டி
பச்சை மிளகாயுடன் கடிக்கையிலே
பசி மயக்கம் பறந்தோடும்

பருவ மழை தான் பெய்ய
இதம் பதமாய் நிலம் தட்டி
ஏர் கொண்டு நிலம் பிளந்தால்
செம்மண்ணும் பயன் கொடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் நிலத்தில் பயிர் தடவி
வரும் காற்றை முகர்ந்திடவே
மன நிறைவை பெற்றிடுவான்
மகிழ்ச்சியுடன் விவசாயி

காளையிலே ஏர் பூட்டி
கதிரவனார் தோன்றுமுன்பே
கச்சிதமாய் நிலம் உழுது
காட்சி தரும் எங்கள் வயல்

வடுக்கள் பல சுமந்தபடி
வாழ்வுச் சுமை தீருமென்று
வயல் நிலத்தில் கால் புதைத்தால்
வந்த வினையோடி வசந்தம் பிறந்துவிடும்

அப்பு ஆச்சி காலத்திலே
அத்தனையும் இன்சுவைதான் - கலப்பில்லை
வருத்தம் என்றோ ஒண்டில்லை – அது வந்தால்
மல்லித் தண்ணியும் வேப்பம் பட்டையும் தான் மருந்து

வியர்வை ஒன்றும் நாற்றமல்ல நாற்றமல்ல
அது கூட பொன் முத்து
சிந்தையிலே திடமிருந்து விவசாயி மனம் வைத்தால்
புயல் கூடச் சிதைக்காது விண்ணிலும் விதைத்திடலாம்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட கவிதைப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட மாணவர்களின் படைப்புக்கள்.

## நிலாவின் கவிதை

வானில் விளையாடும் மேகங்களிற்குள்
எட்டிப் பார்த்துக் கண்சிமிட்டும்
வட்ட நிலாவே!

அம்மாவின் நெற்றிப் பொட்டோ நீ?

கவலை போக்கும்
தாயின் ஸ்பரிஸம் போல்
அரவணைக்கின்றாய்
அழகிய நிலாவே!

என்னைப் பார்க்க முற்றம் வந்த
வெண்பனி நிலவே
உன்னைக் கீலமாய்க் கிளித்ததோ
தென்னை இலைக் கீற்று

வட்ட வடிவ அப்பமாய்
மழலைகளின் பசியாற்றும்
பௌர்ணமி நிலவே – உன்னைக்
கருமுகில்கள் மறைப்பதன்
காரணம்தான் என்னவோ?

நட்சத்திரக் கூட்டத்தின்
நடுநயமாய் நீயும்
நாணி வரும் வண்ணமோ?

வட்டமாய் வானில் வலம்வரும் நிலவே
இருளிலே ஒளிதரும் இனிய நன் நிலாவே
முற்றத்தில் நிலாச்சோறும் முத்தான கதை பலவும் - நாம்
செத்தாலும் மறக்காத சேமிப்பு அந் நினைவன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் எண்ணங்கள்:

## தென்றல் காற்று

அழகு அழகாக வீசும் தென்றல் காற்றே
எங்கள் மனதைக் கவர்ந்த தென்றல் காற்றே

பட்டம் விட்டு விளையாட எங்களுக்கு
உறுதுணையாக இருக்கும் தென்றல் காற்றே

நீ அசைந்தால் மரங்கள் அழகு
மரங்கள் அசைந்தால் மனதில் மகிழ்வு

## ரோஜாப் பூ

வண்ண வண்ண ரோஜாவே!
வடிவில் நல்ல ரோஜாவே!

சிறுவர் விரும்பும் ரோஜாவே!
சிவந்த நல்ல ரோஜாவே!

இதம் நிறைந்த ரோஜாவே!
இனிய நல்ல ரோஜாவே!

மனம் கவரும் ரோஜாவே!
மக்கள் விரும்பும் ரோஜாவே!

தலையில் சூடும் ரோஜாவே!
தனித்துவமான மலர் நீயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையின் 2016 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபையினர் விபரம்

தலைவர் : திருமதி தே. பாபு

உப தலைவர் : திரு செ. கந்தசாமி

செயலாளர் : திரு ச. தனுஜன்

உப செயலாளர் : திரு கு. அகிலன்

பொருளாளர் : திருமதி றோ. கலாசத்தி

நிர்வாகசபை உறுப்பினர்கள் : திரு க. திருச்செல்வம்

திரு வே. நடராசா

திரு இ. பேரின்பநாதன்

திரு தி. சோமசுந்தரக்குருக்கள்

திரு மு. மயில்வாகனம்

செல்வி த. நிரஞ்சனா

கணக்காய்வாளர் : திரு இ. திருப்புகழூர்சிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org